


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 178 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 25 – வியாழக்கிழமை 08 பிப்ரவரி 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 178 : Thiruvalluvar Year - 2055 - Thai 25 - Thursday 08 February 2024 - Chennai 16 Pages ₹ 5.00


# பயணம் வென்றது! களமும் வெல்லட்டும்!



## உங்களில் ஒருவன்

**என் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

மேகங்களின் மீது மிதப்பது போன்ற உணர்வுடன், வானில் பறக்கின்ற விமானத்திலிருந்து இந்தக் கடிதத்தை எழுதத் தொடங்குகிறேன். ஸ்பெயின் நாட்டுப் பயணத்தை நிறைவு செய்து, நெஞ்சத்தில் தேங்கியிருக்கும் நினைவுகளுடன் தமிழ்நாட்டுக்குத் திரும்பும் நிலையில், தரையிறங்குவதற்கு முன்பாக என் இதயத்தில் உள்ளவற்றை அன்பு உடன்பிறப்புகளான உங்களிடம், உங்களில் ஒருவனான நான் இறக்கி வைத்துவிட வேண்டும் என்ற பேரன்பின் வெளிப்பாடே இந்த மடல்.

ஜனவரி 28 அன்று தொடங்கிய பயணத்திலிருந்து பிப்ரவரி 7ஆம் நாள் தாய்மண் திரும்பும் வரையிலான பயண நாட்களின் எண்ணிக்கை பத்து. அதில் கிடைத்திருப்பது தமிழ்நாட்டிற்கான முதலீடு எனும் முத்து. 2021 மே 7ஆம் நாள், 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல், தமிழ்நாட்டின் தொழில்வளத்தைப் பெருக்கி, முந்தைய பத்தாண்டுகாலத்தில் படுபாதாளத்தில் தள்ளப்பட்ட பொருளாதார நிலையைச் சீர்செய்வதே திராவிட மாடல் அரசின் முதன்மை நோக்கமாக அமைந்தது. ஒரு டிரில்லியன் டாலர் என்ற பொருளாதார வளர்ச்சி இலக்குக் கேற்ப, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக 2022ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு நாடுகளில் துபாய், அபுதாபி ஆகிய இடங்களுக்கான பயணம் வெற்றிகரமாக அமைந்தது. 2023ஆம் ஆண்டில் தெற்காசிய நாடுகளான சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்குச் சென்று முதலீடுகளை ஈர்த்தேன். 2024 இன் தொடக்கத்தில் ஐரோப்பாவின் நான்காவது பொருளாதார நாடான ஸ்பெயின் நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்துடன் பயணத்தை மேற்கொண்டேன்.

**பத்து நாட்கள் பயணத்திற்கிடையில் உடன்பிறப்புகளாம் உங்களின் நினைவு எழாத நாளுமில்லை, நேரமுமில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிய பேரறிஞர் அண்ணாவும், அதனைக் கட்டிக் காத்து வளர்த்தெடுத்த முத்தமிழறிஞர் கலைஞரும் நமக்கு ஊட்டியுள்ள இலட்சிய உணர்வும் அதனால் உருவாகியுள்ள கொள்கை உறவும் எத்தனை ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் மனதை விட்டு ஒருபோதும் நீங்காது.**

அந்த அண்ணாவின் நினைவு நாளை அமைதிப் பேரணியுடன் கடைப்பிடிக்கக் கோரி, ஸ்பெயின் நாட்டிலிருந்து நான் கடிதம் எழுதினேன். பயணத்தின் விவரங்களை யும், அங்கு நடந்த நிகழ்வுகளையும், பயணத்தின் இலக்கில் அடைந்த வெற்றியையும் உடன்பிறப்புகளான உங்களிடம் பகிர்ந்து கொள்ளும் விருப்பத்துடன் ஆகாய வீதியில் பயணித்தபடி இந்த விரிவான கடிதத்தை எழுதுகிறேன்.

உங்களால் தமிழ்நாட்டின் முதலமைச்சரான நான், ஜனவரி 28 அன்று ஸ்பெயின் நாட்டில் தரையிறங்கியதும் அந்நாட்டிற்கான இந்தியத் தூதர் திரு. தினேஷ் பட்நாயக் அவர்கள் என்னை அன்புடன் வரவேற்றார். தமிழ்நாட்டின் தொழில்வளத்தைப் பெருக்குவதற்கான முதலீடுகளை ஈர்க்கத்தான் இந்தப் பயணம் என்ற நம் நோக்கத்தை அவரிடம் தெரிவித்தபோது, தொழில்துறையில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளை அறிந்திருந்த இந்தியத் தூதர், நாம் மேற்கொண்டு வரும் திட்டங்கள் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் நம்மிடம் சொன்னபோது வியப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது.

ஸ்பெயின் நாட்டில் தரையிறங்கிய மறுநாளே முதலீட்டாளர் சந்திப்பிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அந்நாட்டின் முக்கியமான தொழில்நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் வருகை தந்திருந்தனர். அவர்களை வரவேற்றுப் பேசிய தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி.ராஜா, சென்னையில் ஜனவரி 7, 8 ஆகிய நாட்களில் உலகத் தரத்துடன் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில் பல்வேறு நாடுகளின் புகழ்பெற்ற நிறுவனங்களுடன் போடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அடிப்படையில் 6 லட்சத்து 64 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு தமிழ்நாட்டுக்குக் கிடைக்கவிருப்பதை எடுத்துரைத்து, நமது மாநிலத்தில் உள்ள தொழிற்கட்டமைப்புகளை விளக்கி, ஸ்பெயின் நாட்டு நிறுவனங்களும் தமிழ்நாட்டில் அதிகளவில் முதலீடுகளைச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

> **“தனிப்பட்ட என்னுடைய - உங்களுடைய மகிழ்ச்சியைவிட, இந்தியாவின் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தகர்த்து நாட்டைக் காப்பாற்றும் போது ஏற்படும் மகிழ்ச்சியே முதன்மையானது. ஸ்பெயின் பயணம் வெற்றிகரமாக அமைந்ததுபோல, தேர்தல் களத்தில் 'இந்தியா'வின் வெற்றியும் அமையும். தமிழ்நாடு வளம் காணும். இந்தியாவின் ஜனநாயகம் காக்கப்பட்டால்தான் தமிழ்நாடு உள்பட அனைத்து மாநிலங்களின் வளர்ச்சியும் நிரந்தரமாக அமையும். அதற்கான களம் நம்மை அழைக்கிறது. ஆயத்தமாவோம்!”**

**இந்திய தூதர் தினேஷ் பட்நாயக் உரையாற்றும்போது, “இந்தியாவிலிருந்து பல மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து உங்களிடம் பேசியிருக்கலாம். முதலீடுகளைக் கோரியிருப்பார்கள். இந்தியாவின் முக்கியமான மாநிலங்களின் ஒன்றான தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, அவர்கள் உங்களுக்கு என்ன உத்தரவாதம் தருகிறார்களோ அதனை நிச்சயம் நிறைவேற்றித் தருவார்கள். அந்த மாநிலத்தில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் இதனை உணர்கின்றன. அதனால், நிச்சயமாக நீங்கள் முதலீடு செய்யலாம்” என்ற நம்பிக்கையைக் கொடுத்தார்.**

**முதலீட்டாளர் சந்திப்பிற்கு வந்திருந்த நிறுவனத்தினர் பலரின் முகங்களிலும் நம்பிக்கை பளிச்சிட்ட நேரத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் உங்களில் ஒருவனான நான் பேசத் தொடங்கினேன். “ஸ்பெயின் மக்களைப் போலவே தமிழர்களும் தங்கள் மொழி மீது மிகுந்த பாசம் கொண்டவர்கள். எங்கள் தமிழ் மொழியில் எழுதப்பட்ட திருக்குறள் என்கிற அறநூல் ஏறத்தாழ பல்வேறு மொழிகளில் வெளியாகியுள்ளது. ஐரோப்பா கண்டத்தில் நான்காவது பெரிய பொருளாதார வலிமை கொண்ட நாடாகத் திகழும் ஸ்பெயின் நாட்டில் ஃபார்ச்சூன் 500இல் உள்ள நிறுவனங்களில் 8 நிறுவனங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதுடன், ஃபார்ச்சூன் 2000இல் உள்ள நிறுவனங்களில் 20 நிறுவனங்களைக் கொண்டிருக்கிறது. இந்த நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வரவேண்டும் என அன்புடன் அழைக்கிறேன். ஏற்கனவே தமிழ்நாட்டில் 9 ஸ்பெயின் கம்பெனிகள் முதலீடுகள் செய்திருப்பதால் நீங்களும் நம்பிக்கையுடன் முதலீடுகள் செய்யலாம்.**

**தமிழ்நாட்டில் முதலீடு செய்துள்ள ஸ்பெயின் நாட்டு நிறுவனமான ரோகா, எங்கள் அரசாங்கத்தின் ஒத்துழைப்பு பற்றி உங்களிடம் சொல்லியிருப்பார்கள். அவர்களுக்குத் தருவது போலவே அனைத்து ஒத்துழைப்பும் உங்களுக்கும் தரப்படும்” என்ற உறுதியினை வழங்கினேன். மொத்தம் 9 நிறுவனத்தினரைத் தனித்தனியாகச் சந்தித்து உரையாடியதன் பலனாகவும், தமிழ்நாடு அரசின் தொழிற்கட்டமைப்பின் மீது அவர்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையின் அடிப்படையிலும் போடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்படி 3 ஆயிரத்து 440 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள் தமிழ்நாட்டிற்கு வரவிருக்கின்றன என்கிற மகிழ்ச்சியான செய்தியைக் கழக உடன்பிறப்புகளிடமும் தமிழ்நாட்டு மக்களிடமும் பகிர்ந்து கொள்கிறேன்.**

பனி மூட்டத்தை விலக்கிக் கொண்டு சூரியக் கதிர்கள் வெளிச்சத்தைப் பாய்ச்சும் ஸ்பெயின் நாட்டின் அதிகாலைப் பொழுதினைப் போல, தமிழ்நாட்டின் தொழில்துறையில் முன்பு சூழ்ந்திருந்த இருளும் பனியும் விலகி, வெளிச்சக் கதிர்கள் கடந்த இரண்டரை ஆண்டுகால திராவிட மாடல் அரசின் அயராத முயற்சியினால் பாயத் தொடங்கியிருக்கின்றன. ஐரோப்பாவின் தனித்துவமான நாடுகளில் ஒன்று ஸ்பெயின் என்பதையும், எந்தெந்த வகையில் அது முக்கியமானது என்பதையும் பத்து நாள் பயணத்தில் அறிந்துகொள்ள முடிந்தது.

ஏறத்தாழ 4 கோடியே 75 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் நாடு ஸ்பெயின். ஒப்பீட்டளவில் தமிழ்நாடு என்கிற மாநிலத்தின் மக்கள் தொகையைவிட ஸ்பெயின் என்கிற நாட்டின் மக்கள்தொகை குறைவுதான். ஆனால், நாங்கள் தங்கியிருந்த இடத்தின் அருகிலும், பிற இடங்களிலும் மக்கள் நெருக்கமும் அவர்களின் புழக்கமும் அதிகமாக இருந்ததைக் காண முடிந்தது. இது பற்றி அங்குள்ளவர்களிடம் கேட்டபோது, “ஆண்டுக்கு 9 கோடிக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் ஸ்பெயினுக்கு வருகிறார்கள். அதனால் எப்போதும் மக்கள் நெருக்கத்துடன் இந்த நாடு இருக்கும்” என்றனர்.

ஸ்பெயின் நாட்டின் தட்பவெப்பம் என்பது நம் நாட்டை, அதுவும் குறிப்பாக நமது மாநிலமான தமிழ்நாட்டுடன் ஒப்பிடும்போது மிகவும் குளிராகத்தான் தெரியும். ஆனால், ஐரோப்பிய நாடுகள் பலவற்றுடன் ஒப்பிடும்போது ஸ்பெயின் நாட்டின் வெப்பநிலை மைனஸ் டிகிரிக்குச் செல்வதில்லை என்பதால் மற்ற நாடுகளிலிருந்து இங்கு வருகிறார்கள். அத்துடன், ஸ்பெயின் நாட்டின் கலைப்படைப்புகள் உலகின் பல நாடுகளையும் ஈர்க்கக்கூடியனவாக இருக்கின்றன. அவற்றைப் பார்க்கவும் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகிறார்கள்.

தலைநகர் மேட்ரிட் மற்றும் புகழ் மிக்க நகரங்களான பார்சிலோனா, செகோவியா, டொலிடோ எனப் பலவும் தனது பழம் பெருமை மிக்க கலைவடிவங்களால் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. டொலிடோ நகரம், ஸ்பெயினின் பழமையான தலைநகரமாகும். நாங்கள் தங்கியிருந்த மேட்ரிட் நகரிலிருந்து ஒரு மணி நேரத்தில் காரில் செல்லக்கூடிய தூரம். போகும் வழியெல்லாம் ஆலிவ் மரங்கள் தலையசைத்து வரவேற்பது போல இருந்தன. “ஆலிவ்தான் இந்த மண்ணின் அழகு. எல்லாப் பக்கமும் நிறைந்திருக்கும்” என்று அங்குள்ளவர்கள் தெரிவித்தார்கள். பழமையான நகரங்கள் உள்ள ஸ்பெயினில் பார்த்த மனிதர்கள் பலரும் வயதானவர்களாக இருந்தார்கள். இளைய தலைமுறையினரின் எண்ணிக்கை முதியோர் அளவிற்கு இல்லை.

**சீனாவிலும் ஸ்பெயின் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் மக்கள் தொகையில் மூத்த குடிமக்கள் நிறைந்திருக்கிறார்கள். இளைஞர்களின் விகிதம் குறைவு. ஆனால், தமிழ்நாட்டில் இளைஞர்கள் அதிகம். அவர்கள் மிகப் பெரும் மனிதவளமாக இருப்பதுதான் நமக்கு பலம். அத்தகைய இளைஞர்களின் கல்விக்காவும், திறன் மேம்பாட்டிற்காகவும், வேலைவாய்ப்பு களுக்காகவும் நம் திராவிட மாடல் அரசு தொடர்ந்து எடுத்து வரும் முயற்சிகளை நினைத்துப் பார்த்தேன். இன்னும் செய்ய வேண்டியவை ஏராளம் இருக்கின்றன என்பதையும் அதற்காகத்தான் இத்தகைய முதலீடுகளை ஈர்க்கும் பயணங்கள் என்பதையும் உடன்பிறப்புகளான நீங்களும் உங்களில் ஒருவனான நானும் அறிவோம். இளைஞர்களின் ஆற்றல் அவர்களுக்கும் நாட்டிற்கும் பயன்படும் வகையில் வேலை வாய்ப்புகளிலும் கொள்கை சார்ந்தும் வளர்த்தெடுக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கு இருக்கிறது.**

பழமைப் பாரம்பரியம் மிக்க டொலிடோ நகரத்திற்குள் நுழையும்போது ஓர் அரங்கம் கண்ணில் பட்டது. நம் ஊரில் ஜல்லிக்கட்டு எனும் ஏறுதழுவுதல் போட்டி போன்ற, ஸ்பெயினின் புகழ்மிக்க எருது விளையாட்டுப் போட்டிக்கான அரங்கம் அது. ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டாக இந்த எருது விளையாட்டுப் போட்டிகள் அமைந்துள்ளன. மார்ச் மாத இறுதியில் தொடங்கி அக்டோபர் மாதத்தின் நடுப்பகுதி வரை இந்த எருது விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன.

இது பிப்ரவரி மாதம் என்பதால், **ஸ்பெயினின் 'ஏறுதழுவதல்' போட்டியைக் காண முடியவில்லை. எனினும், ஸ்பெயின் நாட்டின் பழம்பெருமைமிக்க அரங்கங்கள் போல, நம் தமிழ்ப் பண்பாட்டு விளையாட்டின் பெருமையைக் காத்திட மாமதுரையில் அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள ஏறுதழுவுதல் அரங்கமும் அதனைத் திறந்து வைத்த நிகழ்வும் மனதில் நிழலாடி, நிறைவைத் தந்தன.**




தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 08-02-2024

# 400 பா.ஜ.க.வும் - 370 பா.ஜ.க.வும்

400 இடங்களைக் கைப்பற்றுவோம் என்று நாடாளுமன்றத்தில் சொல்லி இருக்கிறார் பிரதமர் மோடி. சொல்லிக் கொள்ளட்டும்!

370 இடங்களை பா.ஜ.க. மட்டும் தனித்து கைப்பற்றும் என்றும் சொல்லி இருக்கிறார் பிரதமர் மோடி. சொல்லிக் கொள்ளட்டும்!

இப்படி ஒருவர் சொல்லிக் கொள்வதை யாரும் தடுக்க முடியாது. உண்மையில் வெற்றி பெறப் போகிறவர்கள் யாரும், இப்படி சொல்ல மாட்டார்கள். வென்று காட்டுவார்கள். ஆனால் 400 என்றும் 370 என்றும் அவர் சொல்லிக் கொள்வதற்கு இரண்டு காரணங்கள் இருக்கிறது.

ஒன்று - இப்படிச் சொல்லி தனது மனதைத் தானே தேற்றிக் கொள்கிறார். இரண்டு - 400, 370 என்று சொல்லி பா.ஜ.க. மீது ஒரு பொய்யான பிம்பத்தைக் கட்டமைக்கப் பார்க்கிறார்கள். தனது மனதுக்கு தானே ஆறுதல் சொல்லிக் கொள்வதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், 400,370 என்பது மாயப் பிம்பம் என்பதை அம்பலப்படுத்தியாக வேண்டும். கள நிலவரம் பா.ஜ.க.வுக்குச் சாதகமாக இல்லை என்பதே உண்மையாகும்.

2019 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக மோடி ஆட்சிக்கு வந்தார். அதன் பிறகு அவரது போலியான பிம்பம் கிழியத் தொடங்கிவிட்டதை பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்கள் காட்டிக் கொடுத்துவிட்டன.

**2019 ஆம் ஆண்டில்..**

★ **ஆந்திரா சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

★ **ஜார்கண்ட் சட்டமன்றத் தேர்தலில் தோல்வி.**

★ **மகாராஷ்டிராவில் ஆட்சிக் கலைப்பு, சிவசேனா உடைப்பு என்று கூட்டணி ஆட்சியில் இருக்கிறது பா.ஜ.க.**

**2020 ஆம் ஆண்டில்..**

★ **டெல்லி மாநில சட்டமன்றத் தேர்தலில் தோல்வி.**

★ **பீகாரில் பா.ஜ.க. கூட்டணியை நிதிஷ் முறித்து, ஆர்.ஜே.டி.யுடன் ஆட்சியை அமைத்தார். பின்னர் அவர்களை விட்டு விலகி மீண்டும் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடக்கிறது.**

**2021 ஆம் ஆண்டில்..**

★ **தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

★ **கேரள சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

★ **மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

**2022 ஆம் ஆண்டில்...**

★ **பஞ்சாப் மாநில சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி**

★ **இமாசலப்பிரதேச சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி**

**2023 ஆம் ஆண்டில் ...**

★ **கர்நாடகா மாநில சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

★ **தெலுங்கானா சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

★ **மிசோரம் சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி.**

- இதுதான் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க.வின் நிலைமை ஆகும். எதை வைத்துக் கொண்டு 400, 370 என்கிறார் மோடி?

சிக்கிம் - புதுச்சேரி - நாகலாந்து - மேகாலயா - திரிபுரா - ஆகிய மாநிலங்களில் பா.ஜ.க.வின் கூட்டணி ஆட்சி அமைந்துள்ளது. அங்கு பா.ஜ.க. கட்சி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவானதுதான்.

அருணாசலப்பிரதேசம் - அரியானா- அசாம் - கோவா - உத்தரகாண்ட் - மணிப்பூர் - உத்தரப்பிரதேசம் - குஜராத் - சட்டீஸ்கர் - மத்தியப்பிரதேசம் - ராஜஸ்தான் - ஆகிய மாநிலங்களில் 2019 முதல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க. வென்றுள்ளது. இதில் உத்தரப் பிரதேசம், குஜராத், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகியவை மட்டும்தான் பெரிய மாநிலங்கள் ஆகும். மற்றவை அனைத்தும் சிறிய மாநிலங்கள். பிறகு எப்படி 400 என்கிறார் பிரதமர்?

பா.ஜ.க.வின் கோட்டை என்று சொல்லப்படும் உ.பி., ம.பி., குஜராத், ராஜஸ்தான் ஆகிய நான்கு மாநிலங்களை மொத்தமாகச் சேர்த்தாலே 160 நாடாளுமன்றத் தொகுதிகள் தான். பிறகு எப்படி 400 என்கிறார் பிரதமர்?

இன்றைக்கு இந்தியாவின் மிக முக்கியமான பெரிய மாநிலங்களை பா.ஜ.க. அல்லாத கட்சிகள்தான் ஆள்கின்றன. தமிழ்நாடு - டெல்லி - பஞ்சாப் - மேற்கு வங்கம் - கர்நாடகா ஒரிசா - கேரளா - ஆந்திரா - ஆகிய மாநிலங்களை எதிர்க்கட்சிகள்தான் வைத்துள்ளது. பிறகு எப்படி 400 என்கிறார் பிரதமர்? எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் பா.ஜ.க.வின் நிலை பரிதாபத்துக்குரியது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

★ **தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணிக் கட்சிகள்**

★ **டெல்லியிலும் பஞ்சாபிலும் ஆம் ஆத்மி**

★ **மேற்கு வங்கத்தில் திரிணாமூல் காங்கிரஸ்**

★ **மகாராஷ்டிராவில் சிவசேனாவும், தேசியவாத காங்கிரஸும்**

★ **உத்தரப்பிரதேசத்தில் சமாஜ்வாடி**

★ **பீகாரில் ஆர்.ஜே.டி.**

★ **காஷ்மீரில் பரூக் அப்துல்லாவும், மெகபூபா முக்தி**

★ **ஜார்கண்டில் முக்தி மோர்ச்சா**

ஆகிய பலமான மாநிலக் கட்சிகள் இந்தியாக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளன. இந்த மாநிலங்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு 400 இடங்களை எப்படி பிடிக்க முடியும்? காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் போன்ற அகில இந்தியக் கட்சிகள் இக்கூட்டணிக்குள் உள்ளன.

கடந்த முறை உ.பி., மகாராஷ்டிரா, பீகார், குஜராத், கர்நாடகா, மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம், ஜார்கண்ட் ஆகிய 9 மாநிலங்களில் அதிகம் வாங்கியதால் பா.ஜ.க. ஆட்சியில் அமர்ந்தது. 234 நாடாளுமன்றத் தொகுதிகளை இந்த 9 மாநிலங்களில் இருந்து பெற்றது பா.ஜ.க. இம்முறை பீகார், மகாராஷ்டிரா, கர்நாடகா, மேற்கு வங்கம் ஆகிய நான்கு மாநிலங்களும் கை கொடுக்காது.

மறுபடியும் உ.பி., ம.பி., குஜராத், ராஜஸ்தானுக்குதான் பா.ஜ.க. அடங்கப் போகிறது. உ.பி.யில் சமாஜ்வாடி - காங்கிரஸ் ஆகிய கட்சிகளை எதிர்கொள்ள வேண்டும். மற்ற மூன்று மாநிலங்களிலும் காங்கிரஸ் வலுவாக இருக்கிறது.

இரண்டு மாதங்களுக்கு முன் நடந்த சட்டமன்றத் தேர்தலில் ராஜஸ்தான் மாநிலத்தில் பா.ஜ.க. வென்றிருந்தாலும், காங்கிரஸ் கட்சிக்கும் பா.ஜ.க.வுக்குமான வாக்கு வித்தியாசம் 10 லட்சம் பேர் தான். சட்டீஸ்கரில் 6 லட்சம் வாக்குகள்தான். மத்தியப் பிரதேசத்தில் 35 லட்சம் வாக்குகளை கூடுதலாக பா.ஜ.க. பெற்றுள்ளது. 'இந்தியா' கூட்டணிக் கட்சிகள் இணைந்து போட்டியிட்டு இருந்தால், இந்த வெற்றியை பா.ஜ.க. பெற்றிருக்க முடியாது.

2022-ல் நடைபெற்ற குஜராத் மாநில சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வாங்கிய வாக்குகள் 1,67,07,957 மட்டுமே. பா.ஜ.க.வுக்கு எதிராக நின்றவர்கள் வாங்கிய மொத்த வாக்குகள் 3,23,81,808 ஆகும். ஆம் ஆத்மி கட்சி தனித்து போட்டியிட்டது. 41 லட்சம் வாக்குகளைப் பெற்றது. 12.92 சதவிகித வாக்குகளைப் பெற்றது. காங்கிரஸும் ஆம் ஆத்மியும் இப்போது ஒரே அணியில் இருக்கின்றன.

இவை எதுவும் தெரியாதவர்கள் தான் பிரதமர் சொல்வதற்கு தலையாட்ட முடியும். இது எல்லாம் பிரதமருக்குத் தெரியும். அதனால்தான் நாடாளுமன்றத்தில் 'இந்தியா' கூட்டணியைப் பற்றியே அவர் புலம்பிக் கொண்டிருந்தது ஆகும்.



தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு தாயகம் திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.2.2024) சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தார்.



திரைப்பட இயக்குநர் பிரசாத் பாண்டியன் அவர்களின் சகோதரர் கணேஷ் – சுகந்தி இணையரின் திருமணம் திருச்சியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி உள்ளார்.

## கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி பகுதியில்

# ரூ.5 கோடியில் வேளாண் வணிக வளாகம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்!

கடலூர், பிப்.8-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி பகுதியில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் நபார்டு WIF TNSAMB நிதியுதவியுடன் ரூ.500.00 இலட்சம் மதிப் பீட்டில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஜி.பிரகாஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண் தம்புராஜ் ஆகியோர் முன்னிலையில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்.

அதன்பின் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறைகளின் செயல்பாடுகள் மற்றும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு திட்டங்களின் பயன்கள் உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்க்கும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். மகளிருக்கு இலவச பேருந்து பயணத்திட்டம், அரசு பள்ளியில் பயின்ற பெண் குழந்தைகள் உயர்கல்வி பயில ஏதுவாக புதுமைப் பெண் திட்டம், குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கிடும் வகையில் மகளிர் உரிமை தொகை திட்டம், அரசு பள்ளி மாணவர்களின் நலன் கருதி காலை உணவு வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடலூர் விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கும் குறிஞ்சிப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் (29.08.1973) அன்று துவங்கப்பட்டது. விவசாயிகளின் விளைபொருட்கள் குறிப்பாக மணிலா போன்ற எண்ணெய் வித்துகள் அதிகளவு உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. மின்னணு வேளாண் சந்தை (eNAM) திட்டம் 15.10.2022 முதல் செயல்பட்டு வருகிறது. 202223 ஆம் ஆண்டு eNAM மூலம் 1692 மெட்ரிக் டன் அளவிலான ரூ.1725.12 இலட்சம் மதிப்புடைய வேளாண் விளைபொருட்களும், 2023 24 ஆம் ஆண்டு இதுவரை 2133 மெட்ரிக் டன் அளவிலான ரூ.2222.46 இலட்சம் மதிப்புடைய வேளாண் விளை பொருட்களும் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

குறிஞ்சிப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 255 மெட்ரிக் டன் கொண்ட 3 பரிவர்த்தனைக் கூடங்கள், மொத்த கொள்ளளவு 5,200 மெட்ரிக் டன் கொண்ட 4 சேமிப்புக் கிட்டங்கிகள், 3 மணிலா உடைப்பு இயந்திரம், 3 தேங்காய் உரிப்பு இயந்திரம், 3 Forkift இயந்திரம், விளைபொருளை தர ஆய்வு செய்ய NIR Analyer இயந்திர சாதனங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

ஒழுங்குமுறை விற்பனைக்கூட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் NABARD WIF திட்டத்தின் கீழ், நபார்டு நிதி 95 சகவீதமும், TNSAMB EPJP 5 சதவீதமும் என ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலக கட்டிடம், கூட்ட அரங்கு, 10 வணிக வளாகக் கடைகள், 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிட்டங்கி போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் வேளாண் விளைபொருட்களை விலை வீழ்ச்சி காலத்தில் சேமிப்பு கிட்டங்கியில் இருப்பு வைத்து விலை அதிகரிக்கும் போது விற்று பயனடைவர். உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் வணிகர்கள் தங்கள் பொருட்களை வணிக வளாக கடைகள் மூலம் விற்பனை செய்து பயனடைவர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குனர் கண்ணையா, கடலூர் விற்பனைக்குழு செயலாளர் திருமதி. சே.விஜயா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




2024 மக்களவைத் தேர்தலையொட்டி தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி, முன்னாள் எம்.பி. டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், அரசு தலைமை கொறடா கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், எழிலன் நாகநாதன், ஏ.கே.எஸ்.விஜயன், சென்னை மேயர் பிரியா ஆகிய 11 பேர் கொண்ட குழுவினர் மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., ஐ.பி.செந்தில்குமார், சேடப்பட்டி மு.மணிமாறன், கம்பம் ராமகிருஷ்ணன், தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், தமிழரசி ரவிக்குமார், மகாராஜன் பூமிநாதன் மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் விவசாயிகள், வியாபாரிகள், மாணவர் சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் கருத்துக்களை நேரடியாக கேட்டு மனுக்களை பெற்றனர்.

# பயணம் வென்றது! களமும் வெல்லட்டும்!

முதல் பக்கத் தொடர்ச்சி

ஸ்பெயின் நாட்டின் விளையாட்டுத் திடல்களில் கால்பந்து விளையாட்டில் இளைஞர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர். நம் நாட்டு இளைஞர்களுக்குக் கிரிக்கெட் போல, அந்த நாட்டிலும் அருகிலுள்ள ஐரோப்பிய நாடுகளிலும் கால்பந்து மிகவும் பிரபலம். உலகக் கோப்பை, ஐரோப்பியக் கோப்பை ஆகியவற்றுடன் கால்பந்து கிளப்கள் நடத்தும் போட்டிகளும் மிகவும் புகழ் பெற்றவை. நாங்கள் சென்றிருந்த நேரத்திலும் அங்கே கால்பந்து போட்டிகள் நடைபெறுவதை அறிந்து கொண்டோம்.

டொலிடோ நகரத்தின் அழகை இரசித்ததுடன், அதன் பழமைமிக்க வரலாற்றுச் சிறப்பையும் கேட்டுத் தெரிந்துகொண்டேன். ‘மூன்று பண்பாடுகளின் நகரம்’ என்ற சிறப்புப் பெயர் டொலிடோவுக்கு உண்டு. முதலில் யூதர்கள், பிறகு கிறிஸ்தவர்கள், அதன்பின் முஸ்லிம்கள் என மூன்று மதங்களைச் சார்ந்த மன்னர்களின் படையெடுப்பு நிகழ்ந்திருந்தாலும், மூன்று மதங்களின் மக்களும் அவரவர் பண்பாட்டைக் காப்பாற்றிக் கொண்டு, ஒற்றுமையாக வாழ்ந்த - வாழ்ந்து வருகிற பெருமை டொலிடோ நகரத்திற்கு உண்டு.

கி.பி. 3ஆம் நூற்றாண்டில் ரோமானிய அரசாட்சியின் அரண்மனையாக இருந்த இந்தக் கோட்டை, 15ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த மன்னரால் மீண்டும் பொலிவு பெற்றுள்ளது. பழமை மாறாத கோட்டையும் அதன் மதில்களும் டொலிடோ நகரத்திற்குப் பெருமை சேர்க்கின்றன. தொன்மை மாறாத கட்டடக்கலைகளைக் காப்பாற்றி, அடுத்த தலைமுறையினருக்குக் கலைச்செல்வமாக ஒப்படைக்கும் தொலைநோக்குப் பார்வையை அந்நாட்டில் காண முடிந்தது.

**வேறு மதத்தைச் சேர்ந்த மன்னர்களால் கட்டப்பட்ட கட்டடம் என்பதால் இன்றைய ஆட்சியாளர்கள் அதை இடித்துத் தகர்த்திடவும் இல்லை, மாற்று மதத்தினரிடம் வெறுப்பை விதைத்துத் தேர்தல் இலாபம் தேடும் அரசியலும் அங்கு இல்லை. மூன்று மதத்தினரின் பண்பாட்டுச் சிறப்பு மிக்க நகரமாக டொலிடோ இன்றும் திகழ்வதைக் காண முடிந்தது. இந்தப் பண்பாட்டுப் பெருமையும் பன்முகத்தன்மையும்தான் இந்தியாவுக்கும் சிறப்பு சேர்க்கக்கூடியது என்பதை நாம் மறந்துவிட முடியுமா?**

கோட்டைகள் போலவே பழங்காலத்தில் கட்டப்பட்ட பெரிய தேவாலயங்களான கதீட்ரல்களும் பழமை மாறாமல் பாதுகாக்கப்படுகின்றன. தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்கள் கட்டிய திருக்கோயில்கள் பலவும் திராவிடக் கட்டடக் கலையின் சின்னங்களாக விளங்குவதுபோல, ஐரோப்பியக் கட்டடக் கலையின் அடையாளங்களாக இந்த தேவாலயங்கள் திகழ்கின்றன.

வரும் வழியில், “இது என்ன இன்னொரு கோட்டை?” என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். “இது கோட்டை அல்ல, பிராடோ மியூசியம்” என்று தெரிவித்தனர். ஸ்பெயின் நாட்டின் வரலாற்றை ஆவணப்படுத்தும் விதமாக 1819ஆம் ஆண்டில், அரண்மனை போன்ற இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. நமது மன்னர்களின் வரலாற்றைக் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் தெரிந்து கொள்வது போல, ஸ்பெயின் நாட்டை ஆட்சி செய்த மன்னர்களின் வரலாறு ஆட்சி முறை ஆகியவற்றை அறிந்து கொள்ள அவர்கள் காலத்தில் வரையப்பட்ட ஓவியங்களே சான்றுகளாக உள்ளன. அத்தகைய பழமைமிக்க ஓவியங்களைப் பாதுகாத்து, அவற்றின் வாயிலாக 12ஆம் நூற்றாண்டிலிருந்து ஸ்பெயின் நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ளும் வகையில் பிராடோ அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

**நாங்கள் அங்கே சென்றிருந்தபோது இளைய தலைமுறையினர் பலரும் அருங்காட்சியகத்தைப் பார்வையிடுவதைக் காண முடிந்தது. வரலாற்றை ஒவ்வொரு தலைமுறைக்கும் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும். நம்மிடம் பெருமைமிகு வரலாறு உண்டு. நாம் அதனைச் சொல்லத் தவறியதால், வரலாறு இல்லாத ஒரு கூட்டம், நம் வரலாற்றைத் திரிக்கும். பண்பாட்டைச் சிதைக்கும். மொழி மீது ஆதிக்கம் செலுத்த நினைக்கும். வதந்திகளைப் பரப்பும். அவதூறுகளால் அரசியல் பிழைப்பு நடத்தும். உண்மை வரலாற்றை இளந்தலைமுறையினர் உணர்ந்துகொண்டால்தான், வரலாற்றைச் சிதைக்க நினைக்கும் வதந்தியாளர்களை, அவர்கள் தங்களின் வாக்குரிமையால் விரட்டி அடிப்பார்கள். அடுத்தடுத்த தலைமுறையினருக்கும் ஆபத்து நேராமல் தடுப்பார்கள்.**

திராவிட மாடல் அரசு அமைந்தபிறகு, கீழடி அகழாய்வுகளில் கிடைத்த தமிழரின் நாகரிக பண்பாட்டு வரலாற்றுச் சுவடுகளை ஆவணப்படுத்தும் வகையில் மிகப்பெரிய அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. வைகை ஆற்றங்கரை நாகரிகம் முதல் வைக்கம் போராட்டம் வரை உண்மை வரலாற்றை ஆவணப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை அரசாங்கம் மட்டுமல்ல, தமிழர் என்ற உணர்வு கொண்ட ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தமிழ்நாட்டில் உள்ள நம் கழகத்தினரிடமும், அயல்நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். ஸ்பெயின் நாட்டில் வாழும் தமிழர்களைச் சந்தித்த இனிமையான நிகழ்விலும் இதனைக் கூறினேன்.

இந்தப் பயணத்தில் உணவு உபசரிப்பு வழங்கிய South Indian Food நடத்தி வரும் மதுரை ஹார்விப்பட்டியைச் சேர்ந்த திருமதி. பவித்ரா சோமசுந்தரன் குடும்பத்தினருக்கு இக்கடிதத்தின் வாயிலாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்பெயின் நாடு தன் வரலாற்றையும் பண்பாட்டையும் பாதுகாப்பதுடன் மொழியையும் வளப்படுத்தி உலகம் முழுவதும் பரவச் செய்திருப்பதைக் கண்டு வியந்தேன். நாலே முக்கால் கோடி மக்கள் தொகை கொண்ட நாட்டிற்கு, 9 கோடி சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான அடிப்படைக் காரணம், உலகமெங்கும் பரவியுள்ள ஸ்பானிஷ் மொழிதான்.

ஐரோப்பிய நாட்டவர் பிற கண்டங்களில் உள்ள நாடுகளுக்கு கடல்வழி கண்டறிய பயணித்தபோது, அதில் ஸ்பெயின் நாட்டின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. குறிப்பாக, தென் அமெரிக்க நாடுகள் பலவற்றிற்கு ஸ்பெயின் நாட்டவர் கடல்வழியாகச் சென்றதுடன் அங்கு குடியேறிய காரணத்தால், அந்த நாடுகளில் ஸ்பானிஷ் மொழி இன்று அலுவல் மொழியாக இருக்கிறது. ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக உலகளவில் பரவிய ஐரோப்பிய மொழிகளில் ஸ்பானிஷ் மொழிக்கு முக்கிய இடம் உண்டு. 20 நாடுகளில் அது அலுவல் மொழியாக உள்ளது. அந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஸ்பெயினுக்குச் சுற்றுலாப் பயணிகளாக வருகிறார்கள். தங்கள் முன்னோர்களின் நிலத்தைப் பார்க்கும் ஆவலுடன் வருகிறார்கள்.

தமிழ் மன்னர்கள் தங்களின் கடற்படை மூலம் தெற்காசிய நாடுகளான இன்றைய இந்தோனேஷியா, கம்போடியா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் அன்றைய பகுதிகளில் பண்பாட்டுச் சின்னங்களை நிறுவி, தமிழ் மொழியைப் பொறித்தது போல, தமிழர்கள் கடல்வழி வாணிகம் மேற்கொண்டு தமிழ்நாட்டில் கிடைத்த பொருட்களுடன் தமிழ் மொழியையும் கிரேக்கம்-ரோமாபுரி பேரரசுகளில் எப்படிப் பரப்பினார்களோ அதுபோல தென் அமெரிக்க நாடுகளில் ஸ்பானிஷ் மொழி செல்வாக்குப் பெற்றிருக்கிறது. அது ஸ்பெயின் நாட்டின் வளர்ச்சிக்குத் துணை நிற்கிறது என்பதை இந்தப் பயணத்தில் உணர்ந்து கொண்டேன்.

**பயணம் என்பது உலகத்தைக் காண்பதற்கான ஜன்னல். நாம் அறியாத பல செய்திகளை நமக்கு நேரடியாகக் கற்றுத் தருவதற்குப் பயணத்தைப் போன்ற சிறந்த ஆசிரியர் இருக்க முடியாது.**

அதனை இந்தப் பத்து நாள் பயணத்தில் முழுமையாக அறிந்தேன். பயணத்தில் இருந்தாலும் எனக்குள்ள பொறுப்புகளையும் அதற்குரிய பணிகளையும் மறந்துவிடவில்லை. தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டிய தருணம் நெருங்கி வருவதால் அது குறித்துக் காணொலி வாயிலாக அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடன் ஆலோசனைகளை மேற்கொண்டேன். கழகத்தின் தலைவர் என்ற முறையில், உடன்பிறப்புகளான உங்களின் எண்ண ஓட்டத்தை அறிந்து கொள்ளும் வகையில் கழக நிர்வாகிகளிடம் தொடர்ந்து உரையாடினேன்.

**உங்களில் ஒருவனான நான், இதற்கு முன் எழுதிய கடிதத்தில் கேட்டுக்கொண்டபடி, பிப்ரவரி 3ஆம் நாள் கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் தலைமையில் அண்ணா சதுக்கம் நோக்கி அமைதிப் பேரணியைச் சிறப்பாக நடத்தியதுடன், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள் - நகரங்கள் ஒன்றியங்களில் அண்ணா நினைவு நாள் ஊர்வலங்களும் நினைவேந்தல் நிகழ்வுகளும் நடைபெற்றிருப்பதை அறிந்தேன்.**

நம்முடைய உடனடி களப்பணி என்பது நாடாளுமன்றத் தேர்தல் களம்தான். அதற்காக அமைக்கப்பட்ட மூன்று குழுக்களுமே தங்களுடைய பணியைத் தொடங்கி, சிறப்பாகத் தொடர்வதை அறிந்துகொண்டேன். தோழமைக் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு நடத்தும் குழு முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நல்லமுறையில் நிறைவு செய்துள்ளது. கழகத்தினரின் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் குழு ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகளையும் அழைத்து அண்ணா அறிவாலயத்தில் விரிவான ஆலோசனை நடத்தி, கள நிலவரத்தை எடுத்துரைத்து, வெற்றிக்கான வியூகத்தை வகுத்துத் தந்திருக்கிறது. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று மக்களைச் சந்தித்து அவர்களின் கருத்துகளைக் கேட்டு வருகிறது. தலைமையின் சொல்லை உத்தரவாக கட்டளையாக ஏற்றுச் செயல்பட்டு வருவது மகிழ்வைத் தருகிறது. இது எப்போதும் தொடர வேண்டும்.

**உங்களில் ஒருவனான நான் எளியவன். உங்களால் வழங்கப்பட்ட கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பவன். பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரிடம் கற்றுக்கொண்டதை வைத்து ஓயாமல் உழைக்கக்கூடியவன். இந்த இயக்கத்தைத் தோளிலும், அதன் தொண்டர்களை நெஞ்சத்தில் சுமந்து பயணிப்பவன். உங்கள் ஒவ்வொருவர் இதயத்திலும் இடம்பெற்றிருக்கும் உங்களில் ஒருவன். தலைவன் வெளிநாடு சென்றிருந்தாலும், தலைமையின் உத்தரவை நிறைவேற்றுவோம் என்கிற இந்த உணர்வும், கழகத்தினர் அனைவரையும் ஒருங்கிணைத்துச் செயல்படும் ஒற்றுமையும் இருக்கும்வரை எந்தக் கொம்பனாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தை வீழ்த்திட முடியாது. அந்த வகையில், உடன்பிறப்புகளாம் உங்களுக்குத் தலைவராகும் வாய்ப்பைப் பெற்றதில் மகிழ்கிறேன்.**

தனிப்பட்ட என்னுடைய - உங்களுடைய மகிழ்ச்சியைவிட, இந்தியாவின் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தகர்த்து நாட்டைக் காப்பாற்றும் போது ஏற்படும் மகிழ்ச்சியே முதன்மையானது. ஸ்பெயின் பயணம் வெற்றிகரமாக அமைந்ததுபோல, தேர்தல் களத்தில் ‘இந்தியா’வின் வெற்றியும் அமையும். தமிழ்நாடு வளம் காணும். இந்தியாவின் ஜனநாயகம் காக்கப்பட்டால்தான் தமிழ்நாடு உள்பட அனைத்து மாநிலங்களின் வளர்ச்சியும் நிரந்தரமாக அமையும். அதற்கான களம் நம்மை அழைக்கிறது. ஆயத்தமாவோம்!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2055
தை 24
07.02.2024

---

## ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் - சாதனைப் பயணமாக அமைந்தது !

# தமிழ்நாட்டிற்கு ரூ.3,440 கோடி புதிய தொழில் முதலீடுகள் ஈர்ப்பு!

## சென்னை திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல் !

**சென்னை, பிப். 8-**

**ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு தமிழ்நாட்டிற்கு ரூ.3,440 கோடி புதிய தொழில் முதலீடுகள் ஈர்ப்பு எனவும், இந்தப் பயணம் சாதனைப் பயணமாக அமைந்திருந்தது என்றும் சென்னை திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விமான நிலையத்தில் செய்தியாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

உங்கள் வாழ்த்துகளை எல்லாம் பெற்று ஸ்பெயின் நாட்டுக்குச் சென்ற நான் தமிழ்நாட்டுக்குப் பல்வேறு முதலீடுகளை ஈர்த்துவிட்டுத் திரும்பி இருக்கிறேன். அந்த வகையில் இது மிகப்பெரிய சாதனைப் பயணமாக அமைந்திருக்கிறது.

### ஸ்பெயினில் பங்கேற்ற தொழில்துறை நிர்வாகிகள்!

தமிழ்நாட்டில், தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டுக்கு கடந்த ஜனவரி 29ஆம் தேதி சென்றேன். முதல் நிகழ்வாக, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் பங்கேற்கும் முதலீட்டாளர் மாநாடு நடந்தது. அதற்கு ஸ்பெயின் நாட்டில் இருக்கின்ற பல்வேறு தொழில்துறை குழும நிர்வாகிகள் எல்லாம் வந்திருந்தார்கள்.

- ஸ்பெயின் நாட்டின் பொருளாதாரம் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சக அதிகாரிகள்
- ஸ்பெயின் தொழில் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள்
- இன்வெஸ்ட் ஸ்பெயின் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களை சந்தித்தேன்.

தமிழ்நாட்டில், தொழில் தொடங்குவதற்கு இருக்கக் கூடிய உகந்த சூழல் பற்றி அங்கே எடுத்துச் சொல்லி, நம்முடைய மாநிலத்தில்



முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன். அதன் தொடர்ச்சியாக, அடுத்தடுத்த நாட்களில் ஸ்பெயின் நாட்டில் செயல்படுகின்ற முன்னணி நிறுவனங்களுடைய நிர்வாகிகளை தனித்தனியாக நேரில் சந்தித்து கலந்து ரையாடினேன்.

### முக்கிய நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன்!

தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வேண்டும் என்று அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். சில முக்கிய நிறுவனங்களின் பெயர்களை இங்கேபதிவுசெய்யவிரும்புகிறேன்.

1. காற்றாலை மின் உற்பத்தியிலும், நீர் மறுசுழற்சியிலும் முன்னணி நிறுவனமான ஆக்சியானா நிறுவனம்
2. உயர்தர வீட்டுக் கட்டுமான பொருட்களின் உற்பத்தியிலும், பீங்கான் பொருட்கள் உற்பத்தியிலும் உலகின் முன்னணி நிறுவனமான ரோக்கா நிறுவனம்
3. கண்டெய்னர் முனையங்கள் மற்றும் சரக்கு பூங்காக்களை அமைப்பதில் சிறந்த நிறுவனமான ஹபக்-லாய்டு நிறுவனம்
4. சர்வதேசத் தரத்தில் சாலைக் கட்டமைப்பு வசதிகளை அமைக்கக்கூடிய அபர்ட்டிஸ் நிறுவனம்
5. மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் உற்பத்தியில் உலகின் முன்னணி நிறுவனமாக இருக்கின்ற கெஸ்டாம்ப் நிறுவனம்
6. இரயில்வே சார்ந்த உற்பத்தி தொழிலில் உயர் தொழில்நுட்பத்துடன் செயல்படக்கூடிய டால்கோ நிறுவனம்
7. பொறியியல் வடிவமைப்பு மற்றும் பொறியியல் கல்வித் திறன் பயிற்சிக்கான நவீன கருவி களை உற்பத்தி செய்கின்ற எடிபன் நிறுவனம்
8. உயிரியல் ஆராய்ச்சி மற்றும் மருந்து உற்பத்தி நிறுவனமான மேப்ட்ரீ நிறுவனம்

- ஆகிய நிறுவனங் களின் நிர்வாகிகளை எல்லாம் நான் சந்தித்தேன். இந்த நிறுவனங்களின் நிர்வாகிகள் எல்லோரும் தங்களுடைய தொழில் திட்டங்களை விளக்கியும், தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தங்களுடைய ஆர்வத்தையும் தெரிவித்தார்கள்.

இந்த முயற்சிகளின் பயனாக, 3,440 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. ஹபக் லாய்டு நிறுவனம் - 2500 கோடி ரூபாய் முதலீடு.
2. எடிபன் நிறுவனம் - 540 கோடி ரூபாய் முதலீடு.
3. ரோக்கா நிறுவனமும் 400 கோடி ரூபாய் முதலீடு செய்வதாக உறுதியளித்திருக்கிறது.

இந்த நிறுவனங்கள் மட்டுமில்லாமல், மற்ற நிறுவனங்களும் அடுத்தடுத்து எதிர்காலத்தில் தங்களுடைய முதலீடுகளை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தமிழ்நாடு குறித்தும், கழக அரசு குறித்தும் உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு உள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியையும், தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டையும் புகழ்ந்து உலக அளவில் முக்கியப் பத்திரிகையான ‘நியூயார்க் டைம்ஸ்’ வெளியிட்டுள்ள செய்தியை நீங்கள் எல்லோரும் படித்திருப்பீர்கள்.

உற்பத்தித் துறையில் சீனாவுக்கு மாற்றாக, இந்தியா கருதப்பட்டு வரும் இந்த வேளையில், அந்த உற்பத்தித் துறையில் முந்திச் செயல்படுகின்ற மாநிலமாக தமிழ்நாடு முன்னேறி வருவதையும், பெரும் அளவிலான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய முதலீடுகள் பல தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் அந்தச் செய்தி சுட்டிக்காட்டி இருக்கிறது.

### தமிழ்நாடு அரசை பாராட்டி “நியூயார்க் டைம்ஸ்” கட்டுரை!

இந்தியா பயணிக்கக் கூடிய பாதையில், முந்தி பயணிப்பது மட்டுமல்ல, தமிழ்நாடு தனக்கென்று தனிப்பாதை ஒன்றை வகுத்துச் செயல்பட்டு வருவதாகவும், முதல் பக்கத்தில் “நியூயார்க் டைம்ஸ்” பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறது, அதை பாராட்டியும் இருக்கிறது. இது போன்ற பாராட்டுகள்தான் எங்களை மேலும் உற்சாகப்படுத்தி செயல்பட வைக்கிறது.

தமிழ்நாட்டை தொழில் துறையில் தலைசிறந்த மாநிலமாக உயர்த்தும் எங்கள் பயணத்துக்கு ஸ்பெயின் பயணம் மிகமிக பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. இது போன்ற அடுத்தடுத்த பயணங்கள் திட்டமிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செய்தியாளர்:** *தற்போது நீங்கள் வெளிநாடுகளில் பயணம் மேற்கொண்டு வரும் போது முதலீடுகள் அதிகளவு ஈர்க்கப்படுகிறது. இதற்கு அடுத்த கட்டமாக முதலீடு களை ஈர்ப்பதற்காக, வேறு நாடுகளுக்குச் செல்ல வாய்ப்பிருக்கிறதா?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** திட்டமிடும்போது உங்களிடம் சொல்லிவிட்டு செய்கிறேன். நாடாளுமன்றத் தேர்தல் இப்போது நெருங்கி வருவதால், அதற்குப் பிறகுதான் என்னுடைய பயணங்கள் இருக்கும்.

### பி.ஜே.பி. எதிர்க்கட்சியாக இருப்பதுபோல் பிரதமர் உரை நிகழ்த்தியது புரியாத புதிர்!

**செய்தியாளர் :** *நாடாளுமன்றத்தில் பிரதமர் உரை நிகழ்த்தியிருக்கிறார். பல்வேறு கருத்துக்களை தெரிவித்திருக்கிறார். அது தொடர்பாக, அந்த நிகழ்வுகளை எல்லாம் நீங்கள் பார்த்தீர்களா?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பார்த்தேன். படித்தேன். ரசித்தேன். சிரித்தேன். ஏனென்றால், பி.ஜே.பி. தான் எதிர்க்கட்சி போலவும், காங்கிரஸ் ஆளுங்கட்சி போலவும், அவர் தொடர்ந்து ஆட்சிக்கு வந்ததிலிருந்து, எதிர்க்கட்சியாக அவர் செயல்பட்டுக் கொண்டு, ஆளுங்கட்சியாக காங்கிரஸ் இருப்பது போல attack செய்வது போலவும் பேசிக் கொண்டிருக்கிறார். இதுதான் புரியாத புதிராக இருக்கிறது.

**செய்தியாளர் :** *பிரதம மந்திரி பேசும்போது 400 இடங்களை நாடாளுமன்றத் தேர்தலில் கைப்பற்றுவோம் என்று சொல்லி இருக்கிறார் அதுபற்றிய தங்களது கருத்து?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** மொத்தம் 400 தானா? 543 இடங்கள் இருக்கிறது. அதையும் கைப்பற்றுவேன் என்று சொன்னாலும் ஆச்சரியம் இல்லை.

### மக்களுக்கு தொண்டாற்ற யார் அரசியலுக்கு வந்தாலும் மகிழ்ச்சி!

**செய்தியாளர்:** *நடிகர் விஜய் அரசியல் கட்சித் தொடங்கி இருக்கிறார்? எப்படி பார்க்கிறீர்கள்?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :** மக்களுக்குத் தொண்டாற்ற யார் வந்தாலும் நான் மகிழ்ச்சி அடைவேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

---

**நாடாளுமன்றத்தில் பிரதமர் உரை ! பார்த்தேன், படித்தேன், ரசித்தேன், சிரித்தேன் !**

**செய்தியாளர் :** *நாடாளுமன்றத்தில் பிரதமர் உரை நிகழ்த்தியிருக்கிறார். பல்வேறு கருத்துக்களை தெரிவித்திருக்கிறார். அது தொடர்பாக, அந்த நிகழ்வுகளை எல்லாம் நீங்கள் பார்த்தீர்களா?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பார்த்தேன். படித்தேன். ரசித்தேன். சிரித்தேன். ஏனென்றால், பி.ஜே.பி. தான் எதிர்க்கட்சி போலவும், காங்கிரஸ் ஆளுங்கட்சி போலவும், அவர் தொடர்ந்து ஆட்சிக்கு வந்ததிலிருந்து, எதிர்க்கட்சியாக அவர் செயல்பட்டுக் கொண்டு, ஆளுங்கட்சியாக காங்கிரஸ் இருப்பது போல attack செய்வது போலவும் பேசிக் கொண்டிருக்கிறார். இது தான் புரியாத புதிராக இருக்கிறது.



சென்னை, செம்மொழிப் பூங்காவில் வேளாண்மை – உழவர் நலத் துறையின் தோட்டக்கலை – மலைப்பயிர்கள் துறை சார்பில், வருகின்ற 10ஆம் தேதி முதல் நடைபெறவுள்ள மலர் கண்காட்சி முன்னேற்பாடு பணிகளை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று (07.02 .2024) பார்வையிட்டு ஆய்வு செய்தார். முதன்மைச் செயலாளர் செல்வி, அபூர்வா, வேளாண்மை – உழவர் நலத்துறை அரசு சிறப்பு செயலாளர் முனைவர் பொ.சங்கர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன், மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### ஆயிரம் மோடிகள் ஒன்றுசேர்ந்தாலும் நாட்டின் வளர்ச்சியில்

# நேரு, இந்திராகாந்தியின் பங்களிப்பை மறைத்துவிட முடியாது!

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி அறிக்கை



சென்னை, பிப். 8 -

ஆயிரம் மோடிகள் ஒன்று சேர்ந்தாலும் நாட்டின் வளர்ச்சியில் ஜவகர்லால் நேரு, இந்திரா காந்தி ஆகியோரின் பங்களிப்பை மறைத்துவிட முடியாது” என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ். அழகிரி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மக்களவையில் நேற்று உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, ‘இந்திய மக்களின் திறமையை நேரு, இந்திரா காந்தி நம்பவில்லை, நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தனர்” என்று முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கிற வகையில் கோயபல்ஸ் பிரச்சாரத்தை தொடங்கியிருக்கிறார்.

குஜராத்தின் முதல்வராக இருந்த போது ஆயிரக்கணக்கான அப்பாவி இஸ்லாமியர்கள் படுகொலை செய்யபட்ட போது, நீரோ மன்னன் பிடில் வாசித்ததைப் போல வேடிக்கை பார்த்து, சிறப்புப் புலனாய்வு விசாரணையிலிருந்து தப்பி, இன்றைக்கு இந்தியாவின் பிரதமராக 10 ஆண்டுகளை நிறைவு செய்ய இருக்கிறார். அதற்குத் துணையாக இருந்த அமித்ஷா இன்றைக்கு உள்துறை அமைச்சராக இருக்கிறார். இத்தகைய பொறுப்புகளை இவர்கள் ஏற்றிருப்பது இந்தியாவிற்கே கேடு விளைவிக்கக் கூடியதாகும். அதைத் தான் இந்தியா இன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறது. பிரதமர் மோடி தொடர்ந்து வரலாற்றுத் திரிபு வாதங்களைச் செய்து வருகிறார். ஆயிரம் மோடிகள் ஒன்று சேர்ந்தாலும் இந்தியாவின் வளர்ச்சியில் பண்டித நேரு, இந்திரா காந்தி ஆகியோரது பங்களிப்பை இத்தகைய அவதூறு பிரசாரங்களி னால் மறைத்துவிட முடியாது.

இந்தியாவின் பிரதமராக 1947 ஆகஸ்ட் 15 இல் நேரு பதவியேற்ற போது, அன்று நள்ளிரவில் அவர் ஆற்றிய உரை இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையாக பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு இன்றைக்கும் மின்னிக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் பிரதமராக தில்லி செங்கோட்டையில் 17 முறை தேசியக் கொடியை ஏற்றி அற்புதமான உரைகளை நிகழ்த்தியவர் பண்டித நேரு. அதில் 1959 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று நிகழ்த்திய உரையை பிரதமர் மோடி திரித்துப் பேசியிருக்கிறார்.

இந்த உரையில் பிரதமர் நேரு ‘ஐரோப்பா, ஜப்பான், சீனா, ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளின் வளர்ச்சிக்குக் காரணம் கடுமையான உழைப்பு தான். கடின உழைப்பு நமக்குப் புதிதல்ல, இதற்கு எதிரான சோம்பல் நமது இயல்பு அல்ல. அறிவாலும், கடின உழைப்பாலும் நாமும் முன்னேறலாம். உழைப்பில்லாமல் உயர்வில்லை” என்று பேசியதைத் திரித்துப் பேசுவது பிரதமர் பதவியில் இருக்கும் மோடிக்கு அழகல்ல. இத்தகைய பேச்சுகளின் மூலம் நேருவின் புகழ் குறையாது. மாறாக, மோடியின் தரம் தான் குறையப் போகிறது. இதற்குக் காரணம், காங்கிரஸ் கட்சி மீது அவருக்கு இருக்கும் காழ்ப்புணர்ச்சி தான்.

**மோடியின் கல் நெஞ்சம்!**

பிரதமர் பதவியை நேரு ஏற்பதற்கு முன்பாக 1943 இல் வங்காள பஞ்சத்தில் 30 லட்சம் இந்தியர்கள் மடிந்தனர். குண்டூசி கூட தயாரிக்க முடியாத அவலநிலையிலிருந்த இந்தியாவில் 1947 இல் பிரதமராக பதவியேற்றார். 17 ஆண்டுக் காலத்தில் ஒருநாளைக்கு காலை 6.30 மணி முதல் நள்ளிரவு வரை 16 மணி நேரம் இடைவெளி இல்லாமல் இந்தியாவை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல கடுமையாக உழைத்த பண்டித நேரு மீது இத்தகைய கடுமையான விமர்சனத்தை மேற்கொள்வது மோடியின் கல் நெஞ்சத்தையே காட்டுகிறது. மாட்டு வண்டிகள் நிறைந்திருந்த நாட்டை அணுசக்தி நாடாகவும், விண்கலங்களை ஏவுகின்ற நாடாகவும் மாற்றிக் காட்டியவர் பண்டித நேரு. பஞ்சத்திலும், பட்டினியிலும் உழன்று கொண்டிருந்த நாட்டில் விவசாய உற்பத்திக்கு முன்னுரிமை வழங்கினார். 1954 இல் 740 அடி உயரம் கொண்ட உலகின் மிகப்பெரிய அணையை பக்ராநங்கலில் கட்டி 15 லட்சம் ஏக்கர் நீர்ப்பாசனத்தைப் பெருக்கி, 13 லட்சம் டன் கோதுமை உற்பத்தியை செய்து உணவு உற்பத்தியில் தன்னிறைவு எய்தியவர் பண்டித நேரு. எண்ணற்ற அணைகள், நீர்ப்பாசன திட்டங்கள் என்று சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

தொழிற்சாலைகளை பொதுத்துறையில் துவங்கினார். ரூர்கேலா, பிலாய், துர்காபூர் ஆகிய இடங்களில் உருக்கு ஆலைகளை நிறுவினார். பொதுத்துறை நிறுவனங்களை நவீன இந்தியாவின் கோயில்கள் என்று அழைத்து மகிழ்ச்சி அடைந்தார். நேரு வளர்த்த பொதுத் துறையை இன்றைக்கு தனியார் முதலாளிகளுக்குத் தாரை வார்த்து பிரதமர் மோடி அழித்துக் கொண்டிருக்கிறார். 1960 இல் மோடி பிறந்த குஜராத் மாநிலத்தில் அங்லேஷ்வரில் முதல் முதலாக எண்ணெய் கிணறு தோண்டப்பட்டு அந்த சோதனையை நேரில் பார்த்து அளவற்ற மகிழ்ச்சி அடைந்தவர் பண்டித நேரு. அவரது கண்டுபிடிப்பு தான் ஓ.என்.ஜி.சி., ஆயில் இந்தியா, எரிவாயு உற்பத்திக்கு வழிவகுத்த பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன். அவர் தொடங்கிய ஏர் இந்தியா, இந்தியன் ஏர் லைன்ஸ், ஆயுள் காப்பீட்டு கழகம் போன்ற பொதுத் துறை நிறுவனத்தை தனியார் முதலாளிகளுக்கு அள்ளிக் கொடுத்த மோடி, பிரதமர் நேருவைப் பற்றிப் பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது ?

**அணி சேரா நாடுகளின் அமைப்பு!**

1959 இல் கிண்டியில் ஐ.ஐ.டி. தொடங்கி, கான்பூர், தில்லி என 5 ஐ.ஐ.டி. நிறுவனங்களை உருவாக்கியவர் பிரதமர் நேரு. அறிவியல் துறையில் வளர்ச்சியின் மூலம் பாபா அணு ஆராய்ச்சி மையம், அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சிக் குழுமம் என இந்தியாவை வளர்த்தெடுத்தவர் பண்டித நேரு. இட ஒதுக்கீட்டின் மூலம் சமூக நீதியைக் காக்க 1951 இல் அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தம் கொண்டு வந்தவர். தீண்டாமை குற்றச் சட்டம், குடியுரிமை சட்டத்தை நிறைவேற்றியவர். வெளியுறவுக் கொள்கையில் வல்லரசுகளுக்கு எதிராக அணிசேரா நாடுகளின் அமைப்பை உருவாக்கியவர்.

பண்டித நேருவை விமர்சனம் செய்கிற அதேநேரத்தில் அன்னை இந்திரா காந்தியையும் விமர்சனம் செய்திருக்கிறார். இந்தியாவின் பிரதமராக 15 ஆண்டுகள் பொறுப்பேற்று வங்கிகள் தேசியமயம், மன்னர் மானியம் ஒழிப்பு, வங்கதேச போர் வெற்றி, இந்தியாவின் முதல் அணுகுண்டு சோதனையை பொக்ரானில் நிகழ்த்தியவர், முதல் விண்வெளி பயணத்தின் மூலம் முதல் இந்தியராக ராகேஷ் சர்மாவை அனுப்பி சாதனை படைத்தவர். வெளி நாட்டுக் கொள்கையில் அரசியல் பேராண்மையோடு செயல்பட்டவர். இந்திய சோவியத் நட்புறவு ஒப்பந்தம் கண்டவர், வங்கதேச வெற்றிக்காக வாஜ்பாய் அவர்களால் துர்காதேவி என்று அழைக்கப்பட்டவர். இத்தகைய வரலாற்றுச் சாதனைகள் படைத்தவர்களை பிரதமர் மோடி கொச்சைப்படுத்துவதை நாட்டு மக்கள் எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

**தியாக வரலாறு இல்லாத மோடி!**

1947 ஆகஸ்ட் 15, ஜனவரி 26, 1950 ஆகிய இரு நாட்களை தவிர, தொடர்ந்து 22 ஆண்டுக்காலம் ஆர்.எஸ்.எஸ். தலைமை அலுவலகத்தில் தேசியக் கொடியை ஏற்றாத, அது ஒரு துண்டு துணி என்று கொச்சைப்படுத்திய பாரம்பரியத்தில் வளர்ந்த பிரதமர் மோடி, காங்கிரஸ் பாரம்பரிய தலைவர்களை இழிவுபடுத்துவதற்கு எந்தத் தகுதியும் கிடையாது. காங்கிரஸ் தலைவர்கள் செய்த தியாகங்களுக்கு இணையாக ஆர்.எஸ்.எஸ். வழிவந்த தலைவர்களில் எவரது பெயரையாவது மோடியால் ஒப்பிட்டுக் கூற முடியுமா ? அத்தகைய தியாக வரலாறு இல்லாத பின்னணியில் வந்த பிரதமர் மோடி, இந்தியாவின் விடுதலைக்காகவும், நவீன இந்தியாவின் வளர்ச்சிக்காகவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட பண்டித நேரு, இந்திரா பாரம்பரியத்தைச் சிதைத்து விட்டால் தலைவர் ராகுல் காந்தியின் எழுச்சியைத் தடுத்து விடலாம் என்று கனவு காண்கிறார். ஆனால், ராகுல் காந்தி அவர்கள் மக்களோடு மக்களாக, மக்களுடன் உரையாடி, மக்களின் உணர்வுகளை அறிந்து கொள்கிற மாபெரும் ஒற்றுமை பயணத்தை நீதி கேட்டு மேற்கொண்டு வருகிறார்.

எனவே, கடந்த 9 ஆண்டுகளில் 117 லட்சம் கோடி கடன் வாங்கி இந்திய பொருளாதாரத்தை திவாலான நிலைக்கு அழைத்துச் செல்கிற பிரதமர் மோடி அவர்களே, இந்திய மக்களின் வாழ்வாதாரத்தைச் சீர்குலைப்பதைத் தடுத்து நிறுத்த முயற்சி செய்யுங்கள். அதல பாதாளத்திற்கு சென்று கொண்டிருக்கிற ரூபாயின் மதிப்பைத் தடுத்து நிறுத்துங்கள். மக்களுக்காக ஆட்சி செய்யாமல் அதானி, அம்பானியை வளர்க்க முயற்சி செய்கிறீர்கள். தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடைகளைக் குவித்து ஊழலை வளர்க்காதீர்கள். இந்தியப் பொருளாதார பேரழிவுக்கு வித்திட்ட பிரதமர் மோடிக்கு 2024 மக்களவை தேர்தலில் மக்கள் நிச்சயம் பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு கே.எஸ்.அழகிரி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலத்திற்கு உட்பட்ட பழைய பெருங்களத்தூர் 55வது வார்டு சமத்துவ புர சாலையில் உள்ள மங்கலேரி குளத்தை சீரமைக்க மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட அம்ருத் 2.0 என்ற திட்டத்தை ரூ.1 கோடியே 40 லட்சம் செலவில் சீரமைப்புப் பணி தொடங்கப்பட்டது. இதில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா. எம்,எல்,ஏ அவர்களும் மாநகர மேயர்.வசந்தகுமாரி கமலகண்ணன், ஜி.காமராஜ், பகுதிச் செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.சேகர், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள்,பகுதி நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் அதிகாரிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர் .

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. இராசாராம்

**பிப்ரவரி 8 (2008)**



**சேலம் மாவட்டத்தில் தொடக்கக் காலத்தில் கழகத்தை வளர்க்க அரும்பாடுபட்டவர்.**


**திராவிட இயக்க மூத்த முன்னோடிகளில் ஒருவராகவும் – தந்தை பெரியார் அவர்களின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவராகவும் விளங்கினார்.**

**இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் 1971ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை அமைச்சராகப் பணியாற்றியவர்.**

**1980 முதல் 1984 வரை தமிழக சட்டமன்ற பேரவையின் தலைவராகவும் பணியாற்றினார்.**

**பேறிஞர் அண்ணா அவர்கள் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றபோது இவரும் உடன் சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



கழக நாடாளுமன்றக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களிடம் தூத்துக்குடியில் மழை வெள்ள பாதிப்பு நிவாரணப் பணிகளுக்காக நிவாரண நிதியாக ரூ.1 இலட்சம் நிதியை தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற செயலாளர் விஜயா தாயன்பன் வழங்கினார்.

# முதுநிலை கியூட் தேர்வை தமிழிலும் நடத்த வேண்டும்!

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை



புதுடெல்லி, பிப். 8 -

தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் விதி எண் 377 இன் கீழ் கியூட் தேர்வு தொடர்பான கோரிக்கையை முன் வைத்தார்.

அந்த கோரிக்கை வருமாறு:

முதுநிலை கியூட் 2024 தேர்வு மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. இதில் COQP11(சட்டம்) மற்றும் COQP12(எம்.பி.ஏ.) ஆகிய பாடத் தேர்வுகள் தற்போது ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் மட்டுமே நடத்தப்படுவதாக தெரிய வந்துள்ளது. இது, தமிழ் பேசும் மாணவர்கள் தேர்வில் பங்கேற்பதை தடுக்கிறது. அவர்களின் கல்வி வாய்ப்புகளை பாதிக்கிறது. நமது ஜனநாயக விழுமி யங்களில் பொதிந்துள்ள சமத்துவம் மற்றும் சமூக நீதியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு ஏற்ப, மொழியியல் உள்ளடக்கத்தின் முக்கி யத்துவத்தை ஒப்புக்கொள்வது அவசியம்.

தேசிய தேர்வு முகமை நடத்தும் நீட் தேர்வு கூட13 வெவ்வேறு இந்திய மொழிகளில் நடத்தப்படுகிறது. கல்வி வாய்ப்புகளில் நியாயமான மற்றும் சமமான அணுகலை உறுதிப்படுத்த வேண்டும்.

எனவே நான் குறிப்பிட்ட கியூட் தேர்வுகளை தமிழ் மற்றும் அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள பிற பிராந்திய மொழிகளில் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்தார்.

### புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாதவரம் –

# வடபெரும்பாக்கம் அரசு பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

சென்னை, பிப்.8-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், 17வது வட்டம் அரசு பள்ளி மாணவர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு தேர்வு அட்டை, நோட்டு புத்தகம், பென்சில், பேனா, ரப்பர், ஜாமென்ட்ரி பாக்ஸ் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன. அனைத்து மாணவர்களுக்கும் இனிப்பு வழங்கப்பட்டன.

மேலும் இப்பள்ளியில் படிக்கின்ற மாணவ மாணவிகளின் 15 பேர் பீகார், ஒரிசா, நேபாளம் மற்றும் வெளிமாநில மாணவ மாணவிகள் ஆக உள்ளனர். இவர்களது பெற்றோர்கள் மாதவரத்தில் தங்கி வேலை செய்வதால் இவர்கள் அரசு பள்ளியில் படித்து வருகின்றனர். இவர்களுக்கு பாட்டுப் போட்டி நடத்தப்பட்ட போது தமிழில் தமிழ் தாய் வாழ்த்து மற்றும் பாட புத்தகத்தில் உள்ள அனைத்து தமிழ் பாடங்களையும் பார்த்து படிக்கும் அளவிற்கு மாணவர்களை ஆசிரியர் பெருமக்கள் உருவாக்கி இருக்கிறார்கள் என்பதை அறிந்த, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஆசிரியர்களுக்கு தனது பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு 17வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமை தாங்கினார்.

17 வது வட்டக் கழக நிர்வாகிகள் சி.பாலாஜி, சி. மூர்த்தி, வி.பார்த்தசாரதி, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எஸ்.சிவகுமார், வடபெரும்பாக்கம் எம்.மைக்கேல், பி.செந்தில், கமலநாதன், எஸ்.சதீஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் கே. சண்முகபிரியன், டி.வினோத், கே.ராஜ்குமார், எச். பீர்முகமது, என். நாகராஜன், வட பெரும்பாக்கம் கார்த்திக், ஜி.முனிவேல், ஜி.செல்வம், எஸ்.சதீஷ்குமார், சுரேஷ், சுதர்சன், பூபாலன், வில்சன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !



### நிதியை தராவிடில் 'தனிநாடு' கோரிக்கை எழுப்புவோம்

மத்திய அரசு தொடர்ந்து நிதி தராமல் இழுத்தடித்தால், தென்னிந்திய மாநிலங்கள் இணைந்து தனிநாடு கோரிக்கையை எழுப்புவோம் என்று கர்நாடக எம்.பி டி.கே. சுரேஷ் பேசியது அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இடைக்கால பட்ஜெட்டை விமர்சித்த அவர், தென்னிந்திய மாநிலங்களுக்கு ஜிஎஸ்டி மற்றும் நேரடி வரிகளில் சரியான பங்கை மத்திய அரசு சரியாக வழங்குவதில்லை. இந்த மாநிலங்கள் அநீதியை சந்தித்து வருவதாக கூறியுள்ளார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (07.02.2024) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் செயல்படும், தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களின் படைப்புத் திறன்களை வெளிக்கொணரும் வகையில் மாநில அளவில் வெற்றி பெற்ற பயிற்சியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ரொக்க பரிசுக்கான காசோலைகளை வழங்கினார். உடன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






திருச்சி தேசிய கல்லூரியில் விளையாட்டில் மறுமலர்ச்சிக்கான சர்வதேச மாநாட்டை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

## விளையாட்டு அறிவியல் துறையில்

# தமிழ்நாட்டை உலக அளவில் எடுத்துச் செல்ல நடவடிக்கை!

## திருச்சியில் நடைபெற்ற – ‘விளையாட்டில் மறுமலர்ச்சிக்கான சர்வதேச மாநாட்டில்’ அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

**திருச்சி, பிப்.8–**

**‘‘விளையாட்டு அறிவியல் துறையில் தமிழ்நாட்டை உலக அளவில் எடுத்துச் செல்ல அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது’’ என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் நடைபெற்ற விளையாட்டில் மறுமலர்ச்சிக்கான சர்வதேச மாநாட்டில் உரையாற்றும்போது கூறினார்.**

விளையாட்டில் மறுமலர்ச்சிக்கான சர்வதேச மாநாடு (International Congress On Renaissance in Sports) திருச்சி தேசிய கல்லூரியில் 7ஆம் தேதி (நேற்று) தொடங்கி 11 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. அறிவியல் துணையுடன் விளையாட்டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது குறித்த இந்த மாநாட்டில் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வல்லுநர்கள் பலர் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கிவைத்து உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

“அனைவருக்கும் இனிய மாலை வணக்கம். ‘விளையாட்டில் மறுமலர்ச்சிக்கான சர்வதேச மாநாடு’ நமது தமிழ்நாட்டில், திருச்சியில் நடைபெறுவது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாநாடு இவ்வளவு சிறப்பாக நடக்க உழைத்த அனைவருக்கும் இந்த நேரத்தில் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் விளையாட்டு வரலாற்றில் நாம் மிகவும் முக்கியமான காலகட்டத்தில் உள்ளோம். தொழில்நுட்ப முன்னேற்றம், சமூக மாற்றங்கள் உள்ளிட்ட காரணங்களால் விளையாட்டுக் களங்கள் தொடர்ந்து பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வரும் நேரத்தில், நாம் பல சவால்களைச் சந்தித்து, பல புதுமைகளை மேற்கொண்டு வருகிறோம்.

இந்த மாநாட்டின் கருப்பொருள், ‘நவீன விளையாட்டுக்களில் மறுமலர்ச்சிக்கான திட்டங்கள், சவால்கள் மற்றும் வாய்ப்புகள்’ என்பதாகும். இதன் பொருள் விளையாட்டில் மறுமலர்ச்சி உண்டாக வேண்டுமென்றால், நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்பதுதான். அதை எப்படி மேற்கொள்வது என்பதை ஆராய்வதற்குத்தான் நாம் அனைவரும் இங்கே கூடியிருக்கிறோம்.

### ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்!

இதைச் சாத்தியப்படுத்துவதற்கான முதல்படி, புதுமையான மற்றும் செயல்படுத்தக் கூடிய வடிவிலான திட்டங்களைத் தீட்டி, அவற்றை நடைமுறைப்படுத்தும் போது நமக்கு ஏற்படும் சவால்களை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்காக விளையாட்டு, அறிவியல், தொழில்நுட்பம், உளவியல், பொருளியல் போன்ற பல்துறை நிபுணர்கள் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்.

இதன் ஒரு பகுதியாக, விளையாட்டு மற்றும் அறிவியலை ஒன்றிணைத்துச் செயல்படுவதற்கு, தமிழ்நாடு அரசின் விளையாட்டுத் துறை சார்பாக ‘டாஸ்கான் 2023’ எனும் சர்வதேச விளையாட்டு அறிவியல் மாநாட்டை கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்தினோம். அதில், உலகம் முழுவதிலும் இருந்து விளையாட்டு வல்லுநர்கள், வீரர்கள், பயிற்சியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### மதுரையில் சர்வதேச விளையாட்டு அறிவியல் மையம்!

அறிவியல், தொழில்நுட்பம், விளையாட்டு ஆகிய மூன்றையும் ஒரே புள்ளியில் இணைக்க, கருத்துகளும் ஆலோசனைகளும் பரிமாறிக்கொள்ளப்பட்டன. மேலும் மதுரையில், சர்வதேச விளையாட்டு அறிவியல் மையம் ஒன்றை ‘தமிழ்நாடு புத்தாக்க முன்னெடுப்புத் திட்ட’த்தின் கீழ் அமைத்துள்ளோம்.

இந்த மாநாட்டில் பல்வேறு தலைப்புகளின் கீழ் விவாதங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. விளையாட்டில் ஏற்பட்டுள்ள டிஜிட்டல் புரட்சி முதல் விளையாட்டுத் துறை சார்ந்த சமீபத்திய ஆய்வுகள் வரை நிபுணர்கள் தங்களின் கருத்துகளை வழங்க இருக்கிறார்கள். விளையாட்டுத் துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், அதற்கேற்றாற் போன்ற புதுமையான பயிற்சி முறைகள் மற்றும் அவற்றைச் செயல்படுத்துவதில் உள்ள சவால்களை எப்படி எதிர்கொள்வது போன்ற விஷயங்கள் குறித்துப் பேசப்பட உள்ளன.



> “இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ்நாடு இன்று விளையாட்டுத் துறைக்கான தலைநகரமாக வளர்ந்து வருகிறது. தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்திய ஒன்றியத்தையே உலகின் விளையாட்டுத் தலைநகரமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் தமிழ்நாடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் ஏராளமான சர்வதேசப் போட்டிகள், தேசியப் போட்டிகள் ஆகியவற்றை தமிழ்நாட்டில் நாம் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.”

### விளையாட்டுச் சூழலை ஏற்படுத்த வேண்டும்!

இந்த மாநாட்டின் மூலம் பரஸ்பரம் சிந்தனைகளைப் பரிமாறிக் கொள்ளுதல், புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றை மேற்கொள்ளும் அதே சமயத்தில், இந்த மாநாட்டின் முக்கிய நோக்கத்தையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அனைவரையும் உள்ளடக்கிய, அனைவரையும் சமமாக பாவிக்கும், தங்கு தடையற்ற வளர்ச்சி ஆகியவற்றைக் கொண்ட ஒரு விளையாட்டுச் சூழலை நாம் ஏற்படுத்த வேண்டும் என்பதே அது!

இந்த மாநாட்டில் சுமார் 40 நாடுகளில் இருந்து வந்துள்ள விளையாட்டுத் துறை அறிஞர்கள் தங்களின் அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் பகிர்ந்துகொள்ள இருக்கிறார்கள். இந்தத் தருணத்தில், விளையாட்டுத் துறை மேம்பாட்டுக்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பற்றிக் கூறுவது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ்நாடு இன்று விளையாட்டுத் துறைக்கான தலைநகரமாக வளர்ந்து வருகிறது. தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்திய ஒன்றியத்தையே உலகின் விளையாட்டுத் தலைநகரமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் தமிழ்நாடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் ஏராளமான சர்வதேசப் போட்டிகள், தேசியப் போட்டிகள் ஆகியவற்றை தமிழ்நாட்டில் நாம் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

### 6-வது கேலோ இந்தியா போட்டிகள்!

இதோ இப்போதுகூட, 6வது கேலோ இந்தியா போட்டிகளை நாம் நடத்தி முடித்து ஒரு வாரம் ஆகிறது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த சுமார் 5 ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட வீரர்களை இங்கே தங்க வைத்து, உபசரித்து, கவனித்துக் கொண்டது. சென்னை, திருச்சி, கோவை மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் அந்தப் போட்டிகள் 12 நாட்களுக்கு நடைபெற்றன. மேலும் பதக்கப் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாவது இடம் பிடித்தது. ‘கேலோ இந்தியா’ போட்டி வரலாற்றில், தமிழ்நாடு பதக்கப் பட்டியலில் முதல் மூன்று இடங்களுக்குள் வருவது இதுவே முதல் முறை என்பதைப் பெருமையுடன் நான் இங்கே கூற விரும்புகிறேன்.

### மணிப்பூர் வீரர்களுக்கு முதல்வர் அழைப்பு!

விளையாட்டு வீரர்களுக்கு ஒரு தேவை என்றால், உடனடியாகக் களத்தில் இறங்கி உதவுகின்ற அரசுதான் நமது ‘திராவிட மாடல் அரசு’ மற்றும் நமது முதலமைச்சர் அவர்கள். சமீபத்தில், மணிப்பூரில் ஏற்பட்ட கலவரங்களால் அங்குள்ள விளையாட்டு வீரர்கள் முறையாகப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியவில்லை. எனவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த வீரர்களுக்கு தமிழ்நாட்டில் வந்து பயிற்சி பெற அழைப்பு விடுத்தார்கள்.

அந்த அழைப்பை ஏற்று 15 வாள்வீச்சு வீரர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து பயிற்சி பெற்றார்கள். அவர்களுக்கான விமானப் பயணச் செலவு, உணவு, தங்குமிடம் போன்ற அனைத்து செலவினங்களையும் நமது கழக அரசே ஏற்றுக்கொண்டது. அப்படி பயிற்சி பெற்ற இரு வீரர்கள், நடந்து முடிந்த ‘கேலோ இந்தியா’ போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்கள். அவர்கள் பதக்கம் வென்றாலும், அதற்குக் காரணமும் நம்முடைய தமிழ்நாடு அரசுதான்.

அது மட்டுமல்ல. நாம் 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டி, ஆசியக் கோப்பை ஹாக்கி போட்டி, ஸ்குவாஷ் உலகக் கோப்பை போட்டி, உலக அலைச்சறுக்கு போட்டி, சைக்கிள் பந்தயப் போட்டி, தேசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி, சென்னை செஸ் மாஸ்டர்ஸ் ஆகிய போட்டிகளையும் வெற்றிகரமாக நடத்திக் காட்டினோம்.

### மாற்றுத்திறனாளி வீரர்களும் சாதிக்க உதவி!

மேலும், விளிம்புநிலையில் உள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த விளையாட்டு வீரர்களுக்கு உதவும் வகையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’யை ஏற்படுத்தினார்கள். அந்த அறக்கட்டளையின் மூலம் இதுவரை 100 வீரர்களுக்கு ரூ.18 கோடி நிதி உதவி அளித்துள்ளோம். இதில் இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இவ்வாறு உதவி பெற்றுச் செல்லும் ஒவ்வொரு வீரரும் பதக்கத்துடன் திரும்பி வந்து எங்களைச் சந்திக்கிறார்கள். எல்லா விளையாட்டு வீரர்களையும் போல, மாற்றுத் திறனாளி வீரர்களும் விளையாட்டுத் துறையில் சாதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர்களுக்கும் தமிழ்நாடு அரசு நிதி உதவி அளித்து ஊக்கப்படுத்தி வருகிறது.

மேலும், விளையாட்டுத் துறையில் பொதுமக்களையும் ஈடுபடுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் ‘தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை’ விளையாட்டுப் போட்டிகளை நடத்தினோம். அதில் சுமார் 3.75 இலட்சம் பேர் பங்கேற்று தங்கள் விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தினார்கள். அந்தப் போட்டி முதல் முறையாக ஐந்து பிரிவுகளில் நடத்தப்பட்டது. அந்தப் போட்டிகள் மூலம், கிராமப்புறங்களில் உள்ள திறமை மிக்க விளையாட்டு வீரர்களை அடையாளம் காண முடிந்தது.

### மும்பையில் இன்று விழா!

இது மட்டுமல்லாமல், கடந்த டிசம்பர் மாதம், ‘விளையாட்டுத் துறையை மிகச் சிறப்பாக வளர்த்தெடுக்கும் மாநிலம்’ என்ற விருதை இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பு தமிழ்நாட்டுக்கு வழங்கியது. இன்னொரு முக்கியமான செய்தியையும் நான் இங்கே பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். ‘தி இந்து’ ஆங்கிலப் பத்திரிகைக் குழுமத்தில் இருந்து வெளிவரும் ‘ஸ்போர்ட்ஸ் ஸ்டார்’ இதழ், ‘விளையாட்டுத் துறையைச் சிறப்பாக ஊக்கப்படுத்தி வரும் மாநிலம்’ என்ற அங்கீகாரத்தை தமிழ்நாட்டுக்கு வழங்கியுள்ளது. விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு அரசுக்கு உள்ள ஈடுபாட்டையும், அதற்குச் செலுத்துகின்ற உழைப்பையும் இந்த விருதுகள் பிரதிபலிக்கின்றன. அந்த விருது பெறும் விழா மும்பையில் நாளை (இன்று) நடைபெற உள்ளது. அதற்கு நாங்கள் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு பல சாதனைகளைச் செய்து வரும் இந்த வேளையில், இங்கு நடைபெறும் இந்த மாநாடு, தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையை இன்னும் பல உயரங்களுக்கு எடுத்துச் செல்லும் என்பதில் எனக்குச் சிறு அளவும் சந்தேகமில்லை. உடல்நலம் மற்றும் உடற்பயிற்சி ஆகியவற்றை ஊக்கப்படுத்தும் முகமாக, விளையாட்டு அறிவியல் துறையில் நமது மாநிலத்தை உலக அளவில் எடுத்துச் செல்ல இந்த மாநாடு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்த மாநாட்டின் வெற்றிக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் சவுந்திர பாண்டியன், காடுவெட்டி தியாகராஜன், ஸ்டாலின் குமார், முத்துராஜா, பழனியாண்டி, கதிரவன், திருச்சி மாநகர மேயர் அன்பழகன், துணை மேயர் திவ்யா, திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், தேசிய கல்லூரி செயலர் ரகுநாதன், கல்லூரி முதல்வர் கே.குமார், விளையாட்டு வீரர்கள் ஹாக்கி ஒலிம்பிக் வீரர் பாஸ்கரன், நீச்சல் வீரர் ஸ்ரீராம் சீனிவாசன், கேலோ ரோட் சைக்கிளிங் வீரர் கிஷோர், குத்துச்சண்டை வீராங்கனை அக்ஷயா, மல்லர் கம்ப வீரர் ஹரீஷ் ராகவ், ஈட்டி எறிதல் வீரர் கோபிநாதன் மற்றும் ஐ.சி.ஆர்.எஸ் மாநாட்டு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் நேற்று (07.02.2024) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையின அந்தஸ்து வழங்குவது தொடர்பாக வலைத் தளத்தை (Web Portal) தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணை தலைவர் குத்தூஸ் இறையன்பன், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் ஆணையர் வா.சம்பத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வருகிற 12ம் தேதி வரை

# தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவும்!

சென்னை, பிப். 8–

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று (08.02.2024) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டத்திற்கு வாய்ப்புள்ளது.

(09.02.2024 முதல் 12.02.2024 வரை) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

(13.02.2024) தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவைமற்றும்காரைக் கால்காரைக்கால்பகுதிகளிலும்லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலைவேளையில் லேசான பனிமூட்டத்திற்கு வாய்ப் புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 31–32 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்சவெப்பநிலை 22–23 டிகிரிசெல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இவ்வாறுஅதில்கூறப்பட்டுள்ளது.



செனாய் நகரில் உள்ள திரு.வி.க. மேல்நிலைப் பள்ளியில் 68 வது பள்ளி ஆண்டு விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக அண்ணாநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் கடந்த ஆண்டு நடைபெற்ற அரசு பொதுத்தேர்வில் 10, 11 மற்றும் 12 ம் வகுப்பில் பள்ளி அளவில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்களுக்கு ரொக்கப் பரிசும், கேடயத்துடன் கூடிய சான்றிதழ்களும், நூல்களும் வழங்கி வாழ்த்தினார். மேலும் பல்வேறு துறைகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. சிறப்பு விருந்தினர் அவர்கள் தனது சொந்த நிதியிலிருந்து பள்ளியில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் (700 பேர்) பரிசுப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். மேலும் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கும், பொன்னாடை அணிவித்து சிறப்பித்ததோடு புத்தாடையுடன் பரிசு பொருட்களையும் வாங்கி சிறப்பாகப் பணியாற்ற வாழ்த்தினார். இவ்விழாவிற்கு பள்ளி ஆட்சி மன்றக் குழுத் தலைவர் பேராசிரியர் டாக்டர் வேதகிரி சண்முகசுந்தரம் தலைமை தாங்கினார். பள்ளி ஆட்சிக் குழுச் செயலாளர் டாக்டர் பி.எஸ்.திருவதனன் முன்னிலை வகித்து வரவேற்புரை நல்கினார். ஆண்டறிக்கையினைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் கே.ஜான் வாசித்து வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது.

“நீண்ட வருட சிறைவாசிகளான 10 இஸ்லாமிய சிறைவாசிகளின் விடுதலை!

# முதலமைச்சருக்கு சிறுபான்மையின மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றி!

## கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் நடைபெற்ற மாவட்ட, நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப். 8 -

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 06-02-2024 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் எம்.எஸ் (ஆர்த்தோ) தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு துணைச் செயலாளர்கள் அன்வர்கான், விஜயகுமார், முனவர்ஜான், அடையாறு ஷபீல், ரஃபி அகமது, மு.ஷாகுல் அமீது மற்றும் கழக மாவட்டங்களின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

முதலாவதாக, கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மயிலாடுதுறை மாவட்ட தலைவர் எஸ்.ஸ்கொயர்.சாதிக் மறைவையொட்டி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர், 2021ல் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து இஸ்லாமிய சிறைவாசிகளின் விடுதலைக்கு தொடர் முயற்சிகள் மேற்கொண்டதன் விளைவாக 05-02-2024 அன்று 10 இஸ்லாமிய சிறைவாசிகளின் விடுதலைக்கு வழிவகுத்த ‘எல்லார்க்கும் எல்லாம்’ எனும் திராவிடமாடல் அரசின் முதலமைச்சர் அவர்களுக்கு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

அதேபோல், சிறுபான்மையின மக்களின் நெடுநாள் கோரிக்கைகளான புதிய பள்ளிவாசல் மற்றும் தேவாலயங்கள் கட்டுதல், ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதி வழங்குதல், புதிய அடக்க ஸ்தலங்களுக்கான இடம் வழங்குதல் மற்றும் நீண்ட ஆண்டுகளாக சிறையில் வாடும் இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றும் பொருட்டு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைத்து இஸ்லாமிய மற்றும் கிறிஸ்துவ சிறுபான்மையின மக்களின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவுச் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் பேசுகையில், நடைபெறவுள்ள 2024 நாடாளுமன்ற தேர்தலில் பாசிச பா.ஜ.க உடனான கூட்டணி முறிவு எனும் நாடகம் போட்டு சிறுபான்மையின மக்களின் வாக்குகளை பெற கபட நாடகத்தை அரங்கேற்றி கொண்டிருக்கும் எடப்பாடி பழனிசாமியின் சூழ்ச்சியை தகர்த்தெறியும் பொருட்டு, கடந்த மக்கள் விரோத அ.தி.மு.க அரசால் சிறுபான்மையின மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகங்களையும், நமது கழக அரசு சிறுபான்மையின மக்களுக்கு செய்துவரும் எண்ணற்ற தொடர் சாதனைகளையும் அனைத்து சிறுபான்மையின மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டி கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் அனைத்து இஸ்லாமிய மற்றும் கிறிஸ்துவ கூட்டமைப்புகளை சந்தித்து மண்டல வாரியாக கருத்தரங்கம் நடத்திட வேண்டும்.

இவ்வாறு அவர் கேட்டுக்கொண்டார்.

கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா தலைமையில்

# ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து டெல்லியில் மாபெரும் போராட்டம்!

## மாநிலங்களுக்கான நிதி பகிர்வை பாரபட்சமின்றி வழங்கிடக்கோரி முழக்கம் !

புதுடெல்லி, பிப். 8–

ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து கர்நாடக மாநில அரசு சார்பில் முதலமைச்சர் சித்தராமையா தலைமையில் டெல்லி ஜந்தர் மந்தரில், நிதி கேட்டு போராட்டம் நடைபெற்றது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு, மாநிலங்களுக்கான நிதி பகிர்வில் பாரபட்சம் காட்டுவதாக கூறி, கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா தலைமையில் போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்தில், கர்நாடக துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார், பிரியங்க் கார்கே உள்ளிட்ட கர்நாடக அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

போராட்டத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களும் எழுப்பப்பட்டன. அப்போது செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா, கர்நாடக மக்களின் உரிமை நிலை நாட்டப்படும் என நம்புவதாகவும் கூறியுள்ளார்.

மேலும் எங்களது போராட்டத்திற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு செவி சாய்க்கும் என நம்புகிறேன். கன்னடர்கள் மற்றும் கர்நாடக மாநிலத்தின் உரிமை நிச்சயம் நிலைநாட்டப்படும் என்றும் கூறினார்.

கர்நாடக துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார் - கூறுகையில் எங்களது உரிமைக்காகவே நாங்கள் போராடுகிறோம் . ஒன்றிய அரசின் நிதிப்பகிர்வில் எங்களுக்கு 13% மட்டுமே கிடைக்கிறது. நிதி பகிர்வில் குஜராத் போன்ற மாநிலங்கள் பயன் அடைகின்றன. அதுகுறித்து நான் பேசவில்லை. தமிழ்நாடு, தெலுங்கானா, மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு உரிய நிதியை வழங்கிட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**கர்நாடக காங்கிரஸ் எம்.பி.க்கள் போராட்டம்!**

ஒன்றிய பா.ஜ.க. அரசு, மாநிலங்களுக்கான நிதி பகிர்வில் பாரபட்சம் காட்டுவதாக கூறி, டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை அருகே, கர்நாடக காங்கிரஸ் எம்.பி.க்கள் போராட்டம் நடத்தினர்.

இன்று - இந்திய கம்யூனிஸ்ட் - மார்க்சிஸ்ட் ஆர்ப்பாட்டம்!

# சென்னை மேற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

சென்னை, பிப்.8-

சி.பி.ஐ. (எம்) - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் உள்ள ஆளுநர்களைக் கண்டித்து நடைபெறும் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகப் பங்கேற்பீர் என்று மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு :

கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி சி.பி.ஐ. (எம்) - மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் உள்ள ஆளுநர்களைக் கண்டித்து நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் அருகில் இன்று (08.02.2024) காலை 09.30 மணியளவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் செல்வா தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

ஆகவே, இந்த ஆர்ப்பாட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர் / துணை அமைப்பாளர்கள், பகுதி / வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் ஆகிய அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று ஆர்ப்பாட்டத்திற்கு தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் - மாதவரம்

# தியாகதீபம் மா.பொ.வேதா 42ஆம் ஆண்டு நினைவுநாள் - அமைதிப் பேரணி!

## டி.ராமகிருஷ்ணன் - மிசா பா.மதிவாணன் - கே.பி.சங்கர் - எஸ்.நந்தகோபால் - ஜி.துக்காராம் பங்கேற்பு!

சென்னை, பிப்.8-

மாதவரம் தெற்கு பகுதி தி.மு.க. மற்றும் தியாக தீபம் மா.பொ.வேதா நினைவு மன்றம் சார்பில் மாதவரம் நகரச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்த தியாக தீபம் மா.பொ.வேதாவின் 42ஆம் ஆண்டு நினைவு நாள் மற்றும் அமைதிப் பேரணி இன்று (8.2.2024 -



வியாழக்கிழமை) காலை 8.30 மணியளவில் மாதவரம் அண்ணா சிலை, கணகன் சத்திரம் ஜி.என்.டி. சாலையிலிருந்து அமைதிப் பேரணி புறப்பட்டு நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தப்படுகிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் டி.ராம கிருஷ்ணன், மிசா. பா.மதிவாணன், கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., எஸ்.நந்தகோபால், ஜி.துக்காராம், புழல் எம். நாராயணன், எம்.பிரேம்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், எம்.அறிவழகி, எம். ஆனந்தன், தி.மு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், வை.ம. அருள்தாசன், பெ.சரவணன், ஜி.தயாளன், மீ.வே. கர்ணாகரன், ஜி.ராஜேந்திரன், வீ.கண்ணதாசன், வீ.கணேசன், என்.பரந்தாமன், ஜெ. ஜெய் மதன், இரா. முருகேசன், டி.ஏ.ராஜி, பி.சாந்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மு. சிவக்குமார், பி.தமிழரசன், கே.பி.சொக்கலிங்கம், டி. சி.வி.ராஜகுமாரி, உமா சரவணன், சரண்யா கலைவாணன், சுசிலா ராஜா, பானுமதி சந்தர், நந்தினி சண்முகம், ஜி.ராஜேந்திரன், கே. காசிநாதன், ஜே.ஆஸ்னா மெரிசியா, ஏ.சந்திரன், எஸ்.கனிமொழி சுரேஷ், டி.கார்த்திகேயன், ஜி.திருமலை துரைசாமி, எம்.குணசுந்தரி குட்டி மோகன், சி. கே.கோபால், எஸ்.எம்.பன்னீர்செல்வம், டி.ஆர்.செங்குட்டுவன், எஸ்.எம். மோகன், டி.ஆர்.ரவீந்திர குமார், ஏ.சசிகுமார், யு. காந்திமதி உதயசூரியன், எஸ்.நிசார் அகமது, ஏ. ஜெய செல்வி அசோக் குமார், கே.பி.உசேந்திரன், ஏ.முனுசாமி, சி.கே. ஜி.தர்மராஜ், டி.சந்திரன், மா. பொ.வே.ராஜா, டி.மதன், எஸ்.கரண் ராஜ், பி.காசி ராஜன், ஆசைத்தம்பி,

புத்தகரம் இ.ஏழுமலை, வி.எஸ்.ஆர்.ஜெயக்குமார் இ.மோகன் ஆ.விஜய லட்சுமி ஆனந்தன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை தியாக தீபம், மா.பொ. வேதா நினைவு மன்றமும் 28வது வட்டக் கழகமும் செய்துள்ளது.

## வலைதளங்களில் வலம் வருவது!




140வது வட்ட வழக்கறிஞர் த.பாபுவின் அண்ணி

# மகளிரணி எம்.கிரேஸி மறைவு!

## இன்று இறுதி ஊர்வலம்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் -- முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, பிப்.8-

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்கு பகுதி 140வது வட்டத்தில் வழக்கறிஞர் அணியின் முன்னாள் மாவட்ட அமைப்பாளர் த.பாபுவின் அண்ணியாரும் தி.மு.கழகத்தின் மகளிர் அணியின் செயல் வீராங்கனையுமான திருமதி.எம்.கிரேஸி (வயது 64) (நேற்று 07.02.2024) புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் பன்னீர் செல்வம் நகரில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (08.02.2024 வியாழக்கிழமை) மாலை 3 மணியளவில் பன்னீர்செல்வம் நகர், படவேட்டம்மன் கோயில் தெரு, நெ.14, இல்லத்திலிருந்து புறப்பட்டு சென்னை மவுண்ட் புனித தோமையார் மலை பட்ரோட்டில் அமைந்துள்ள புனித பத்திரிசியார் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சைதை மேற்குபகுதி கழக செயலாளரும் பத்தாவது மண்டல குழுதலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினரும் 140வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் மற்றும் வழக்கறிஞர் அணியின் மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், சைதை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள், பகுதிகுட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், வட்டக்கழக நிர்வாகிகள், பகுதிதுணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் ஆகியோர் அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்கின்றனர்.



தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக சிறுபான்மை நலஉரிமைப் பிரிவினர் கலந்து கொண்டனர்.

196வது வார்டில் - இந்து மயான பூமியில்

# கட்டணமில்லா எரியூட்டும் வசதி!

## மாமன்ற உறுப்பினர் அஸ்வினி கருணா தகவல்!

சென்னை, பிப்.8-

பெருநகர சென்னை மாநகராட்சியின் 196 வது வார்டு பகுதியில் இந்து மயான பூமியில் இறந்தவர்களின் உடல்களை எரியூட்ட தற்போது தனியார் ரூபாய் 10000 முதல் 12000 வரை வசூல் செய்து வருகின்றனர்.

மாமன்ற உறுப்பினர் திருமதி. அஸ்வினி கருணாவின் தொடர் முயற்சியின் காரணமாக கண்ணகி நகர் பகுதியில் GAS FIRE தகன மேடை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வர உள்ளது.

மேலும் இனி பொது மக்களுக்கு கட்டணமில்லா எரியூட்டும் வசதி கண்ணகிநகர் மற்றும் சுற்றுப்புற பகுதி மக்களுக்கு கிடைக்கும். இதனால் இப்பகுதி ஏழை மக்கள் பெரிதும் பயன் அடைவார்கள்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரத்தில் 17வது வட்டம் வடபெரும்பாக்கம் அரசு பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத் திட்ட உதவிகளை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் எஸ். சிவகுமார், எம். மைக்கேல்,பி. செந்தில், கமலநாதன், எஸ். சதீஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## எமர்ஜென்சியைப் போல

# அமலாக்கத் துறையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினரை பழிவாங்குவதா?

## மக்களவையில் - தயாநிதி மாறன் அனல்பறக்க ஆவேச உரை!



**புதுடெல்லி,பிப்.7-**

**"எமர்ஜென்சியைப் போல அமலாக்கத் துறையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினரை பழிவாங்குவதா" என்று நாடாளுமன்ற மக்கககளவையில் தயாநிதி மாறன் அனல் பறக்க ஆவேச உரையாற்றினார்.**

**நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இடைக் கால நிதிநிலை அறிக்கை தொடர்பான விவாதத்தில், ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சிப்பது குறித்து மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்கள் அனல் பறக்க ஆற்றிய உரையின் விவரங்கள் வருமாறு:**

**நிதி மானியம் குறைப்பு!**

அவைத் தலைவர் அவர்களுக்கு முதலில் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கை ஒரு பெரிய கண் துடைப்பு, ஒரு மிகப்பெரிய ஏமாற்றத்தைத் தந்துள்ளது, குறிப்பாக ஏழை மக்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கை எந்தப் பயனையும் அளிக்கவில்லை. இந்த நிதிநிலை அறிக்கைமீது மிகுந்த எதிர்பார்ப்பு இருந்தது, அதிலும் குறிப்பாக நடுத்தர மக்களுக்கு, இவர்கள் இவ்வளவு பேசுகிறார்களே, இத்தனை வாக்குறுதிகளை வாரி வாரி வழங்குகிறார்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதாவது வரிச்சலுகை கிடைக்குமா, நல்ல செய்தி வருமா எனப் பார்த்தால், ஒன்றிய அரசிடம் இருந்து வெறும் நாமம்தான் கிடைத்தது.

இந்த அரசாங்கத்தின் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் செலவு எவ்வளவு என்றால் ரூ. 47,65,762/ கோடி, கிட்டத்தட்ட 6 சதவீதம் சென்ற ஆண்டை விட அதிகம். இதில் 25 சதவீதம் அவர்கள் வாங்கிய கடனுக்கான வட்டிக்காக மட்டுமே செலவு செய்கிறார்கள், மீதம் 40 சதவீதத்தை அவர்கள் செலவீனமாக வைத்துக் கொள்கிறார்கள். மேலும் வரவு தீர்மானத்தையொட்டிதான் இந்த பட்ஜெட் அமைந்துள்ளது. இந்த நிதிநிலை அறிக்கை பிரதான செலவிற்கு முன்னுரிமை கொடுத்து, சமூக நலனை பின்னுக்கு தள்ளியுள்ளது.

அதாவது சமூக நலத்திட்டங்களுக்கு 7 சதவீதம் மானியத்தை இந்த ஒன்றிய அரசு குறைத்துள்ளது. குறிப்பாக உணவு மானியம். இவர்கள் எப்படி நியாய விலைக் கடைகளிலே அரிசி, கோதுமை போன்றவைகள் இலவசமாக தருகிறோம் என்று சொல்கிறார்களோ, அவர்களேதான் இன்று உணவு மானியத்தில் 3.3 சதவீதம் குறைத்திருக்கிறார்கள். பிறகு விவசாயத்திற்கான உரம் மானியத்திலும் 13.2 சதவீதம் இந்த நிதிநிலை அறிக்கையில் குறைந்துள்ளது. அதுமட்டுமல்லாது சமூக பாதுகாப்புகான திட்டங்களிலும் இவர்கள் நிதி மானியத்தை குறைத்துள்ளார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையை வாசித்த நிதி அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர் என்று நாங்களெல்லாம் பெருமை கொண்டோம். மேலும் இவர் வல்லவர், நல்லவர் என்று நினைத்தோம், ஆனால் அவர் வாயில் இருந்து வருவதெல்லாம் உண்மைக்கு மாறானவைதான். குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கை ஏழைகளுக்காக, இளைஞர்களுக்காக, மகளிருக்காக, விவசாயிகளுக்காக என்று சொன்னார்கள், ஆனால் உண்மை நிலை என்ன என்றால், இங்கு அம்பானி, அதானி, டாடா போன்ற பணம் படைத்தவர்கள் மேலும் பணக்காரராகும் வகையில் தான் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. அதாவது மேற்குறிப்பிட்ட அம்பானி, அதானி, டாடா போன்ற 20 சதவீதம் பணக்காரர்கள் டம்தான் இந்தியாவின் 40 சதவீதம் வருமானம் உள்ளது. ஆனால் நடுத்தர மக்கள் மேலும் ஏழை ஆகி வருகின்றனர். அவர்களது வருமானம் 20 சதவீதம் குறைந்துள்ளது. சிலருக்கு வருமானமே இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

**வாக்குறுதிகள் என்ன ஆயிற்று?**

மீண்டும் இவர்கள் ஆட்சிக்கு வந்தால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தருகிறோம் என்று சொல்கிறார்கள். பிரதமர் அவர்களே, கடந்த 2014 ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியில் ஆண்டுக்கு 2 கோடிக்கு பேருக்கு வேலை வாய்ப்பு தருகிறேன் என்று சொன்னீர்களே, என்னவாயிற்று? கடந்த பத்து ஆண்டுகளாக வெறும் வாயில் வடை சுட்டதைத் தவிர, வேறு என்ன செய்தீர்கள்?. இதுவரைக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவில்லை. பெண்களுக்கும் வேலைவாய்ப்பு குறைந்துகொண்டே இருக்கிறது. பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் கடந்த 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 11.88 சதவீதம் குறைந்திருக்கிறது. 2021-2022 ஆம் ஆண்டுகளில் 7.96 சதவீதம் குறைந்துள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு பிரதமர் மோடி அவர்கள் என்ன சொன்னார்கள்? நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பு ஆக்குவோம் என்றார். அவ்வாறு நடந்ததா? இல்லை. இன்றைக்கு பண வீக்கத்தால் விவசாயிகளும் விவசா யத்துறையும் அழிந்து கொண்டு இருக்கின்றன. அம்பானிகளுக்கும், அதானிகளுக்கும், டாடா போன்றோருக்கும் வாராக்கடனை தள்ளுபடி செய்கிறீர்கள். பணக்காரர்களின் கடனை தள்ளுபடி செய்கிறீர்கள், அதுவே விவசாயிகளின் கடனை நீங்கள் தள்ளுபடி செய்வதில்லை. அதற்கு மாறாக, விவசாயிகளுக்கு எதிரான விவசாய மசோதாவை கொண்டு வந்தீர்கள், அதுவே இந்திய மக்கள் ஒருமித்த குரலில் எதிர்த்தபின்தான் அந்த மசோதாவை நீங்கள் கைவிட்டீர்கள்.

சில்லரை விற்பனை பணவீக்கம் கடந்த எட்டு ஆண்டுகளில் 7.8 சதவீதம் உயர்ந்துள்ளது. மொத்த பணவீக்கம் 9 ஆண்டுகளில் 15.8 சதவீதம் உயர்ந்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்து கொண்டேதான் உள்ளது. கடந்த முப்பது ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அத்தியாவசியப் பொருட்களின் விலையும், பணவீக்கத்தின் சதவீதமும் உயர்ந்து கொண்டேதான் உள்ளது.

பேரிடர் நிதி வழங்கவில்லை!

தற்போது மக்கள் தங்களது சேமிப்புகளை இழந்து வருகிறார்கள். குறிப்பாக இந்த பாஜக அரசு வந்த நாள் முதல் தமிழ்நாட்டிற்கு எதிரான அரசாகவே செயல்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு மிகப் பெரிய புயலான மிக்ஜாம் புயலை தமிழ்நாடு, குறிப்பாக சென்னை மாவட்டம் சந்தித்தது. எங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமர் அவர்களை நேரடியாக சந்தித்து முதற்கட்ட நிவாரணமாக சுமார் ரூ.7033 கோடியையும், முழுமையான நிவாரணமாக 12,650 கோடி தொகையினையும் கேட்டார். ஆனால் ஒன்றிய அரசிடமிருந்து எங்களுக்கு ஒரு நயா பைசா கூட நிவாரணம் கிடைக்கவில்லை. இத்தனைக்கும் ஒன்றிய இராணுவத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் சென்னைக்கு வந்து பார்வையிட்டார், அவ்வளவு ஏன், நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் கூட வந்து பார்வையிட்டார்கள், கையசைத்தார்கள், வெறும் வாய்ப் பேச்சு பேசினார்கள், நேர்காணல் கூட தந்தார்கள், இவ்வளவும் செய்து விட்டு ஒரு ரூபாய் கூட தர வக்கற்றவராக திரும்பிச் சென்றுவிட்டார்.

இதுகுறித்து எங்கள் தமிழ்நாட்டின் எதிர்காலம் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 'நாங்கள் உங்கள் பணத்தையோ, உங்கள் அப்பன் வீட்டு பணத்தையோ கேட்கவில்லை, எங்கள் வரிப்பணத்தில் இருந்து கொடுங்கள்' என்றுதான் கேட்டார். அதற்கு ஒன்றிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாரமன் அவர்கள் சுமார் ஒரு மணி நேரமாக ஒரு பத்திரிகை சந்திப்பு நடத்துகிறார். அந்த ஒரு மணி நேரமும் எங்களை வசை பாடியதோடு, உதயநிதி அவர்கள் மரியாதையோடு நடந்துகொள்ள வேண்டும், உங்கள் அப்பன் வீட்டு காசு, உங்க ஆத்தா வீட்டு காசு என்றெல்லாம் கேட்கக் கூடாது எனக் கூறுகிறார்.

**வன்மை நிறைந்த நிர்மலா சீதாராமன் பேச்சு!**

அதுவே பிரதமர் மோடி அவர்கள், முன்பொரு நாள், உங்கள் சாச்சா வீட்டு காசா என்று கேட்டார்கள், அப்போது நிதியமைச்சர் அவர்களுக்கு அறிவுரை சொல்ல நேரமில்லையா? அமைச்சர் நிர்மலா சீதாரமன் அவர்களே, உங்கள் ஆத்தா வீட்டு காசா என்றெல்லாம் கேட்கறீர்களே, அதுவே நான் திருப்பி உங்கள் தோப்பனார் வீட்டு காசா என்று கேட்டால் நன்றாக இருக்குமா? உங்கள் பேச்சில் வன்மம் இருக்கிறது. எனவே இந்த பேச்சை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

**கருப்புப் பணத்தை பிரதமர் மீட்டுவிட்டாரா?**

கடந்த பத்து ஆண்டுகளில் பாஜக அரசு ஆட்சிக்கு வந்தவுடன் பணமதிப்பிழப்பு நடவடிக்கை மேற்கொண்டது, பின்னர் பிரதமர் அவர்கள், எனக்கு மூன்று மாதம் தாருங்கள், இந்தியாவில் இருந்து எடுக்கப்பட்ட கருப்புப் பணம் அத்தனையையும் நான் மீட்பேன் என்றார். என்ன கருப்புப் பணத்தை மீட்டார்? மேலும் புதிதாக 2000 ரூபாய் நோட்டினை அறிமுகம் செய்தார்கள், இன்று அந்த 2000 ரூபாய் நோட்டு எங்கே சென்றது? இதன் மூலம் நீங்கள் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை நீங்களே சொல்லிவிட்டீர்கள்.

பிறகு உலகையே அழித்த கொரோனோ பெருந்தொற்று எப்படி இந்தியாவுக்குள் வந்தது? அதற்கு முக்கிய காரணமே பாஜக அரசுதான். குஜராத் தேர்தலுக்காக 'நமஸ்தே டிரம்ப்' என்ற நிகழ்ச்சியினை குஜராத்தில் நடத்தினார்கள், அதற்காக அனைத்து விமான நிலையங்களையும் திறந்து வைத்தார்கள், அதனால்தான் கொரோனா இந்தியாவிற்குள் வந்தது. அந்த நிகழ்ச்சியினை நீங்கள் நடத்தாமல் இருந்திருந்தால் பல ஆயிரக்கணக்கான உயிர்களை நீங்கள் காப்பாற்றி இருக்கலாமே. அதுமட்டுமல்லாமல் நீங்கள் இறப்பு விவரத்தைக்கூட குறைத்துத் தவறாகத் தானே வெளியிட்டீர்கள்.

மேலும் பணவீக்கத்தாலும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தாலும் மக்கள் அவதிப்பட்ட சூழலில், குறிப்பாக வெங்காய விலை ஏற்றத்தின்போது, நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையிலே என்ன சொன்னார்? "வெங்காய விலை ஏற்றமா, நான் வெங்காயம் சாப்பிடுவதில்லை, அதனால் எனக்கு அது பற்றித் தெரியவில்லை" என்று கூறினார். என்ன ஒரு அகங்காரப் பேச்சு. ஏழைகளின் சிரமத்தை உணராமல், பணக்காரர்களை மட்டும் ஆதரிக்கும் போக்குதான் அந்தப் பேச்சின் அடையாளம்.

**அதானி – அம்பானி கொள்ளை லாபம்!**

இந்தக் கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு பெட்ரோல் விலையையும், காஸ் சிலிண்டர் விலையையும் ஏற்றிவிட்டீர்கள், பெட்ரோல் விலை நூறு ரூபாயைத் தொட்டது, டீசல் விலையும் கிட்டத்தட்ட நூறு ரூபாயை எட்டியது, சிலிண்டர் விலை ஆயிரம் ரூபாயை நெருங்கியது. ரஷ்யாவில் நடக்கும் போர் விவகாரத்தால், அங்கு குறைந்த விலையிலேயே கச்சா எண்ணெய் கிடைக்கிறது. அந்த குறைந்த விலை எண்ணெயை அம்பானி அவர்களும், அதானி அவர்களும் வாங்கி இந்தியாவுக்கு கொண்டு வராமல், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து கொள்ளை லாபம் பார்த்தார்கள்.

அதனை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யாமல், நமது ஒன்றிய அரசு நமது இந்தியாவிற்கு கொண்டு வந்து பெட்ரோல் விலையைக் குறைத்து இருக்கலாமே. அதைச் செய்யாமல், அதற்கு மாறாக நாட்டின் ஒவ்வொரு பெட்ரோல் பங்க்கிலும், ஒவ்வொரு இரயில் நிலையத்திலும், பிரதமர் அவர்களின் செல்ஃபி ஸ்டாண்டை வைத்தார்கள், அந்த செல்ஃபி ஸ்டாண்டின் விலை சுமார் 6.5 இலட்சம், எதற்கு? ஒரு வெற்றுப் புகைப்படத்திற்கு இது தேவையா? அதற்கு அந்த 6.5 இலட்சம் ரூபாயை மக்களுக்கு பயனுள்ள வகையில் செலவழித்து இருக்கலாமே?

பாஜக அரசு தற்போது இந்தியாவிலே தங்களுக்கு ஆகாதவர்கள் மீது எளிதாக அமலாக்கத்துறையைப் பயன்படுத்துகிறது. நீங்கள் முன்பு என்ன சொன்னீர்கள்? காங்கிரஸ் கட்சி, குறிப்பாக மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், எமர்ஜென்சியை தவறாகப் பயன்படுத்தினார். அது பெரிய குற்றம், அந்தக் குற்றத்தை நாங்கள் செய்ய மாட்டோம் என்று சொன்னீர்கள், ஆனால் இன்று எமர்ஜென்சியைப் போலவே நீங்கள் அமலாக்கத்துறையை பயன்படுத்திக் கிட்டத்தட்ட 95 சதவீதம் வழக்குகள் உங்கள் எதிர்க்கட்சியினர் மீது திணிக்கப்பட்டுள்ளது.

பணமதிப்பிழப்பு நிகழ்ந்தபோது, அனைத்துப் பத்திரிகைகளிலும் பிரதமர் மோடி அவர்களின் படம் போட்டு Paytm செயலிக்கு முழுப் பக்க விளம்பரம். அது என்ன விளம்பரம் என்றால், டிஜிட்டல் பண பரிமாற்றத்தை நாங்கள் முழுமையாக ஆதரிக்கின்றோம் என்று வந்தது, ஆனால் இன்றோ Paytm நிறுவனம் சரியாக செயல்படவில்லை என அந்நிறுவனம் இன்று மூடும் நிலையில் உள்ளது.

**'நீட்' தேர்வுக்கு எதிர்ப்பு!**

மேலும் எங்கள் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களும், இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் தொடர்ந்து நீட் தேர்வை எதிர்த்து வருகின்றனர். எங்கள் தமிழ்நாட்டு குழந்தைகள் மட்டுமா நீட் தேர்வினால் பாதிப்படைகின்றனர்? தமிழ்நாடு உட்பட பல மாநிலங்களில் முதல் தலைமுறைக் குழந்தைகள் நீட் தேர்வில் தேர்ச்சி பெற முடியாமல் தவிக்கிறார்கள், குறிப்பாக பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மருத்துவர்கள் ஆவதை தடுப்பதற்காக கொண்டு வந்த திட்டமல்லவா இது?

இன்றைக்கு ராஜஸ்தான் மாநிலத்தில், குறிப்பாக நமது சபாநாயகர் இருக்கின்ற கோட்டா தொகுதியிலே எத்தனைக் குழந்தைகள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள்? காரணம், நீங்கள் கொண்டு வந்த நீட் தேர்வு. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையிலாவது நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**கோழி பிடிக்கும் கதை!**

**கடந்த 2018ஆம் ஆண்டு ஜெயலலிதா அவர்கள் மறைந்துவிட்டார், அப்போது இதே நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாரமன் அவர்கள் அதிமுகவை கைப்பற்றி அவர் முதலமைச்சர் ஆகிவிடலாம் என்ற கணவுத் திட்டத்தில் சென்னைக்கு வந்தார், அப்போது அவர் "அடுத்த ஆண்டு நீட் தேர்வு நடைபெறாது, இந்த ஆண்டும் நீட் விலக்கிற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம்" என்று மக்களை ஏமாற்றினார்.**

**அவையில் முன்பு பேசியவர் சோழரைப் பற்றி குறிப்பிட்டார். சோழர்கள் தமிழை வளர்த்தார்கள், பிரதமர் மோடி அவர்கள், தமிழ்நாட்டிற்கு வந்தால் தமிழ் மொழியில் பேசுகிறார், திருக்குறள் சொல்கிறார், அதுவே கர்நாடகா சென்றால் கன்னடத்தில் பேசுவார், கேரளா சென்றால் மலையாளத்திலும், ஆந்திரா சென்றால் தெலுங்கிலும், மேற்கு வங்கம் சென்றால் பெங்காலி மொழியிலும் பேசுகிறார். இதையெல்லாம் பார்க்கும் போது எங்கள் ஊர்ப்பக்கம் சொல்வதுதான் ஞாபகம் வருகிறது, அது என்னவென்றால், கோழி பிடிப்பவன் பக் பக் பக் என கோழியை அழைப்பானாம், அந்தக் கோழியும் ஆகா, நம் மொழியில் பேசுகிறானே, நமக்கு நண்பன் என்று நினைக்குமாம், ஆனால் பிறகுதான் அந்த கோழிக்குத் தெரியுமாம், அவன் தன்னை வறுத்து சாப்பிடத்தான் அந்த கோழி மொழியில் பேசினான் என்று. அந்தக் கதை தான் இங்கு நடந்து கொண்டிருக்கிறது.**

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மீது உரிய அக்கறை இல்லாமல் ஒன்றிய அரசு செயல்படுகிறது, அதிலும் குறிப்பாக ஜவுளித் தொழிலில். கடந்த 2022 ஆம் ஆண்டு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஜவுளித்துறைக்கு அவசரக்கால கடன் வரி உத்திரவாதத் திட்டத்தைக் கோரினார். குறிப்பாக நாட்டிற்கு அன்னியச் செலவாணியை ஈட்டித் தரும் திருப்பூர் சிறு, குறு மற்றும் நடுத்தர ஜவுளித்துறையினருக்கு இத்திட்டத்தை வழங்குமாறு கடந்த 2 ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறோம்.

கொரோனா பெருந்தொற்றின் தாக்கம், ரஷ்யா உக்ரைன் போர் மற்றும் மேற்கு நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை ஆகியவற்றின் விளைவாக, இத்துறை கடுமையான நெருக்கடிக்கு உட்பட்டுள்ளதோடு, வளர்ச்சி விகிதத்தில் மாதந்தோறும் கடுமையான சரிவைச் சந்தித்து வருகிறது. இலட்சக்கணக்கான வேலைகள், குறிப்பாக தொழிலாளர் தொகுப்பில் கணிசமான பகுதியை உருவாக்கும் கிராமப்புற பெண்களின் வேலைகள் ஆபத்தில் உள்ளன.

**ரயில்வே திட்டங்கள் இல்லை!**

ஜவுளித்துறையில் உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகைத் திட்டத்தையும் அவசரக்கால கடன் வரி உத்திரவாதத் திட்டத்தையும், இருபது சதவீதம் கூடுதல் பிணையில்லா கடன் திட்டத்தையும் கேட்டோம், ஆனால் ஒன்றும் கிடைத்தபாடில்லை.

கடந்த மாதம், ஜவுளி ஆலை சங்கங்கள், அசல் தொகையை திருப்பிச் செலுத்த 1 ஆண்டு கால அவகாசத்தை நீட்டிக்கவும், அவசரகால கடன் வரி உத்தரவாத திட்டத்தின் கீழ் 3 ஆண்டு கடன்களை 6 ஆண்டு கால கடனாக மாற்றி நீட்டிக்கவும், தொழில் மூலதனத்தின் அழுத்தத்தைக் குறைக்கத் தேவையான நிதி உதவியினை வழங்கக் கோரியும் மத்திய நிதியமைச்சரிடம் கூட்டாக மனு அளித்தனர்.

இரயில்வேத் துறையின் மூலம் எங்கள் தமிழ்நாட்டிற்கு எந்த நன்மையும் வந்து சேரவில்லை. கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் கடந்த ஐந்து ஆண்டுகளாக பலமுறை அவரை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கை கடிதங்களை கொடுத்துள்ளேன். குறிப்பாக நான் சார்ந்த மத்திய சென்னை தொகுதியில் உள்ள யானைக்கவுனி மேம்பாலம் சீரமைப்பு பணிகள் கடந்த ஏழு ஆண்டுகளாக எந்த பணியும் நிறைவேறாமல் நிலுவையில் உள்ளது,. இனியாவது தமிழ்நாட்டிற்கும், குறிப்பாக சென்னைக்கும் இரயில்வேத் துறை ஏதாவது நன்மை செய்வீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

**யார் மீது சி.பி.ஐ. வழக்கு பதியும்?**

உலகத்திலே எங்கும் நடக்காத ஆச்சரியம், பிரதமர் அவர்கள், 2019 ஆம் ஆண்டில் ஒரு செங்கல்லை வைத்து மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார். இன்றைக்கும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையில் ஒரே செங்கல்லும் சுற்றுச் சுவரும்தான் உள்ளது. இதில் ஒரு கொடுமை என்னவென்றால், இந்த ஒற்றைச் செங்கல்லும் வெற்று சுற்றுச் சுவரும் உள்ள ஒரு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் மாணவர் சேர்க்கைத் தொடங்கிவிட்டது, ஆனால் மாணவர்களோ மதுரையில் படிக்காமல், இராமநாதபுரம் மருத்துவக் கல்லூரியில் படிக்கிறார்கள்.

பல இடங்களில் சி.பி.ஐ. கட்டமைப்பு இல்லாத நிறுவனங்கள் எப்படி மாணவர்கள் சேர்க்கை செய்யலாம் என பல்வேறு வழக்குகளை பதிந்துள்ளது, ஏனெனில் அது இந்திய சட்டப்படி குற்றம் என கூறுகிறது, அப்படி இருக்கையில், எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி, கட்டமைப்பே இல்லாமல் மாணவர் சேர்க்கை நடத்தி வேறொரு கல்லூரிக்கு படிக்க அனுப்புகிறீர்களே, இப்போது யார் மீது சி.பி.ஐ வழக்கு பதியும்? சுகாதாரத்துறை அமைச்சர்மீதா அல்லது பிரதமர்மீதா? யார்மீது இப்போது சி.பி.ஐ. வழக்கு பதியும் என கேட்கிறேன். உங்களுக்கு வந்தா இரத்தம் எங்களுக்கு வந்தால் தக்காளிச் சட்டினி என்னும் வகையில் தமிழ்நாட்டை வஞ்சித்து புறக்கணிக்கிறீர்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள், "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்று, ஆனால் தற்போது, தெற்கில் இருந்து வரும் நிதியில் வடக்கில் செழிக்கிறது, கொழிக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் தமிழ்நாட்டில் இருந்து ஒன்றிய அரசிற்கு வரியாக 1 ரூபாய் கொடுத்தால் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு திருப்பி வெறும் 29பைசா தான் தருகிறது. ஆனால் உத்திரப்பிரதேச மாநிலத்திற்கோ அவர்கள் கொடுக்கும் 1 ரூபாய் வரிக்கும் ஒன்றிய அரசு திருப்பித் தரும் தொகை ரூ.2.73 பைசாவும், பீகாருக்கு ரூபாய் 7.6 பைசாவும்.


நாங்கள் கேட்பது எல்லாம், இந்தியா ஒட்டுமொத்தமாக வளரவேண்டும் என்றும், இவ்வாறு தமிழ்நாட்டை மட்டும் வஞ்சிக்காதீர்கள் என்றும், எங்கள் தமிழ் மொழியையும் வளர்க்க நடவடிக்கை எடுங்கள் என்றுதான். இந்தியாவின் முதல் செம்மொழி தமிழ் மொழிதான். இப்படி சொல்வதால், நாங்கள் எந்த மொழிக்கும் எதிரானவர்கள் அல்ல, அனைத்து மொழியையும் ஆதரித்து வரவேற்பவர்கள்தான். ஆனால் மொழித் திணிப்பு வந்துவிட்டால், நாங்கள் எங்கள் மொழியை காக்க உயிரையும் கொடுக்கத் தயங்கமாட்டோம் என்பதைக் கூறி அவைத் தலைவருக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்! வாழ்க கலைஞர்! வாழ்க தலைவர் தளபதி.

இவ்வாறு தயாநிதி மாறன் அவர்கள் பேசினார்.

---

## 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!



**"தனிநாடு கோரும் நிலை உருவாக்கும்"**

**அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கியது தான் இந்தியா. இந்தி பேசும் மாநிலங்கள் மட்டும் இந்தியா அல்ல என கர்நாடகா துணை முதல்வர் டி.கே.எஸ் சாடியுள்ளார். பட்ஜெட்டில் தென்னிந்தியா புறக்கணிக்கப்பட்டதாகவும், மத்திய அரசு இதுபோன்று வஞ்சித்தால், அனைத்து தென்னிந்திய மாநிலங்களும் ஒருங்கிணைந்து இந்தி பேசும் மாநிலங்களில் இருந்து தனிநாடு கோரும் நிலை உருவாகும்; எங்களுக்கான உரிய பங்கை (மாநில நிதி) தர வேண்டும் என்றார்.**

---

## கூடப்பாக்கம் ஊராட்சியில்

# ரூ. 16 லட்சம் செலவில் புதிய நியாய விலைக் கடை கட்டும் பணி!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், பிப்.08

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பூவிருந்தவல்லி ஒன்றியம் கூடப்பாக்கம் ஊராட்சி கலெக்டர் நகரில் சுமார் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு என இப்பகுதியில் ரேஷன் கடை இன்றி அவதிப்பட்டு வந்தனர். இதுகுறித்து இப்பகுதி மக்கள் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி கவனத்திற்கு கொண்டு சென்றனர். சட்டமன்ற உறுப்பினர் உடனடியாக தனது தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.16 லட்சம் ஒதுக்கி இப்பகுதியில் புதிய நியாய விலை கடை கட்டுவதற்கான பணி கூடப்பாக்கம் கலெக்டர் நகரில் மாவட்ட ஊராட்சி துணைச் சேர்மனும்.ஒன்றிய செயலாளருமான கொத்தியம்பாக்கம் டி.தேசிங்கு தலைமையில் நடந்தது ஒன்றிய குழு துணை தலைவர் பரமேஸ்வரி கந்தன் வரவேற்புரை ஆற்றினார்.

ஒன்றிய குழு தலைவர் எம்.ஜெயக்குமார் ஒன்றிய நிர்வாகிகள் இ.கந்தபாபு, ஜெ.சாக்ரடீஸ், ஜி.சுகுமார், எம்.குணா, பா.கந்தன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினராக பங்கேற்று புதிய நியாய விலை கடை கட்டுவதற்கான கட்டுமான பணிகளை தொடங்கி வைத்து உடனடியாக கட்டிடத்தை முடிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் தெரிவித்தார் இதில் ஊராட்சி செயலாளர் எஸ் குணசேகர் கிளைக் கழகச் செயலாளர் தனசேகர் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் பரணிதரன், குணா பிரவீன், இ.வி பி.பிரதீப், டி.மணிவண்ணன், எம்.உதயகுமார், கார்த்தி, ராஜேஷ், தியாகராஜ், சிபி, பிரேமா கருப்பாய் உள்பட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி 33வது வார்டில் நமக்கு நாமே திட்டத்தில் ஓம் சக்தி கனேபஸ் பிரதான சாலை அமைக்கும் பணி நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்துகொண்டு சாலை அமைக்கும் பணிகளை துவக்கி வைத்து விரைவில் சாலை அமைக்கும் பணியை முடிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகர மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகர ஆணையர் ஷேக் அப்துல் ரகுமான், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன் மாநகரக் கழக பொறுப்பாளர் சண் பிரகாஷ் மாமன்ற உறுப்பினர் ஹரி உள்பட பலர் உள்ளனர்.


நாள்
8 – 2 – 2024,
வியாழக்கிழமை,
காலை 9.30 மணி
கலைஞர்
100
1924 - 2024
Jayam Arts
ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி
சோலார் பகுதிக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வருகை தரும்
வரலாற்று இயக்கத்தின் இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
இளம் தலைவர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக.. வருக...
மாண்புமிகு சு.முத்துசாமி
வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் / செயலாளர் – ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க.
பேரன்புடன்... K.E.பிரகாஷ் B.A., துணைச் செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி
மேற்கு மண்டலம் - 5


கலைஞர்
100
1924 - 2023
08.02.2024 காலை 9.00 மணிக்கு
ஈரோடு மாவட்டம், சோலார் புதிய பேருந்து நிலைய வளாகத்தில்
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை
வருக! வருக! என அன்புடன் வரவேற்கும்...
ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க.



திருச்சி தெற்கு மாவட்டக் கழக மாணவரணி அமைப்பாளர் முத்து வெங்கடேஷ் – சிவரஞ்சனி இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி திருச்சி காட்டூரில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மண மக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### தேசிய கல்விக் கொள்கையைப் பின்பற்றி

# செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் திட்டம், ஒன்றிய அரசிடம் உள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, பிப்.8-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளு மன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் மக்களவையில் 5.2.2024 அன்று தேசிய கல்விக் கொள்கையை பின்பற்றும் போது மாணவர்க ளுக்கிடையே, செயற்கை நுண் ணறிவை பயன்படுத்தும் திட் டங்கள் ஏதேனும் ஒன்றிய அரசிடம் உள்ளதா? என்றும், திறன் மேம்பாட்டிற்கும், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க முயற்சிகளை பெருக்கவும், நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யவும் மாணவர்களிடத் தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டுள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் கல்வித்துறை இணைய மைச்சர் டாக்டர் சுபாஷ் சர்க் கார் அவர்களிடம் கேள்வி



எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் கல் வித்துறை இணையமைச்சர் டாக்டர் சுபாஷ் சர்க்கார் அளித்த பதில் வருமாறு:

மாணவர்களிடையே, செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி, திறன் மேம்பாட் டைபெருக்கவும், ஆராய்ச்சி யையும் புத்தாக்க முயற்சிகளை மேம்படுத்தவும், தேவையான வகையில் தேசிய கல்விக் கொள்கையில் வழிவகை செய் யப்பட்டுள்ளது. மாறிவரும் கல்வி திட்டங்களில் மாணவர் களுக்கு தேவையான கல்வி மேம்பாட்டிற்கும், நீடித்த வளர்ச்சிக்கும் செயற்கை நுண் ணறிவு பெருமளவில் பயன்ப டுத்தப்பட்டு வருகிறது. கணி தம் கணிணித் துறை அறிவியல் போன்ற பாடங்களின் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சிக்கு பெருமளவில் உதவி செய்கிறது.,

ஆராய்ச்சி மேம்பாட்டிற் கும், வேலை வாய்ப்பிற்கும், கல்வி சார்ந்த வன்பொருள் மற் றும் மென் பொருள் வளர்ச்சி யிலும், மாற்று திறனாளிகளின் பயிற்சிக்கும், பிராந்திய மொழி களின் வளர்ச்சிக்கும் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப் பட்டு வருகிறது.

இவ்வாறு ஒன்றிய அமைச் சர் மக்களவையில் தெரிவித் தார்.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்களை சரி செய்தல், உயிரிதொழில் நுட் பத்துறை நீடித்தகால வளர்ச்சி இலக்குகளை அடைதல் ஆகிய துறைகளிலும் செயற்கை நுண் ணறிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று ஒன்றிய அர சின் மாண்புமிகு கல்வித்துறை இணையமைச்சர், டாக்டர் சுபாஷ் சர்க்கார், மக்களவை யில் தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்தார்.

### இன்று நாடாளுமன்ற வளாகத்தில்

# தி.மு.க. எம்.பி.க்கள் கருஞ்சட்டை ஆர்ப்பாட்டம்!

## தி.மு.க. நாடாளுமன்றக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிக்கை!

சென்னை, பிப். 8-

திராவிட முன்னேற்றக் கழக நாடா ளுமன்ற குழுத் தலைவரான டி.ஆர். பாலு அவர்கள் வெளியிட்டுள்ள அறிக் கையில்

"தி.மு.க. தலைவரும் முதலமைச் சரு மான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, ஒன் றிய அரசின் இடைக்கால நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு புயல் வெள்ள நிவாரண நிதி உதவி மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கு உரிய நிதியை ஒதுக்கீடு செய்யாத ஓரவஞ்ச னையைக் கண்டித்து இன்று காலை 10.00 மணிக்கு தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சி எம்.பி.க்கள் டெல் லியில் நாடாளுமன்ற வளாகத்தி லுள்ள காந்தி சிலை முன்பு கருஞ் சட்டை அணிந்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்" என்று தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாட் டைச் சேர்ந்த தோழமைக் கட்சி எம். பி.க்களும் கலந்து கொள்ள வேண்டு மென கேட்டுக் கொண்டுள்ளார்.

**தமிழ்நாடு புறக்கணிப்பு!**

சென்ற 1.2.2024 அன்று, வரும் நிதியாண்டு 2024-25க்கான இந்திய ஒன்றிய அரசின் இடைக்கால நிதி நிலை அறிக்கையை நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் மக்களவையில் தாக்கல் செய்தார். அதில், அன்மை யில் 2023 டிசம்பர் மாதத்தில் தமிழ்நாட்டைப் புரட்டிப் போட்ட வர லாறு காணாத புயல் மழை வெள்ள சேதங்களை சரிசெய்யவும் நிவாரண உதவியாகவும் 37000 கோடி ரூபாய் தந்து உதவிட வேண்டும் என்ற தமிழ் நாடு அரசு கோரிக்கை பற்றி எந்த அறி விப்பும் இல்லை. அதைப் போல, மதுரை எய்ம்ஸ் உள்ளிட்ட தமிழகத் தின் வளர்ச்சித் திட்டங்களுக்கான உரிய நிதி ஒதுக்கீடு குறித்தும் இடைக் கால பட்ஜெட்டில் அறிவிப்புக்கள் இடம் பெறவில்லை. இந்நிலையில், தமிழ் நாட்டுக்கு அன்னிய முதலீடு திரட்டும் நோக்கில் ஸ்பெயின் நாட்டில் பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசை வன்மையாக கண்டித்ததுடன் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கள் காந்தி சிலை எதிரில் கருஞ்சட்டை அணிந்து போராட்டம் நடத்துவர் என் றும் அறிவித்தார். அதன்படி தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று (8.2.2024) கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

# விழுப்புரத்தில் புத்தகத் திருவிழா!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

விழுப்புரம், பிப். 8 -

விழுப்புரம் நகராட்சி திடலில் மாவட்ட நிர்வா கம் மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் சார்பில் புத்தக திரு விழா துவக்க விழா நடந் தது. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார். டாக்டர் லட்சுமணன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக்சிவாச், மாவட்ட வரு வாய் அலுவலர் பரமேஸ்வரி, கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், ஒன்றிய சேர்மன்கள், சச்சிதானந்தம், வாசன், மகளிர் திட்ட இயக்குனர் காஞ்சனா, தென்னிந்திய புத்தக பதிப் பாளர் சங்கத் தலைவர் சேது சொக்கலிங்கம், செயலாளர் முருகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன், உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (07.02.2024) சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் நடத்தும் "செய்க புதுமை" நிகழ்ச்சி மூலம் 4 பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிறுவனங்ளுக்கு ஆதார நிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 9 கோடியே 5 லட்சத்தை பங்கு முதலீட்டு மானிய நிதியாக வழங்கினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் திருமதி.அர்ச்சனா பட்நாயக், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்க தலைமைச் செயல் அலுவலர் சிவராஜா ராமநாதன் ஆகியோர் உள்ளனர்.



வருகின்ற சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடர் 12.2.2024 அன்று தொடங்க இருப்பதால், சட்டப்பேரவையில் உள்ள கணினி, ஒலிப்பெருக்கி மற்றும் இருக்கைகள் சரியாக உள்ளனவா என்பதை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (07.02.2024) பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது, சட்டமன்றப்பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கூட்டுறவுத் துறை மூலம் செயல்படும்

# வங்கிகளின் பணிகள் குறித்து ஆய்வு!

## அதிகாரிகள் கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மேற்கொண்டார்!

சென்னை, பிப். 8 -

கூட்டுறவுத்துறை அமைச் சர் கேஆர்.பெரியகருப்பன், சென்னை, கோட்டூர் புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத் தில் செய்தியாளர்கள் சந்திப் பின் போது தெரிவித்த தாவது :

தமிழ்நாட்டின் முதலமைச் சர் ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படி, கூட்டு றவுத்துறை தனக்கென்று சில திட்டங்களை வகுத்து, அந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அலுவலர் களுக்கு வழிகாட்டு நெறிமு றைகள் தரப்பட்டு செயல்ப டுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக அவர்களுடைய பணிகள் எப்படி இருக்கிறது என்பதை எல்லாம் வாரந்தோ றும் நம்முடைய பதிவாளர் கள், நம்முடைய கூடுதல் தலை மைச் செயலாளர் எல்லாம் ஆய்வுகளை மேற்கொள்கிறார் கள். அமைச்சர் என்ற முறை யில் நானும் அவ்வப்போது ஆய்வுகளை மேற்கொள்ளுவ தோடு, பொதுவாக அனைத்து மாவட்டங்களில் இருந்தும் இருக்கக்கூடிய அலுவலர்க ளைக் கொண்டு ஒரு ஆய்வுக் கூட்டத்தை நேரடியாக நடத் துவது வழக்கம். அந்த வகையி லான கூட்டம் தான் இன்று இங்கே கூட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக, வருகின்ற 12ஆம் தேதி சட்டமன்ற கூட் டத் தொடர் நடை பெறவுள்ள காரணத்தால், கடந்த காலத் தில் அறிவிக்கப்பட்ட அறிவிப் புகள் எந்த அளவிற்கு செயல்ப டுத்தப்பட்டுள்ளது என்றும், இனி புதிய அறிவிப்புக ளாக நாம் என்ன அறிவிக்கலாம் என் பது பற்றியும் கலந்தா லோசிக் கும் கூட்ட மாகத்தான் நாம் இந்த கூட்டத்தை நடத்தி வரு கின்றோம். கூட்டுறவுத்துறை பொதுமக்களோடு நெருங்கிய தொடர்புடைய துறை. அரசு வழங்குகின்ற குடிமைப்பொருட்களை அத்தி யாவசியப் பொருட்களை பொதுமக்களுக்கு முறையாக கொண்டு சென்று சேர்ப்பது மட்டுமில்லாமல், நெருக்கடி காலங் களில் சமீபத்தில் கூட தமிழ்நாடு முதலமைச்சர் அவர் கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட் டங்களுக்கு நிவாரணத்தொகையினை அறி வித்தார்கள்.

அதைப்போல தென்மாவட் டங்களில் திருநெல்வேலி, கன் னியாகுமரி, தூத்துக்குடி, தென் காசி ஆகிய மாவட்டங்களில் பெருமழை பெய்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டது. அந்த பகுதி மக்க ளுக்கு நிவாரணத் தொகைக ளையும் அறிவித்தார்கள்.

அதைபோல இப்போது மட்டும் அல்ல சமீபத்தில் நடந்து முடிந்த பொங்கல் பண் டிகையை ஒட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறி வித்த பொங்கல் தொகுப்பி னையும் கொண்டு சென்று சேர்ப்பது என அன்றாடப் பணிகளோடு கூடுதல் பணி யாக இத்துறையின் மூலம் செயல்படுத்தி வருகிறோம். அதைபோல நலிந்த பிரிவினர், கிராமப்புற மக்கள், விவசாயப் பிரிவினர், கால்நடை வளர்ப் போர், விதவைப் பெண்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்தவர்களுக் கெல்லாம் நிதி உதவிகளை வழங்கி வங்கிசேவையில் ஒரு குறிப்பிடத் தக்க சாதனை யினை கூட்டுறவுத்துறையின் மூலம் செயல்படும் வங்கிகள் மூலம் செயல்படுத்தி வருகிறது. இத்தகைய பணி முன்னேற்றங்களை ஆய்வு செய்கின்ற கூட்டமாக இக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

கூட்டுறவுத்துறையின் சார் பில் கடந்த காலங்களில் சட்ட மன்ற கூட்டத் தொடரில் அறி விக்கப்பட்ட 44 அறிவிப்புகளில் 43 அறிவிப்பு கள் அரசாணை வழங்கி செயல் படுத்தப்பட்டுள்ளது. எஞ்சி யுள்ள ஒரு அறிவிப்பும் இன்னும் ஒரு சில தினங்களில் நடைமுறைக்கு வரும் என் பதை தெரிவித்துக் கொள்கி றேன். மொத்தமாக இன் றைக்கு தமிழ்நாடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் எல்லா துறைகளி லும் சிறப்பாக செயல்பட்டு இந்திய துணைக் கண்டத்தில் சிறந்த முன்னேறுகின்ற மாநில மாக நம்முடைய மாநிலம் இருக்கிறது என்ற நற்பெய ரைப் பெற்று, அதன் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவின் நம்பர் 1 முதலமைச்சர் என்றெல்லாம் பாராட்டப்படுகிறார்கள். அப் படிப்பட்ட பாராட்டுகளைப் பெறுகின்ற முதலமைச்சர் அவர்களின் கட்டளைகளை சிறப்பாக கூட்டுறவுத்துறை செயல் படுத்தி வருகின்றது என் பதை நான் பெருமையோடு பதிவு செய்கின்றேன்.

கேள்வி : மத்திய அரசு பாரத் அரிசி, பாரத் ஆட்டா, குறைந்த விலை மளிகைப். பொருட்களை அறிமுகப்படுத் தியுள்ளது. அதுபோல தமிழ் நாடு அரசு ஏதும் அறிவித் துள்ளதா?

பதில்: சில நேரங்களில் ஒன் றிய அரசும் அத்தியாவசியப் பொருட்களை தருவார்கள். அது உணவுத் துறையின் மூல மாக கொள்முதல் செய்யப் பட்டு, கூட்டுறவுத் துறைக்கு வழங்கப்படும். ஆக இது போன்ற முடிவுகள் உணவுத் துறையின் மூலமாக எடுக்கப்ப டும். நம்முடைய செயலர் அவர்கள் உணவுத் துறைக்கும் செயலராக உள்ளார். இது பற் றிய அறிவிப்புகள் முறையாக அறிவிக்கப்படவில்லை. செய் தித்தாள்களில் வந்துள்ளது.

கேள்வி : ரேசன் கார்டு களை உணவுத்துறை வழங்குகி றது. ரேசன் கடைகளை கூட்டு றவுத்துறை நடத்தி வருகிறது. கடந்த ஓராண்டாக, ஆறு மாதங்களாக ரேசன் கார்டுகள் வழங்கவில்லை என ரேசன் கடைகளில் தான் பொதுமக் கள் பிரச்சனை செய்கிறார்கள் அது பற்றி...

பதில் : ஏற்கனவே கலைஞர் உரிமைத் தொகை பெறுவதற் காக புதிது புதிதாக குடும்ப அட்டைகளுக்கு விண்ணப்பித்தார்கள். ஆகவே, குறிப்பிட்ட காலத்திற்கு நிறுத் திவைக்க வேண்டும் என விரும் பித்தான் அதை செய்தார்கள். கூடிய விரைவில் தற்போது வழங்குவதற்கான நடவடிக் கைகளை காரணி அடிப்படை யில் மேற்கொள்கிறார்கள். நிறுத்தப்பட்ட பணிகள் சில ஆய்வுகள் மேற்கொண்ட பிறகு அதன் அவசியம் கருதி வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட் டியளித்தார்.

# நியாய விலைக் கடைகளில் விரல் ரேகை!

## தமிழ்நாடு அரசு விளக்கம்!

சென்னை, பிப். 8 -

நியாய விலைக் கடைகளில் விரல் ரேகை சரிபார்ப்பு தொடர் பாக சில நாளிதழ்களில் வெளி யான செய்தி குறித்து அரசு அளித் துள்ள விளக்கம் வருமாறு:-

06.02.2024, 07.02. 2024 ஆகிய நாட்களில் சில நாளேடுகளில், நியாய விலைக் கடைகளில் இன்றியமையாப் பண்டங்கள் பெறும் பயனாளிக ளின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் சுயவிவரங்களை ஒரு வெள் ளைத்தாளில் அளிப்பதுடன் விரல் ரேகை சரிபார்ப்பை இம் மாத (பிப்ரவரி) இறுதிக்குள் மேற்கொள்ள வேண்டுமென் றும், அவ்வாறு மேற்கொள்ளாத வர்களின் பெயர்கள் நீக்கம் செய் யப்படும் என்றும், இதனால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந் துள்ளனர் என்றும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013ன் படி, பொதுவிநி யோகத் திட்ட தரவுகளில் ஏற்க னவே பதியப்பட்ட முன்னுரிமை மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டைதாரர்க ளின் ஆதார் விவரங்களைச் சரி பார்ப்பதற்காக மின்னணு குடும்ப அட்டையில் இணைக்கப் பட்ட அனைத்துப் பயனாளிக ளின் விரல் ரேகை அடிப்படையி லான சரிபார்ப்பினை மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதன்படி குடும்ப உறுப்பினர்களுக்கு ஏதும் இடையூறின்றி இப்பணியி னைச் செய்திட அறிவுறுத்தப்பட்டு அவர்கள் ஓய்வாக இருக்கும் போதோ அல்லது பொருள்கள் வாங்க கடைக்கு வரும்போதோ கைவிரல் ரேகைப் பதிவு மூலம் புதுப்பிக்கக் கூறப்பட்டு அக்டோபர் 2023 முதல் குடும்ப உறுப்பினர் களின் விரல்ரேகை சரிபார்ப்புப் பணி நடைபெற்று வருகிறது.

இதுவரை 63% குடும்ப அட் டைதாரர்களின் விவரங்கள் சரி பார்க்கப்பட் டுள்ளன. மீதியுள்ள அட்டைதாரர்களுக்கும் சரிபார்க் கும் பணி படிப்படியாக நடை பெற்று வருகிறது. குடும்ப அட்டை தாரர்கள் அவரவர்கள் வசதிக்கேற்ப விவரங்களைப் புதுப்பித்துக் கொள்ளலாம். அவ் வாறு இயலவில்லையெனில், இதற்கென தனி முகாம்கள் நடத் தவும், தேவைப்படின் வீட்டிற்கே சென்று புதுப்பித்திடவும் நடவ டிக்கை எடுக்கப்படும். சில நாளி தழ்களில் குறிப்பிட்டிருப்பது போல் குடும்ப அட்டைகள் ஏதும் இரத்து செய்யப்பட மாட்டாது என் றும், கைவிரல் ரேகை பதிவு செய் யாதவர்களின் பெயர்களும் நீக் கப்படாது என்றும், வெள்ளைத்தாளில் சுய விவரங் கள் ஏதும் தரவேண்டியது மில்லை என்பதால், இதுகுறித்து பொதுமக்கள் யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நேற்று (07.02.2024) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்றது. உடன் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர்.கே.கோபால், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன். சிறப்புப்பணி அலுவலர் (தமிழ்நாடு கூட்டுற கூட்டுறவு வங்கி) எம்.பி.சிவன்அருள் (ஓய்வு) அவர்கள் உட்பட கூடுதல் பதிவாளர்கள், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள், கூட்டுறவுத்துறை அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# ராம ராஜ்யத்துக்குப் பதிலாக - நாடு முழுதும் பெரியார் ராமசாமி ராஜ்யத்தை உருவாக்குவோம்!

## தூத்துக்குடியில் – கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**தூத்துக்குடி, பிப். 8 -**

**தூத்துக்குடி தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், உடன்குடியில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் “I.N.D.I.A வெல்வது நிச்சயம்” என்ற தலைப்பில் பிப்ரவரி 5-ஆம் தேதி திங்களன்று நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில் “ராமராஜ்யத்துக்குப் பதிலாக நாடு முழுவதும் சமூக நீதிக்கு வித்திட்ட தந்தை பெரியார் ராமசாமி ராஜ்யத்தை உருவாக்குவோம்” எனக் குறிப்பிட்டார்.**

இந்நிகழ்வில், மாற்றுக் கட்சிகளில் இருந்து பலர் விலகி கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

இப்பொதுக்கூட்டத்தில் கனிமொழி எம்.பி. அவர்கள் உரையாற்றியதாவது:-

“நமது தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி தேர்தல் அறிக்கை குழு தனது பயணத்தை தூத்துக்குடியில் தொடங்கியிருக்கிறது. காலையில் இருந்து பல தரப்பு மக்களைச் சந்தித்து குழுவினர் நாங்கள் உரையாடியிருக்கிறோம்.

இந்தத் தேர்தல் மிக முக்கியமான தேர்தல். ஒன்றியத்தில் இம்முறை ஏன் மாற்றம் வந்தே ஆக வேண்டும் என்பதை இங்கே பேசியவர்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தார்கள். ஆட்சி மாற்றம் இந்த நாட்டிலே வரவில்லை என்றால், பி.ஜே.பி.யை வீட்டுக்கு அனுப்பி விட்டு ஒரு நல்லாட்சியை நாம் தேசிய அளவிலே உருவாக்கவில்லையென்றால், இன்று நாம் பார்க்கக் கூடிய இந்தியா இல்லாமல் போய்விடும்.

அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் பேசும் போது இந்த மேடையிலே இல்லாத சாதியுண்டா மதமுண்டா என்று கேட்டார்கள். சகோதரர்களாக சகோதரிகளாக எந்த மாச்சர்யமும் இல்லாமல் கோபமும் இல்லாமல் அத்தனை பேரும் இங்கே தமிழர்களாக மனிதர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒருவரை ஒருவர் நேசிக்கிறோம். ஒருவருக்கொருவர் உதவிக் கரம் நீட்டுகிறோம். அன்பு செய்கிறோம்.

**இந்துக்களை அரசியல் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள்!**

ஆனால் இந்த ஒன்றியத்திலே இருக்கும் ஆட்சி என்ன செய்து கொண்டிருக்கிறது? தொடர்ந்து மக்களைப் பிரித்தாளும் வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்துக்களை, இந்து மக்களை நாங்கள்தான் காப்பாற்றுகிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் இந்துக்களை பாதுகாக்கவில்லை. இந்துக்களை தங்களது அரசியல் கேடயமாக அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தன் அரசியல் ஆயுதமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பெரும்பான்மையாக இருக்கும் இந்து மக்களுக்காக இந்த ஆட்சி என்ன செய்திருக்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள். எதுவும் கிடையாது.

மாணவர்கள் படிப்பதற்கு எதுவும் செய்கிறார்களா? ஸ்காலர்ஷிப் எல்லாம் நிறுத்தியாச்சு. பெரும்பான்மை மக்களுக்கான வேலை வாய்ப்புகள் ஏதும் செய்திருக்கிறார்களா? நம் நாட்டில் சுதந்திரம் பெற்ற பிறகு இன்றுதான் அதிகம் பேருக்கு வேலையில்லாத சூழலை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். இதுதான் அவர்களது சாதனை. இதனால் பெரும்பான்மை இளைஞர்கள், இளம்பெண்கள் இந்துக்களாக இருப்பவர்கள்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்படி விவசாயிகள், தொழிலாளர்கள் என்று எந்த துறையை சேர்ந்த மக்களாக இருக்கட்டும். அவர்களுக்கு என்று எந்த நலனையும் எந்த திட்டத்தையும் செய்ய முன்வராத ஆட்சிதான் ஒன்றிய பி.ஜே.பி. ஆட்சி.

**போராடிய எம்.பி.க்கள் சஸ்பெண்ட்**

நான் ஒன்றே ஒன்றை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். யாரிடம் கேட்கவில்லை, யாரிடமும் ஆலோசிக்கவில்லை. யாரிடமும் கேட்காமல் பெரும்பான்மையான விவசாயிகளுக்கு எதிராக சட்டங்களை கொண்டு வருகிறார்கள். விவசாயிகள் அந்த சட்டங்களை எதிர்த்து மாதக் கணக்கில் போராடினார்கள். போராட்டத்திலே பலர் உயிரிழந்தார்கள். அப்போதெல்லாம் கண்டுகொள்ளாத பி.ஜே.பி. ஆட்சி, தேர்தல் வந்தபோது அந்த சட்டங்களை பின் வாங்கினார்கள். இந்த சட்டம் கொண்டு வந்த போது அதற்கு எதிராக போராடிய எம்.பி.க்களை சஸ்பெண்ட் செய்கிறார்கள். அந்த எம்பிக்களை சஸ்பெண்ட் செய்தது தவறு என்று நாங்கள் போராடி வெளி நடப்பு செய்தபோது… அந்த நேரத்தில் தொழிலாளர்கள் நல சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள்.

**வழக்கறிஞர்களுக்கே புரியாத - இந்தியில் சட்டம்**

இந்த நாட்டிலே இருக்கும் சாதாரண சாமானிய மக்களுக்கு எதிரானது. அதேநேரம் மாநில உரிமைகளுக்கு எதிரானது. எந்த சட்டத்தை எடுத்துக் கொண்டாலும் மாநில உரிமைகளை கொஞ்சம் கொஞ்சமாக பறிக்கும் சட்டங்கள்தான். சென்ற நாடாளுமன்ற கூட்டத் தொடரிலே புதிய குற்றவியல் சட்டங்களை கொண்டு வந்தார்கள். அதன் பெயர் எல்லாமே இந்தியிலே இருக்கிறது. பாதி வழக்கறிஞர்களுக்கே புரியவில்லை. ஜட்ஜுகளுக்கே புரிய



வில்லையாம். பாதி ஜட்ஜுகள் புரியாமல்தான் இருக்கிறார்கள். என்ன செய்ய முடியும்?

இப்படிப்பட்ட சூழலிலே யாரும் இவர்களை எதிர்த்து கேள்வி கேட்கக் கூடாது. இவர்களை எதிர்த்துக் கேள்வி கேட்ட சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் எத்தனை பேர் உயிரிழந்திருக்கிறார்கள் என்பதை கணக்கிட்டு சொல்ல முடியாது. அந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

‘நாங்கள் ஒரு பழங்குடியினரை கொண்டு வந்து குடியரசுத் தலைவராக வைத்திருக்கிறோம்’ என்று பெருமையாக சொல்கிறார்கள். ஆனால் அவரை புதிய நாடாளுமன்றம் தொடங்கும்போது அழைக்கவில்லை. அப்புறம் கோயில் திறந்தார்கள், அங்கேயும் அவருக்கு அழைப்பில்லை.

முதல் முறையாக இந்த கூட்டத் தொடரில் தான் நம்முடைய குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்துக்கு அழைத்து வரப்படுகிறார். காரணம் வேறு வழியில்லை., அவர் உரையாற்றியாக வேண்டும். அதற்கு முன்னால் அவர்களுக்கு நாடாளுமன்றத்துக்கு வருவதற்கு அழைப்பு இல்லை, அனுமதியும் இல்லை. ஆனால் பழங்குடியினத்தைச் சேர்ந்தவரை குடியரசுத் தலைவராக ஆக்கியிருக்கிறோம் என்று பெருமை பேசுகிறார்கள்.

அதே பழங்குடியின மக்களுக்காக தன் வாழ்நாளெல்லாம் பாடுபட்ட கிட்டத்தட்ட 82 வயதுக்கு மேல் இருக்கக் கூடிய ஸ்டேன் சாமி என்ற பாதிரியாரை தேச விரோதி என்று சொல்லி சிறையில் அடைத்து, அவரால் தண்ணி கூட எடுத்துக் குடிக்க முடியாது. தசைகள் எல்லாம் நலிந்துவிட்டன. அந்த பிரச்சினையிலே தவித்துக் கொண்டிருந்த வரை 82 வயதில் இந்த தேசத்துக்கு எதிராக சதி செய்கிறார் என்று சொல்லி சிறையில் அடைத்தனர். அவரால் தண்ணீரை கையால் டம்ளரில் எடுத்து குடிக்க முடியாது. அவர் ஒரு ஸ்ட்ரா வாங்குவதற்கு நீதிமன்றங்களை அணுகி போராட வேண்டியிருந்தது. இதுதான் அவர்களுக்குத் தெரிந்த நீதி நேர்மை.

இந்த ஆட்சி மறுபடியும் வந்தால் நாடாளுமன்றம் நாடாளுமன்றமாக இருக்காது. ஜனநாயகம் என்பது காணாமல் போய்விடும். மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது நான் நாடாளுமன்றத்திலே இருந்திருக்கிறேன். பிரதமர் மன்மோகன் சிங் அவைக்கு வருவார். முடிந்தவரை அவையில் இருப்பார். ஏதாவது ஒரு கேள்வி எழுப்பப் பட்டால் பிரதமரே எழுந்து பதில் சொன்னதை எல்லாம் நான் பார்த்திருக்கிறேன். இங்கே இருக்கிற பீட்டர் அல்போன்ஸ் அண்ணன் பார்த்திருப்பார்.

ஆனால் இப்போதைய நம்முடைய பிரதமர் என்றைக்காவது… நாம் அத்திப் பூத்தது போல் என்று சொல்வோம் இல்லையா… அதையும் தாண்டி ஏதாவது அரிதினும் அரிதாக கிடைக்கக் கூடியதாக இருந்தது என்றால் அப்போது தான் வருவார். அவர் பேசும் நான்கு தவிர ஐந்து நிமிடத்துக்கு மேல் நாடாளுமன்றத்தில் உட்கார மாட்டார். அவர் உட்காராத காரணத்தால் இரண்டு இளைஞர்கள் தங்களுடைய கோபத்தைக் காட்டுவதற்காக, இளைஞர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்பதற்காக பார்வையாளர் மாடத்தில் இருந்து குதிக்கிறார்கள். கால் செருப்பில் இருந்து இரு பொருட்களை எடுத்து புகையடிக்கிறார்கள். அந்த மன்றத்திலே தான் இந்த நாட்டின் முக்கியமான தலைவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அந்த நேரத்தில்தான் ராகுல் காந்தி அவையிலே அமர்ந்திருக்கிறார்.

**யாருக்கும் பாதுகாப்பு இல்லை**

இப்படிப்பட்ட ஒரு சூழலிலே யாருக்குமே பாதுகாப்பு இல்லையே, இது எப்படி நடந்தது என்று கேள்வி கேட்ட காரணத்துக்காக…. இந்த நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக மக்களவை, மாநிலங்களவை என இரு அவைகளிலும் இருக்கும் எதிர்க்கட்சி எம்.பி.க்களை சஸ்பெண்ட் செய்து அவையில் இருந்து நீக்குகிறார்கள்.

நாடாளுமன்ற பாதுகாப்பு வளையத்தைத் தாண்டி எப்படி அவர்கள் வந்தார்கள்? நல்ல பிரதமராக இருந்திருந்தால் அவர் கூட அவையிலே இருந்திருப்பார் அல்லவா? பிரதமருக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் இருக்கிறதே? என்று கேள்வி கேட்டதற்காக அத்தனை பேரும் சஸ்பெண்ட் செய்யப்படுகிறோம்.

இதுதான் மறுபடியும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் தினமும் நடக்கும் ஒன்றாக மாறி விடும். கேள்வி நேரத்தில் எழுந்து கேள்வி கேட்டால் கூட சஸ்பெண்ட் செய்து விடுவார்கள்.

அதனால் இந்த நாட்டை, நாட்டின் ஜனநாயகத்தை, உங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றால், கல்வியை, கல்விக்கான உரிமையை பாதுகாக்க வேண்டுமென்றால்… கல்விக்கான உரிமையை, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று கலைஞர் கொண்டு வந்த சட்டத்தை நிறைவேற்றித் தந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. இன்று பெண்களும் அர்ச்சகர் ஆகலாம் என்ற நிலையை உருவாக்கித் தந்திருப்பது நாம்.

ஆனால் கோயிலுக்குள் பிரதமரே வர முடியாத ஜனாதிபதியே வர முடியாத சூழலை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது சாதாரணமாக இருக்கக் கூடிய சூழலாக மாறும்,

ஒடுக்கப்பட்டவர்கள் மறுபடியும் ஒடுக்கப்படுவார்கள். உங்கள் கைகளில் இருக்கும் உரிமைகள் எல்லாம் தட்டிப் பறிக்கப்படும். புதிய கல்விக்கொள்கை என்பது நம் பிள்ளைகள் எந்த கல்லூரிக்கு போக வேண்டும் என்றாலும் நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். நீட் தேர்வு மூலம் நம் பிள்ளைகள் மருத்துவம் பயில முடியாமல் தடுப்பவர்கள், நம் பிள்ளைகள் கல்லூரிக்கு போய் படிக்க முடியாத சூழலை உருவாக்குவார்கள்.

**அடிமை நிலையை உருவாக்க நினைக்கிறார்கள்!**

முன்பு அடிமைகளாக இருந்த நிலையை மீண்டும் உருவாக்க நினைக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இங்கே அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் பேசும்போது ராமராஜ்யம் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். இவர்கள் உருவாக்கும் ராமராஜ்யம் என்பது யாருக்கும் எந்த உரிமையும் அற்ற மோடி ராஜ்யமாக ஆர்.எஸ்.எஸ். ராஜ்யமாகவே இருக்கும். பஜ்ரங் தள் ராஜ்யமாகவே இருக்கும்.

தமிழ்நாட்டில் நம்முடைய கனவு என்பது பெரியார் ராமசாமி ராஜ்யம். அதை நாடு முழுதும் உருவாக்கிக் காட்டுவோம்” .

இவ்வாறு தனது உரையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் குறிப்பிட்டார்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளருமான அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி. மார்க்கண்டேயன், ஊர்வசி அமிர்தராஜ், ஆளூர் ஷானவாஸ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் பிரம்மசக்தி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

---

‘திராவிட மாடல்’ ஆட்சியின் முற்போக்குத் திட்டங்களால்

# தமிழ்நாட்டில் உயர்கல்வி மாணவர்களின் - தேர்ச்சி 52% ஆக உள்ளது!

## மக்களவையில் டாக்டர் டி.என்.வி.செந்தில் குமார் பேச்சு!

*புதுடெல்லி, பிப்.8-*

தமிழ்நாட்டில் உயர் கல்வி படிக்கும் மாணவ மாணவியரின் தேர்ச்சி 52 சதவிகிதமாக உள்ளது. டெல்லியில் உட்கார்ந்து கொண்டு தமிழ்நாடு மற்றும் வடகிழக்கு மாநிலத்தில் என்ன படிக்க வேண்டும் எந்த மொழி பேச வேண்டும் என்று முடிவு செய்ய முடியாது என்று தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் டி.என்.வி.செந்தில்குமார் எம்.பி. நாடாளு மன்றத்தில் பேசினார்.



இதுகுறித்து அவர் பேசியதாவது :

கல்வியில் தமிழ்நாடு மிகப்பெரிய கலங்கரை விளக்கமாக திகழ்கிறது. மாநிலத்தில் ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் ஒரு தொடக்கப்பள்ளி. ஒவ்வொரு மூன்று கிலோமீட்டருக்கும் ஒரு நடுநிலைப் பள்ளி ஒவ்வொரு ஐந்து கிலோ மீட்டருக்கும் ஒரு உயர்நிலைப்பள்ளி ஒவ்வொரு ஏழு கிலோ மீட்டருக்கும் ஒரு மேல்நிலை பள்ளி உள்ளது. தமிழ்நாட்டில் உயர்கல்வி படிக்கக்கூடிய மாணவ மாணவியரின் மொத்த சதவீதம் 52% எட்டி உள்ளது.

இந்த இலக்கு தேசிய சராசரி விட மிகவும் அதிகம் தமிழ்நாட்டில் இப்போதே எட்டியுள்ள இலக்கை இந்தியா 2030ஆம் ஆண்டுக்குள் எட்ட வேண்டும் என இலக்கு வகுத்துள்ளது ஆனால் தமிழ்நாடு இப்போது எட்டி சாதனை படைத்துள்ளது. சாதனைக்குக் காரணம் திராவிட கோட்பாடுகள் மற்றும் சித்தாந்தங்கள் கொண்ட கொள்கை தான் காரணம். 1920 ஆம் ஆண்டு நீதிக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தான் சென்னை மாநகராட்சி பள்ளிக்கான மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது பின்னாளில் பெருந்தலைவர் காமராஜர் என்ற மாபெரும் தலைவரால் அது முழுமையாக கொண்டு வரப்பெற்றது.

மாணவர்களை கல்விக்காக பள்ளிக்கு அழைத்து வந்த பல திட்டங்கள் திராவிட மாடல் அரசியலால் செயல்படுத்தப்பட்டன. மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் செயல்படும் முன்னேறிய திட்டங்களில் முதன்மையாக தொடங்கப்பட்டுள்ள காலை உணவுத் திட்டமாகும். அரசு பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் மற்றொரு திட்டமும் உள்ளது இவை மாணவிகள் படிப்பு முடியும் வரை அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது இவை அனைத்தும் தமிழ்நாடு அடைந்திருக்கும் வளர்ச்சியை ஆகும்.

மொத்த சேர்க்கை விகிதத்தில் அதிகமாக பெண் கல்வி க்கு ஊக்குவிக்கும் வகையில் கல்வி பொதுப் பட்டியலிருந்து மாநில பட்டியலில் கொண்டுவர வேண்டும். டெல்லியில் உட்கார்ந்து கொண்டு தமிழ்நாடு மற்றும் வடகிழக்கு மாநிலத்தில் என்ன படிக்க வேண்டும் எந்த மொழி பேச வேண்டும் என்று முடிவு செய்ய முடியாது. வளர்ந்த நாடுகளில் கூட கல்விக் கொள்கையை மாகாணம் அல்லது மாநில அரசு தீர்மானமாக எடுத்துக் கொள்கிறதே தவிர ஒன்றிய அரசு செய்வதில்லை. எனவே கல்வி மாநில உரிமைகள் மற்றும் மொழி உரிமைகளின் முக்கியத்துவம் அளித்து கலாச்சார பன்முகத்தன்மை காக்கப்பட வேண்டிய நேரம் இது.

தமிழ்நாட்டின் தொலை நோக்குப் பார்வை கொண்ட மாபெரும் தலைவர் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் தான் தொழில் முறை படிப்புகளில் நுழைவுத் தேர்வை ரத்து செய்தார். கிராமப்புற மாணவர்கள் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகள் சேர முடிந்தது. ஆனால் இப்பொழுது இருக்கும் நீட் தேர்வால் வசதி படைத்தவர்கள் மட்டுமே தேர்ச்சி பெற முடிகிறது. மேலும் மாணவர்களை மனிதாபிமானத்துடன் நடத்துங்கள் நீட் பரீட்சை மையங்களுக்குள் நுழையும் முன் பரிசோதனை செய்து அவர்களை பயங்கரவாதிகள் போல கருதி சோதனை செய்து மாணவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்துகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (07.02.2024), மாநகர் போக்குவரத்துக் கழக சைதாப்பேட்டை பணிமனையில், குளிரூட்டப்பட்ட பணியாளர் ஓய்வு அறையினை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கிஸ், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ்குமார், மா.போ.க. இணை மேலாண் இயக்குநர் க.குணசேகரன், உயர் அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

---

சொந்த யூடியூப் சேனல் உருவாக்குதல் – யூடியூப் சேனலைப் பயன்படுத்தி

# தயாரிப்புகளை சந்தைப்படுத்தல் குறித்த மூன்று நாள் பயிற்சி!

## தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு - புத்தாக்க நிறுவனம் வழங்குகிறது!

*சென்னை, பிப்.8 -*

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், உங்களது சொந்த யூடியூப் சேனலை உருவாக்குதல் மற்றும் இணையதளத்தில் யூடியூப் சேனலை பயன்படுத்தி உங்கள் தயாரிப்புகளைச் சந்தைப்படுத்தல் குறித்த பயிற்சி வரும் 10.02.2024 முதல் 12.02.2024 தேதி வரை காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் தொழில் முனைவோர் யூடியூப் சேனலை உருவாக்குவது எப்படி, வீடியோ மற்றும் ஸ்லைடு ஷோ உருவாக்கம், சமூக ஊடக சந்தைப்படுத்தல், சமூக ஊடகங்களை இணைத்தல், வாடிக்கையாளர் நெட்வொர்க்கை எவ்வாறு அதிகரிப்பது, பயனுள்ள சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு ஆன்லைன் மார்க்கெட்டிங் மற்றும் விதிகள் ஆகியவற்றை விரிவாக விளக்கிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032. 44-22252081/22252082, 8668102600 / 86681 00181 / 7010143022.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தலைமைச் செயலகத்தில், நேற்று (07.02.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் முன்னிலையில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் வணிக நிறுவனப் பெயர் பலகைகள் தமிழில் இடம்பெற வலியுறுவதற்கான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி பகுதியில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் நபார்டு WIF TNSAMB நிதியுதவியுடன் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார். உடன் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஜி.பிரகாஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



சென்னை இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக நடத்தப்பட்ட நன்றி அறிவிப்பு மாநாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் குறித்து நூறு ஆசிரியர்கள் எழுதிய கவிதைகளின் தொகுப்பினை புத்தகமாக ‘ கல்வியில் கலைஞர் ‘ என்ற தலைப்பில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட சங்கத்தின் மாநில தலைவர் கு.தியாகராஜன் பெற்றுக் கொண்டார்.

## நீலகிரி மாவட்டம், உதகை வட்டத்தில் மண் சரிந்து

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம்!

## முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப்.8-

நீலகிரி மாவட்டம், உதகை வட்டத்தில் மண் சரிந்து உயிரிழுந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 இலட்சம் வழங்கிட உத்தரவிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், உதகை நகரம் கிழக்கு கிராமம், லவ்டேல் காந்தி நகர் பகுதியில் நேற்று (7.02.2024) நண்பகல் தனியாருக்குச் சொந்தமான சுவர் ஒன்றை இடிக்கும் பணியில் 17 கட்டுமானத் தொழிலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக மண் சரிந்து 10 நபர்கள் சிக்கிய விபத்தில் திருமதி.ராதா (வயது 38), திருமதி.பாக்கியம் (வயது 36), திருமதி.முத்துலட்சமி (வயது 36), திருமதி.உமா (வயது 35) திருமதி.சங்கீதா (வயது 30) மற்றும் திருமதி.சகிலா (வயது 30) ஆகிய ஆறு பெண் தொழிலாளர்கள் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் திருமதி.ஜெயந்தி (வயது 56), திருமதி.சாந்தி (வயது 45), திரு தாமஸ் (வயது 24) மற்றும் மகேஷ் (வயது 23) ஆகிய நான்கு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச் சரின் பொது நிவாரண நிதியி லிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## நேரு - இந்திரா ஆகியோர் நாட்டிற்கு ஆற்றிய கடமைகளின்

# புகழ் வெளிச்சத்தை மோடியால் மறைக்க முடியவில்லை!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, பிப். 8-

நேரு, இந்திரா ஆகியோர் நாட்டிற்கு ஆற்றிய கடமைகள் இந்திய மக்களுக்குத் தெரியும். அவர்களின் புகழ் வெளிச்சத்தை இந்த 10 ஆண்டு காலம் ஆட்சி செய்தும் மோடியால் மறைக்க முடியவில்லை என ‘தினகரன்’ நாளேடு 7.2.2024 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக மக்களவையில் பிரதமர் மோடி ஆற்றிய உரை அவரது விரக்தி பேச்சின் வெளிப்பாடு போல் உள்ளது. நாட்டின் வளர்ச்சிக்காக கடந்த 10 ஆண்டுகளில் அவர் ஆற்றிய சாதனைகள் பட்டியலை வெளியிட்டு பேசவில்லை. அவர் கொண்டு வந்த திட்டங்கள் என்னென்ன, எந்த அளவுக்கு அது வெற்றி பெற்று இருக்கிறது என்பது குறித்து எடுத்துரைக்கவில்லை. இன்னும் நாட்டில் இருக்கும் பல்வேறு பிரச்னைகள் குறித்து அவர் வாய்திறக்கவில்லை.

ஆனால், வார்த்தைக்கு வார்த்தை 10 ஆண்டுகளாக எதிர்க்கட்சியில் இருக்கும் காங்கிரஸ் பற்றி பேசியிருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் அவை மரபு, கண்ணியத்தை மீறி பொதுக் கூட்ட மேடையில் பேசுவது போன்று இந்தியாவின் முதல் பிரதமர் நேருவையும், இந்தியாவின் பலத்தை உலகிற்கு எடுத்துரைத்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியை பற்றியும் அவர் விமர்சனம் செய்து இருக்கிறார். நேரு, இந்திரா ஆகியோர் இந்த நாட்டிற்கு ஆற்றிய கடமைகள் இந்திய மக்களுக்கு தெரியும். அவர்களின் புகழ் வெளிச்சத்தை இந்த 10 ஆண்டு காலம் ஆட்சி செய்தும் மோடியால் மறைக்க முடியவில்லை. தெலங்கானா தேர்தலில் இந்திரா, இந்திரா என்ற கோஷம் காங்கிரசுக்கு வெற்றியை பெற்று தந்த வலியை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்த விரக்தியை, வெறுப்பைத்தான் நாடாளுமன்றத்தில் தான் ஒரு பிரதமர் என்பதையும் மறந்து அப்பட்டமாக, அத்து மீறல் வார்த்தைகளில் பேசியிருக்கிறார் மோடி.



தினகரன்

விரக்தி பேச்சு

மோடி தலைமையிலான அரசு அளித்த வாக்குறுதிப்படி ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்பு குறித்தும், அதில் எத்தனை கோடி வேலைகள் இந்த 10 ஆண்டுகளில் இளைஞர்கள் கைவசம் வழங்கப்பட்டு இருக்கிறது என்பது பற்றியும் அவர் பேசவில்லை. 2014ல் அறிவித்தது போன்று வெளிநாடு வங்கிகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்து இருக்கும் கருப்பு பணம் எவ்வளவு மீட்கப்பட்டது என்பது பற்றி அறிவிக்கவில்லை. சுவிஸ் வங்கியில் கருப்பு பணம் பதுக்கி வைத்தவர்கள் பட்டியல் கிடைத்தும், இதுவரை ஏன் அந்த பட்டியலை வெளியிடவில்லை என்பது பற்றியும் சொல்லவில்லை. தாறுமாறாக உயர்ந்து இருக்கும் விலைவாசி பற்றியோ அல்லது பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தி மக்களை கொள்ளையடிக்கும் தந்திரம் பற்றியோ அல்லது ஜிஎஸ்டி போட்டு மக்கள் ரத்தத்தை உறிஞ்சி எடுப்பது பற்றியோ அல்லது கிட்டத்தட்ட ஒருவருடமாக பற்றி எரிந்து கொண்டு இருக்கும் மணிப்பூர் பற்றியோ அல்லது சீனாவின் ஆக்கிரமிப்பு பற்றியோ அல்லது பெரு முதலாளிகளுக்கு தள்ளுபடி செய்த

ரூ.15 லட்சம் கோடி பணம் பற்றியோ அல்லது இந்த 10 ஆண்டு ஆட்சிகாலத்தில் வாங்கிய ரூ.117 லட்சம் கோடி கடன் பற்றியோ, அதை எப்போது அடைக்கப்போகிறார் என்பது பற்றியோ மோடி வாய் திறக்கவில்லை.

ஆனால், சுதந்திரம் பெற்ற போது பிரிட்டிஷ் கொள்ளையால் பஞ்சத்தாலும், பட்டினியினாலும் தவித்த இந்தியாவை தன்னிறைவு நோக்கி நகர்த்திய நேருவைப்பற்றி பேசியிருக்கிறார். வங்கிகளை பொதுத்துறை நிறுவனமாக மாற்றி ஏராளமான வளர்ச்சிப்பணிகளை செய்த இந்திராவை பற்றி பேசியிருக்கிறார். ஆனால் மோடி?. அவரது சாதனை என்ன, அவர் நாட்டை எந்த திசை நோக்கி நகர்த்திச்சென்று கொண்டு இருக்கிறார் என்பதும், நாடு இப்போது எந்த சூழலில் இருக்கிறது

என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## ரூ.3,440 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன !

# தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு !

## தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி !

சென்னை, பிப். 8-

தொழில் முதலீடுகள் ஈர்ப்பு நடவடிக்கையின் வெற்றியை தொடர்ந்து, தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு குறித்த மிக சிறப்பான அறிவிப்புகள் விரைவில் வெளி வரும் என தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாட்டில் தொழில் துறை வரலாறு காணாத மிகப்பெரிய வளர்ச்சியை கண்டு வருவதாகவும், உலக முதலீட்டாளர் மாநாடு மூலம் 6.66 லட்சம் கோடி அளவிற்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். முதலமைச்சரின் ஸ்பெயின் பயணம் மூலம் 3 ஆயிரத்து 440 கோடி ரூபாய்க்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களுக்கு குறிப்பாக நான் முதல்வன் திட்டம் மூலம் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு குறித்த மிக சிறப்பான அறிவிப்புகள் விரைவில் வர உள்ளதாகவும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா குறிப்பிட்டார்.

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தும் ஆர்ப்பாட்டத்தில்

# சென்னை வடக்கு மாவட்டக் கழகத்தினர் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா அறிக்கை!

சென்னை, பிப்.8-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தும் ஆர்ப்பாட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் பங்கேற்பீர் என்று மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :

கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி மதவாத மத்திய பா.ஜ.க. அரசை கண்டித்து மார்க்



சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ள ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் சென்னை வடக்கு மாவட்ட கழகத் தோழர்கள் இன்று (8-2-2024) காலை 09.00 மணிக்கு இராயபுரம் ஆர்.கே. நகர் தொகுதிக்கு உட்பட்ட கழகத் தோழர்கள் வண்ணாரப்பேட்டை தபால் நிலையம் அருகிலும், பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட கழகத் தோழர்கள் பெரம்பூர் ரயில் நிலையம் அருகிலும் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தா.இளைய அருணா அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.


## சைதை மேற்கு பகுதி 139 ‘அ’ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்

# ஜி.ரஞ்சித் - ஆர்.கீதா திருமண வரவேற்பு : அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாழ்த்து!

## சை.மு.சேகர் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ் - ஶ்ரீதரன் முன்னிலை!

சென்னை, பிப். 8 -

சைதை மேற்கு பகுதி 139 அ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜி. ரஞ்சித் ஆர்.கீதா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்க்கி 10.2.2024. சனிக்கிழமை மாலை.6.30 மணியளவில். அப்துல் ரசாக் தெரு, ராஜ் தியேட்டர் அருகில் உள்ள சைதை எஸ்.பி.எஸ்.மகாலில் நடைபெறுகிறது. வட்டச் செயலாளர் சை.மு.சேகர் தலைமை தாங்குகிறார். பகுதிச் செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், வழக்கறிஞர் எம். ஶ்ரீதரன், சைதை. மா.அன்பரசன். தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னிலை வகிக்கின்றனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, துணை மேயர் மு. மகேஷ்குமார், ஏ.எம். வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. சைதை . எஸ்.குணசேகரன், சைதை சம்பத், மின்னல்கந்தப்பன், களக்காடி எல்லப்பன், வி.பி. ஜானகிராமன், சைதை த.சம்பத், சைதை ஆர். ரமேஷ், கவிதா கௌதமன், ப.சுப்பிரமணி எம்.சி, தா.மோகன்குமார்எம்.சி, ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டன், எம்.நாகா, அட்கோ கமலநாதன், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் டி.என்.சிவமணி, வீ.மதிவாணன், ஜி.கே.ராமசந்திரன், கு.புகழ்வேந்தன், கிண்டி ஆர்.எல். செல்வம், எம்.எஸ்.ஹரிபாபு, பொன்.ஜெய்சிங், சைதை. ஆர்.ரவி, பால்கார் ஏ.ரவி, சைதை ஜி.பாபு, சைதை. சாதிக், நா.மணிகண்டன், த.பாபு, ஆர்.கிருஷ்ண குமார், வெ.புருசோத்தமன், எம்.எஸ்,மணி, என். தீனதயாளன், ப.நரேஷ்,

சைதை மேற்கு பகுதி 139 அ வட்ட கிளை நிர்வாகிகள் இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி வெங்கடேசன், நியு காலனி சம்பத், ஜி.ஏழுமலை, கொடி து.சுரேஷ் பாபு, டி.கோபால கிருஷ்ணன், எஸ்.முகமது அலி, என்.ராஜேஷ். அணிகளின் நிர்வாகிகள் இரா. சத்யா, ம.சுகுமார், க. தீபன், ஜி.வெங்கடேஷ், சார்ப் சரவணன், ராஜா ஆறுமுகம், பா.மோ.கார்த்திக், ஜிம்.க.பிரபு, இ.வ.ரகுபதி, துளசி சந்திரசேகர், வி.ஆதிகேசவன், மு.காத்தவராயன், தோட்டம் ஆர். ஜவகர், த.சேகர், ப.தினகரன், த.வின்சென்ட், எம். சுந்த ரேசன், என்.சண்முகம், மா.கோவிந்தசாமி மற்றும் கே.விஜயகுமார், என்.ரமேஷ், வி.வாசுதேவன், எஸ்.கண்ணன், ப.எழிலரசன், ஆர்.பெருமாள், ஆர்.தாமோதரன், ப.சிவ குமார், எஸ்.சையத் ஜலால், எஸ்.சரத்குமார், ம.திலீபன், து.வடிவேலன், சேகர் நகர் ஆர்.ஞானவேல், எஸ்.பி. தினேஷ்குமார், எஸ்.ஏழுமலை, பி.ராமதாஸ் போட்டோ ரவி, கோ.லட்சுமணன், கோ.குமார், ஜோ.அந்தோணி, ஜெ.தமிழ்ச்செல்வன், ஆயில் எம்.சரவணன், டி.ஜானகிராமன், து.மா. பொ.சி, ஆர்.கண்ணன், சைதை மு.காரத்திக், ப. மோகன்,கே.பூபதி, கே. கோபாலகிருஷ்ணன், எஸ்.வி.நட்டார், கே.பாரி, கே.வெங்கடசன், ஜெ.விஜயகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களைவாழ்த்துகின்றனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருத்தணியில் புதிதாக ரூபாய் 164 லட்ச ரூபாயில் கட்டப்பட்டு வரும் சார்பதிவாளர் அலுவலகத்தை மாவட்ட கழக செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு உடனடியாக கட்டிடத்தை முடிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவித்தார். அருகில் ஒன்றிய கழக செயலாளர் ஆர்த்தி ரவி, ஊராட்சி மன்ற தலைவர் கமலநாதன் உள்பட அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



சென்னை, சோழிங்கநல்லூர் தொகுதி, தமிழ்நாடு மின்சார வாரிய தாம்பரம் கோட்டம் இரண்டு கோட்டங்களாக பிரிக்கப்பட்டு சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட, பள்ளிக்கரணை, ஜல்லடியான்பேட்டை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், சித்தாலப்பாக்கம், பெரும்பாக்கம், நன்மங்கலம், ஒட்டியம்பாக்கம், வேங்கைவாசல் ஆகிய பகுதிகளுக்கு தனிக் கோட்டமாக, பெரும்பாக்கம், சேரன் நகரில், புதிய அலுவலகத்தை, சட்டமன்ற உறுப்பினர் எஸ். அரவிந்த்ரமேஷ் திறந்து வைத்தார்கள். நிகழ்ச்சியில், சென்னை தெற்கு வட்டம் 2 மேற்பார்வை பொறியாளர் முரளி, சோழிங்கநல்லூர் கோட்ட செயற் பொறியாளர் பாலசுப்பிரமணியன் மற்றும் தாம்பரம், பல்லாவரம், அடையார் மிஞ்சி செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர் மற்றும் புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய செயலாளர் கோவிலாம்பாக்கம் ஜி.வெங்கடேசன், ஊராட்சி மன்ற தலைவர் சுஹாசினி ரங்கராஜன், மாவட்ட குழு உறுப்பினர் என். வேதகிரி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.இ.பாண்டியன், மாவட்ட பிரதிநிதி கே.குமார் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், மின்வாரிய அலுவலர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சிராப்பள்ளி அண்ணா விளையாட்டு மைதானத்தில் நேற்று (07.02.2024) பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் பெற்றோரை கொண்டாடுவோம் எனும் திருச்சி மண்டல மாநாட்டில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி, தமிழ்நாடு அரசு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, ஒருங்கிணைத்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் திருமதி.மா.ஆர்த்தி, தொடக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்கம், இயக்குநர் முனைவர் சு.நாகராஜமுருகன், தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத் துணைத் தலைவர் வி.முத்துக்குமார் மற்றும் பள்ளிக்கல்வித்துறை உயர் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஏற்பாட்டில் திருச்சி கிழக்கு தொகுதியில் டி.வி.எஸ் டோல்கேட் பகுதியில் நிறுவப்பட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவச் சிலை மாநில இளைஞரணி செயலாளர் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாக கடந்த 25–01–24 தேதியன்று திறந்து வைக்கப்பட்டது, நேற்று திருச்சி வருகையின் போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்தநிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநகர கழகச் செயலாளர் மதிவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், கே.என்.சேகரன், துணை மேயர் திவ்யா, செந்தில் பகுதி கழகச் செயலாளர் மணிவேல் ஆகியோர் இருந்தனர்.

### ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான

# திருக்கோயில்களின் திருப்பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு மேற்கொண்டார்!

சென்னை, பிப். 8 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று (07.02.2024) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான திருக்கோயில்களை புனரமைக்கும் வகையில் ரூ.304.84 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் 197 திருக்கோயில்களின் திருப்பணிகளில் 16 திருக்கோயில்களில் பணிகள் முடிவுற்று குடமுழுக்கு நிறைவு பெற்றுள்ள நிலையில் இதர தொன்மையான திருக்கோயில்களில் நடைபெற்று வரும் திருப்பணிகளின் பணி முன்னேற்றம் குறித்தும், சட்டமன்ற அறிவிப்புகளின்படி புரசைவாக்கம், கங்காதீஸ்வரர் திருக்கோயில், நங்கநல்லூர், ஆஞ்சநேயர் திருக்கோயில், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயில் ஆகிய திருக் கோயில்களில் புதிதாக உருவாக்கப்பட்டு வரும் தங்கத்தேர் திருப்பணிகள், இருக்கன்குடி, மாரியம்மன் திருக்கோயில், திருக்கருகாவூர், கர்ப்பரட்சாம்பிகை திருக்கோயில், திருநெல்வேலி, நெல்லையப்பர் திருக்கோயில், சென்னை, காளி காம்பாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் புதிதாக உருவாக்கப்பட்டு வரும் வெள்ளித் தேர் திருப்பணிகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், தமிழ்க் கடவுள் முருகப் பெருமானின் அறுபடை வீடுகளுக்கு மூத்த குடிமக்களை கட்டணமில்லாமல் அழைத்துச் செல்லும் வகையில் தொடங்கப்பட்டுள்ள அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் இரண்டாம் கட்டப் பயணத்தை 200 பக்தர்களுடன் பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலிருந்து தொடங்குவதற்கு மேற்கொள் ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்தும், காசி - இராமேசுவரம் ஆன்மிகப் பயணத்தின் அடுத்தக்கட்ட பயணங்களுக்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

கடந்தாண்டு மகா சிவராத்திரி பெருவிழாவானது மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை, அருணாச்சலேசுவரர் திருக்கோயில், தஞ்சாவூர், பிரகதீசுவரர் திருக்கோயில், திருநெல்வேலி, நெல்லையப்பர் திருக்கோயில், பேரூர், பட்டீசுவரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் சிறப்பாக நடத்தப்பட்டதை போல சட்டமன்ற அறிவிப்பின்படி இந்தாண்டு கூடுதலாக மதுரை, மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவானைக்காவல், ஜம்புகேஸ்வரர் திருக்கோயில் ஆகிய 2 திருக்கோயில்களையும் சேர்த்து 7 திருக்கோயில்களில் வருகின்ற மார்ச் 8ந் தேதி மகா சிவராத்திரி பெருவிழாவினை ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் வெகு விமரிசையாக கொண்டாடிட எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

நிறைவாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில், சட்டமன்ற அறிவிப்புகளின்படி இந்து சமய அறநிலையத்துறையில் நடைபெற்று வரும் அனைத்துப் பணிகளையும், குறிப்பாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான திருக்கோயில் திருப்பணிகளை குறித்த காலத்திற்குள் விரைந்து முடித்திட மண்டல இணை ஆணையர்களும், பொறியாளர்களும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும், ஆன்மிகப் பயணங்கள் மற்றும் மகா சிவராத்திரி பெருவிழாக்களை இறையன்பர்கள் மகிழ்ச்சியுறும் வகையில் சிறந்த முறையில் ஏற்பாடு செய்து நடத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் திருமதி ந.திருமகள், சி.ஹரிப்ரியா, தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி, இணை ஆணையர்கள் ச.இலட்சுமணன், பொ.ஜெயராமன், கோ.செ. மங்கையர்க்கரசி, இரா. வான்மதி, கி.ரேணுகாதேவி, ஐ.முல்லை, மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி கோ.விஜயா, திரு.த.குமரேசன், திருமதி சு.ஜானகி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சமூகப் பதற்றத்தை உருவாக்குவதற்கே

# ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்ட பொது சிவில் சட்டம் !

## ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் கருத்து!

சென்னை,பிப்.8-

ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்ட சமூகப் பதற்றத்தை உருவாக்கும் பொது சிவில் சட்டத்தின் மூலம் ஒற்றைப் பண்பாட்டு ஆதிக்க நடைமுறையைத் திணிப்பதால் அதனை நாட்டு மக்கள் முறியடித்திட வேண்டும் என 7.2.2024 அன்று தீக்கதிர் நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மூன்று முக்கிய பிரகடனங்களான ராமர் கோவில், 370ஆவது பிரிவு நீக்கம், பொது சிவில் சட்டம் என்கிற அனைத்தையும் நிறைவேற்றிவிட்டதாக பாஜக பரிவாரங்கள் கொக்கரித்துக் கொண்டிருக்கின் றன. நாடாளுமன்றத்தில் பொது சிவில் சட்டம் நிறை வேற்றப்பட்ட போதே நாடு முழுவதும் எதிர்ப்பு எழுந்தது. ஆயினும் மாநில சட்டமன்றங் களில் ஒப்புதல் பெற்றால்தான் அமலாக்க முடியும் என்ற நிலையில், உத்தரகண்ட் முதல்வர் புஷ்கர்தாமி தற்போது பொது சிவில் சட்ட மசோதாவை அறிமுகம் செய்திருக்கிறார்.



பல்வேறு மதங்கள், இனங்கள், மொழிகள் உள்ள இந்திய துணைக் கண்டத்தில் வாழும் மக்கள் பல வகையான வாழ்வியல் முறைகளை கடைப்பிடித்து வருகின்றனர். அவற்றை பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் ஒரே கலாச்சாரம் என்ற கூட்டுக்குள் அடைக்கச் செய்யும் முயற்சியே இந்த பொது சிவில் சட்டம். பொதுவாக மக்களின் திருமண, வழிபாடு மற்றும் இதர வாழ்வியல் நடவடிக்கைகள் பல்வேறு மதத்தினருக்கும் மாநில மக்களுக்கும் வெவ்வேறாக இருக்கும் சூழலில் இந்த பொது சிவில் சட்டம் எத்தகைய திருமண முறையை அங்கீகரிக்கும்? புரோகித திருமண முறையை பிராமணர்கள் பின்பற்றுகிறார்கள். ஆனால் இந்து மதத்தில் உள்ள மற்ற சாதியினர் தங்களுக்கே உரிய பல்வேறு முறைகளில் திருமணம் செய்கின்றனர்.

இது தவிர சுயமரியாதை திருமணம், சீர்திருத்த திருமணம் என்ற வகையில் சிறப்புத் திருமண முறைகளும் உள்ளன. இந்த சிவில் சட்டம் உண் மையில் மதச் சிறுபான்மையினருக்கு எதிரான தாக கருதி கொண்டு வரப்பட்டாலும் உண்மையில் இந்துக்களின் பல்வேறு பிரிவினருக்கு எதி ரானதாகவும் அமையும். அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகளில் கூட பொது சிவில் சட்டம் அமலில் இல்லை. இந்தி யாவில் ஒரே பொது சிவில் சட்டம் என்பது இந்துத் துவாவினரின் ஒரே மத, ஒரே கலாச்சார வரிசை யில் நாட்டு மக்களின் பன்முக கலாச்சாரத்தை, வாழ்வியல் நடைமுறையை ஒழித்துக் கட்டுவ தற்கும் ஒற்றைப் பண்பாட்டு ஆதிக்க நடைமுறையை திணிப்பதற்குமே இந்த சட்டம்.

உண்மையில் 1954ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட சிறப்பு திருமணச் சட்டம் மற்றும் இந்திய வாரிசு சட்டம் 1925 ஆகியவற்றை இணைத்து ஒரு புதிய சட்டமாக இந்திய சிவில் சட்டம் என்று கொண்டு வரலாம். ஆனால் இவர்களின் நோக்கம் பொதுவான சட்டம் கொண்டு வருவதல்ல. இஸ்லாமிய, கிறிஸ்தவ சமூகத்தவரை பழிவாங்கவும் அதன் மூலம் சமூகப் பதற்றத்தை உருவாக்கவுமே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதை நாட்டு மக்கள் முறியடித்திட வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வலைதளம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

சென்னை, பிப். 8-

கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையின அந்தஸ்து வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) மூலம் உருவாக்கப்பட்ட வலைத்தளத்தை (Web Portal) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் நேற்று (07.02.2024) தொடங்கி வைத்தார்.

தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் நேற்று (07.02.2024) தலைமைச் செயலகத்தில் கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையின சான்றிதழை வழங்குவதற்கு இணைய வழியில் விண்ணப்பித்து பெறுவதற்காக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) மூலம் உருவாக்கப்பட்ட வலைத்தளத்தை (Web Portal) தொடங்கி வைத்தார்.

தமிழ் நாட்டின் முன்னாள் முதல்வர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் சிறுபான்மையின மக்களின் சமூகம், கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்திடவும், சிறுபான்மையினரின் அரசியலமைப்பு மற்றும் சட்ட உரிமைகளை பாதுகாப்பதற்கும் இச்சமூக மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்திடவும், சிறுபான்மை இனத்தவரை மேம்படுத்துவதற்கும் 2007 ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல இயக்ககம் ஏற்படுத்தப்பட்டு அவ்வியக்ககத்தின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் சிறுபான்மை இனத்தவருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

முன்னதாக, கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை அந்தஸ்து அந்தந்த துறைகளால் வழங்கப்பட்டு வந்தது. அதனை எளிதாக்கும் வகையில் அரசாணை (நிலை) எண்.109, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிந1)த்துறை, நாள் 29.12.2022ல் இத்துறையின் மூலம் கல்வி நிறுவனங் களுக்கு சிறுபான்மையின அந்தஸ்து வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

09.01.2024 அன்று நடைபெற்ற சிறுபான்மையினர் நலனுக்கான ஆலோசனை கூட்டத்தின்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையின அந்தஸ்து சான்றிதழை இணைய வழியில் விண்ணப்பித்து பெறுவதற்கான Web Portal இந்த மாதத்திற்குள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் .சா.பீட்டர் அல்போன்ஸ், பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர் செயலர் (பொ) திருவா. சம்பத், சட்டமன்ற உறுப்பினர் Dr. S. இனிகோ இருதயராஜ், திருதாவூத் மியாகான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பு பட்டா வழங்கும் நிகழ்ச்சிகளில்

# 5,257 பயனாளிகளுக்கு ரூ.75.37 கோடி மதிப்பீட்டில் பட்டாக்கள்!

## 30 ஆண்டுகளாக கிடைக்காத பட்டா கிடைத்த மகிழ்ச்சியில் முதலமைச்சருக்கு பொதுமக்கள் பாராட்டு!



காஞ்சிபுரம், பிப்.8-

பல ஆண்டுகளாக அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகளைக் கட்டி குடியிருப்போருக்கு ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டத்தின் கீழ், வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் சில கிராமக் கணக்குகளில் பதிவு செய்யப்படாமல் விடு பட்டுள்ள விவரங்கள் அரசின் கவனத்திற்கு அண்மையில் தெரியவந்துள்ளது. இவற்றின் மீது உரிய திருத்தங்கள் செய்து பட்டா வழங்கிடுமாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருந்த 5,288 பயனாளிகளுக்கு பட்டா வழங்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதில் முதல் கட்டமாக காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் கடந்த 28.11.2023 அன்று 3,008 பயனாளிகளுக்கு 56 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பிலான வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக உத்தரமேரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த 2,249 பயனாளிகளுக்கு 18 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பிலான வீட்டு மனைப் பட்டாக்கள் 30.1. 2024 அன்று வழங்கப்பட்டd. ஆக மொத்தம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு பட்டா வழங்கும் நிகழ்ச்சிகளில் 75 கோடியே 37 இலட்சம் செலவில் 5,257 பயனாளிகளுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு புதிய சாதனை புரிந்துள்ளது கழக அரசு.

30 ஆண்டுகளுக்கு மேலாக, தங்களுக்கு பட்டா கிடைக்காமல் வீடுகள் கட்டவும், வங்கிகளில் கடன் பெறவும் முடியாமல் இன்னல்களை அனுபவித்து வந்த பொதுமக்கள், முதல்வர் அவர்கள் பிறப்பித்த உத்தரவின்படி, பட்டா கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சி அடைவதுடன், பட்டா வழங்க ஆவன செய்த முதலமைச்சர் அவர்களை நன்றியுடன் போற்றி வருகிறார்கள். மேலும் பட்டா வழங்கிட சீரிய முயற்சி மேற்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகனுக்கும் பயனாளிகள் நன்றி தெரிவித்தனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளை முன்னிட்டு, மதுரவாயல் தெற்கு பகுதி 149வது வட்டத்தில், வளசரவாக்கம், ஆழ்வார்திருநகரில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மாமன்ற உறுப்பினர்கள் செல்வி ரமேஷ், பாரதி அண்ணாவேலன், பகுதி துணைச் செயலாளர் வே.மதியழகன், வட்டச் செயலாளர் த.ரமேஷ், சுரேஷ்பாபு, எம்.கிருஷ்ணமூர்த்தி, கமலநாதன், எம்.குமார், குப்பு, துரைசாமி, மோகன்ராஜ், எம்.முரளி, எஸ்.ஆறுமுகம், பி.சேகர், அரசு, எம்.சுரேஸ்மோசஸ், சி.பாலமுருகன், ஆர்.அண்ணாமலை, என்.ராஜா, பாரதி, எம்.அமுல்ராஜ், எஸ்.குகாகார்த்திக், பழனியப்பன், பி.பொன்முத்துரமேஷ், கே.ஜெகதீசன், எம்.கிருஷ்ணன், பி.கிருஷ்ணன், ஏ.கணேசன், சம்பத்,டி.மோகனவேல், வி.ஹேமகுமார், சிவராமகிருஷ்ணன், ராமஜெயம், சந்திரகுமார், கார்த்திகேயன், ஜெயகுமார் பிரபு, திலகா மற்றும் கழக முன்னோடிகள், ஆகியோர் அண்ணா சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பொறியியல் பிரிவு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)**

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)11/2024 நாள் : 05.02.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.17,24,26,51,52, 53,54,55,56,57,58க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 39 பணி | 21.02.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 22.02.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 076/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 06.02.2024




நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், கக்குச்சி ஊராட்சிக்குட்பட்ட அஜ்ஜுர் பகுதியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.17.97 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மைய கட்டடத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) .கௌசிக் உதகை ஊராட்சி ஒன்றியத்தலைவர் மாயன் (எ) மாதன் உட்பட பலர் உள்ளனர்.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (06.02.2024) திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு வட்டம், வானாபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் (கலசபாக்கம்), மாநில தடகள சங்க துணை தலைவர் மரு. எ.வ.வே. கம்பன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை, அண்ணா சாலை, செங்கல்வராயன் நாயக்கர் மாளிகையில், நேற்று முன்தினம் (06.02.2024) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் தலைமையில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன டிஜிட்டல் சிக்னல் விநியோகஸ்தர்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி ஆபரேட்டர் சங்கத்தினர், தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர் மற்றும் தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ், தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர் மற்றும் தொழிலாளர் நலவாரிய தலைவர் ஜோ.ஜீவா மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### 4 SC/ST Start Up நிறுவனங்களுக்கு

# ரூ. 9.05 கோடி பங்கு முதலீட்டு மானிய நிதி!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்!

சென்னை, பிப். 8-

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் நேற்று (7.2.2024) சென்னை CMRL-ல் நடைபெற்ற Start Up - TN நிறுவனத்தின் ‘செய்க புதுமை’ நிகழ்ச்சியில் 4 SC/ST Start Up நிறுவனங் களுக்கு ஆதார நிதி திட்டத்தின் கீழ் ரூ. 9 கோடியே 5 லட்சத்தை பங்கு முதலீட்டு மானிய நிதியாக வழங்கி பேசியதாவது : -

Start Up- TN மூலமாக செய்க புதுமை என்னும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, StartUp நிறுவனங்களுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கும் திட்டம் வணிக அடையாளத்தை நிலை நிறுத்துவதற்காக பிராண்டிங் பாடத்திட்டம், புத்தாக்க சவால் இணையத் தளம் மகளிர் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை அறிமுகப்படுத்தும் லாஞ்ச் பேட், SC-ST நிறுவனங்களுக்கான மானிய பங்கு முதலீட்டு நிதி வழங்குதல் போன்ற பல்வேறு பயனுள்ள திட்டங்கள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மனித வள மேலாண்மை, நிதி, சட்ட ஆலோசனை தகவல் தொழில்நுட்பம், ஊடகம் - விளம்பரம் சார்ந்த சேவைகளை புத்தொழில் நிறுவனங்கள் சலுகை விலையில் பெற்று பயனடைய இந்த ஸ்மார்ட் கார்டு திட்டம் இன்று அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. பிராண்டிங் பாடத்திட்டம் புதிதாக தொழில் தொடங்கும் Start Up நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களையும், தயாரிப்புகளையும் பொது மக்களிடம் விளம்பரப்படுத்திட பிராண்டிங் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. புத்தாக்க சவால் இணையதளம் பெரும் நிறுவனங்கள், அரசுத் துறைகள் தங்களின் பிரச்சனைகளுக்கு Start Up நிறுவனங்கள் மூலமாக தீர்வு காண புத்தாக்க சவால் இணையதளம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. லாஞ்ச் பேட் லாஞ்ச் பேட் நிகழ்ச்சியின் மூலம் செயற்கை நுண்ணறிவு, ஊடகம், மென்பொருள் தொழில்நுட்பம் போன்ற 9 துறைகளில் இயங்கும் 20 மகளிர் Start Up நிறுவனங்களை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. 4 SC-ST Start Up நிறுவனங்களுக்கு ரூ. 9 கோடியே 5 லட்சம் மானிய பங்கு முதலீட்டு நிதி வழங்கப்பட்டு உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள Start Up நிறுவனங்களுக்கு தகுந்த சூழலை அமைத்து, தொழில் துறையில், உலகின் தலைசிறந்த இடமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கில், முதல்வர் அவர்கள் Start Up - TN இயக்கத்தின் மூலம் இதுபோன்ற பல்வேறு புதுமையான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.

தமிழ்நாட்டில் 2021 - மார்ச் வரை சுமார் 2,300 Start up நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், முதல்வர் அவர்களின் சீரிய முயற்சியால் தற்போது இந்த எண்ணிக்கை 7,600 க்கும் மேல் உயர்ந்துள்ளது. இதில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்களில் பெண்கள் நிறுவனர்களாக உள்ளனர் என்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. Start up தர வரிசைப் பட்டியலில் இந்திய அளவில் கடைசி தர வரிசையில் இருந்த தமிழ்நாடு - கழக அரசு பொறுப்பேற்ற பின் கடைசி இடத்தில் இருந்து முன்னேறி 2021-ல் 3-ஆம் இடமான - லீடர் விருதினை பெற்றது தற்போது, ஒன்றிய அரசு வெளியிட்ட 2022-ஆம் ஆண்டிற்கான தர வரிசை பட்டியலில் - Start up -TN நிறுவனம் ஆதார நிதி வழங்குதல், புத்தாக்க பற்று சீட்டு திட்டம், பசுமை தொழில்நுட்பம் மகளிர் Start up கிராமப்புற வாழ்வாதார மேம்பாடு ஆகிய திட்டங்களில் சிறப்பாக செயல்பட்டமைக்காக, இந்திய அளவில் முதல் இடம் பிடித்து சிறந்த செயற்பாட்டாளர் என்ற விருதினை பெற்றுள்ளது.

கழக அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் Start-Up நிறுவனங்களை உருவாக்க, புத்தொழில் முனைவோர்களுக்கு ஆதார நிதி வழங்கும் (TANSEED) திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் ஆண்டு50 புத்தொழில் நிறுவனங்களுக்கு தலா ரூ.10 லட்சம் வழங்க ரூ. 5 கோடி நிதியும், 2022-2023 ஆண்டு இந்த நிதியை, முதல்வர் அவர்கள் மேலும் உயர்த்தி 100 புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 10 கோடி நிதி ஒதுக்கி வழங்கப்பட்டு வருகிறது.

### பசுமை தொழில் நுட்பம்!

ஆதார நிதியானது, பசுமை தொழில்நுட்பம் மகளிர் Start Up நிறுவனங்கள், தொழிலாளர் கள் நகர்புறங்களுக்கு புலம் பெயர்வதை தடுக்க உதவும் Start-Up நிறுவனங்களுக்கு, ரூ. 10 லட்சத்திலிருந்து ரூ. 15 லட்சமாக உயர்த்தி முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதுவரை 132 Start-Up நிறுவனங்களுக்கு, ரூ.13 கோடியே 95 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தின் அனைத்து பிரிவுகளில் இருந்தும், தொழில்முனைவோர்கள் உருவாக வேண்டும் என்ற நல்ல நோக்கில், முதல்வர் அவர்கள்2022-2023 நிதி ஆண்டில் SC/ ST Start-Up நிறுவனங்களுக்கு, ரூ. 30 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்தார்கள். இந்த நிதி, நடப்பு ஆண்டு, 2023-2024 ல், ரூ. 50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை, இன்று வழங்கப்பட்ட நிதி உதவியும் சேர்த்து 30 SC/ ST தொழில்முனைவோர்க்கு ரூ. 43 கோடியே 65 லட்சம் நிதி உதவியை பங்கு முதலீடாக அரசு வழங்கியுள்ளது. ஆக மொத்தம், கழக அரசு பொறுப்பேற்று இதுவரை 162 Start-Up நிறுவனங்களுக்கு, ரூ. 57 கோடியே 60 லட்சம் கழக அரசு நிதியுதவி வழங்கியுள்ளது என பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

Start-Up நிறுவனங்களின் தயாரிப்புகளை அரசு துறை பொது துறை நிறுவனங்கள் ஒப்பந்த புள்ளி கோராமல்,ரூ. 50 லட்சம் வரைநேரடி கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டு, கல்வி, வேளாண்மை, நீர் மேலாண்மை ஆகிய துறைகள் ரூ. 36 லட்சம் மதிப்பில் Start-Up நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். பெரு நகரங்களில் மட்டும் இல்லாமல், தமிழ்நாடு முழுவதும் Start Up நிறுவனங்களை வளர்த்தெடுக்கவும், அவர்களுக்கு உரிய லோசனைகள் உதவிகள் வழங்கவும், 2022-23 ம் ஆண்டு மதுரை ஈரோடு திருநெல்வேலி ஆகிய இடங்களில் வட்டார புத்தொழில் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டு 2023-24 ல் சேலம், ஓசூர், கடலூர் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் புத்தொழில் மையங்கள் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

### இளைஞர்களுக்கு விழிப்புணர்வு!

இளம் தொழில்முனைவோர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தொழில் தொடங்குவதற்கான ஆர்வத்தை கொண்டு வரவும், Start Up - TN இயக்கமானது பல புதிய முன்னெடுப்புகளை செய்து வருகிறது. கடந்த 2 ஆண்டுகளில் தடை அதை உடை, ஆடுகளம், ஹேக்கத்தான் போட்டிகள் என 415 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு உள்ளது. மாணவர்கள் - இளைஞர்கள் படிக்கும் காலத்திலேயே தொழில் முனைவோர்களாக உருவாக பள்ளி - கல்லூரிகளில் தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் ஆட்சி பொறுப் பேற்று, இது வரை 8 லட்சத்து 98 ஆயிரத்து 812 இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன். கடந்த 2 1/2 ஆண்டுகளில், 266 புதிய கண்டுப்பிடிப்பாளர்களுக்கு ரூ. 7 கோடியே 39 லட்சம் நிதி உதவி வழங்கி ஊக்கப்படுத்தி உள்ளது.

மேலும், கல்லூரி மாணவர்களைஇளம் தொழில்முனைவோர்களாக வளர்த்தெடுக்க 105 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் தொழில் வளர் காப்பகங்கள் - Incubation Centres அமைக்கப்பட்டு உள்ளது. இதில் 29 இன்குபேஷன் சென்ட்டர்களை ரூ. 19 கோடியே 84 லட்சம் மதிப்பீட்டில், புதிய இயந்திரங்கள் நிறுவப்பட்டு, பரிசோதனை கூடங்கள் மேம்படுத்தப்பட்டு உள்ளன. அரசின் இன்குபேஷன் சென்ட்டர்களை பயன்படுத்தி 89 மாணவர்கள் மற்றும்தொழில்முனைவோர்கள் புதிய கண்டுபிடிப்புகளை யாரித்து பலன் அடைந்துள்ளனர். தொழில் துறை, MSME துறையுடன், Start Up நிறுவனங் களும் இணைந்து செயலாற்றி, முதல்வரின் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் இலக்கினை அடைவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் MSME அரசு செயலர் திருமதி.அர்ச்சனா பட்நாயக், I.A.S., கிரியா நிறுவன தலைவர் பிரவீன் சேகர், Start-Up TN - CEO சிவராஜா ராமநாதன் SC - ST தொழில்முனைவோர்கள், மகளிர் தொழில்முனைவோர்கள், புத்தொழில் முனைவோர்கள் கலந்துக கொண்டனர்.

### நிலக்கரி நிறுவனச் சுரங்கங்களில்

# கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, பிப்.8-

இந்தியாவில் நிலக்கரி உற்பத்தி குறித்தும் என்.எல்.சி.எல். உட்பட பல்வேறு நிலக்கரி நிறுவன சுரங்கங்களில் கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்த மின் வாகனங்களை உபயோகிக்கும் திட்டம் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அது வருமாறு :-

இந்தியாவில் கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்த நிலக்கரி உற்பத்தி சரிந்துள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள்?

கோல் இந்தியா லிமிடெட் (CIL) மற்றும் NLCIL ஆகியவை டீசல் நுகர்வுக்கான மிக அதிக எண்ணிக்கையில் உள்ள ஹெவி எர்த் மூவிங் மெஷின்களின் திரவ இயற்கை எரிவாயு (எல் என்ஜி) மூலம் மாற்ற முடிவு செய்துள்ளனவா?

அப்படியானால், அதன் விவரங்கள்?

இது தொடர்பாக கெயில் நிறுவனத்துடன் அரசு ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள்?

CIL மற்றும் NLCIL ஆகியவை அதன் அனைத்து நிலக்கரி உற்பத்தி நிறுவனங்களிலும் சுரங்க நடவடிக்கைகளில் கரியமில வாயு வெளியேற்றத்தை ஈடுகட்ட தொடர் நடவடிக்கைகளை எடுத்துள்ளனவா?

அப்படியானால், அதன் விவரங்கள்?

CIL மற்றும் NLCIL ஆகியவை அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அதன் அனைத்து சுரங்கப் பகுதிகளிலும் 1500 மின் - வாகனங்களைச் சேர்க்க திட்டமிட்டுள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இதற்கு ஒன்றிய அரசின் நாடாளுமன்ற விவகாரங்கள், நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் அமைச்சர் பிரல்ஹத் ஜோஷி எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு :-

கடந்த மூன்று ஆண்டுகளில் நிலக்கரி உற்பத்தி விவரங்கள் பின்வருமாறு :-

2020-21 ஆண்டு நிலக்கரி உற்பத்தி 716.08 மில்லியன் டன்கள்

2021-22 ஆண்டு நிலக்கரி உற்பத்தி 778.21 மில்லியன் டன்கள்

2022-23 ஆண்டு நிலக்கரி உற்பத்தி 893.19 மில்லியன் டன்கள்

கோல் இந்தியா லிமிடெட் (CIL) நிறுவனம், தற்போதுள்ள டீசல் டம்பர்களில் இரட்டை எரிபொருள் டீசல் - திரவ இயற்கை எரிவாயு (LNG) செயல்பாட்டை தொழில்நுட்ப - பொருளாதாரத்திற்கான முன்னோடித் திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்துவதற்கான முயற்சியை எடுத்துள்ளது. கார்பன் உமிழ்வைக் குறைப்பதில் விளைவு உட்பட சாத்தியக்கூறு ஆய்வு. தற்போதுள்ள இரண்டு டீசலில் இயங்கும் BEML தயாரிப்பில் எல்என்ஜி கருவியை மீண்டும் பொருத்தி இரட்டை எரிபொருள் (டீசல் மற்றும் எல்என்ஜி) செயல்பாட்டில் ஒடிசாவின் மகாநதி கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட்டின் லக்கன்பூர் ஓபன் காஸ்ட் திட்டத்தில் (OCP) 100T டம்பர்கள் பைலட் திட்டத்தை நடத்துவதற்காக இந்திய எரிவாயு ஆணையம் (கெயில்) மற்றும் பாரத் எர்த் மூவர்ஸ் லிமிடெட் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

NLCIL இல், லிக்னைட் மற்றும் அதிக பாரம் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் முக்கிய சுரங்க இயந்திரங்கள் / உபகரணங்கள் மின்சாரத்தைப் பயன்படுத்தி இயக்கப்படுகின்றன. டோசர்கள், பைப்-லேயர்கள், பேக்-ஹோஸ், ரோடு கிரேடர்கள் போன்ற சில துணை சுரங்க ஹெவி எர்த் மூவிங் மெஷின்கள் (HEMM) மட்டுமே டீசலில் இயக்கப்படுகின்றன. தற்போதைய நிலவரப்படி, LNG எரிபொருளுக்கு மாற்றாக NLCIL இல் எந்த முன்மொழிவும் இல்லை.

கோல் இந்தியா லிமிடெட், கீழே பட்டியலிடப்பட்டுள்ள சுரங்க நடவடிக்கைகளில் கார்பன் உமிழ்வைக் குறைக்க பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளது.

முதல் மைல் இணைப்பு (FMC) திட்டங்களின் கீழ், இயந்திரமயமாக்கப்பட்ட கன்வேயர் பெல்ட் மற்றும் CHP/SILO மூலம் நிலக்கரி கொண்டு செல்லப்படுகிறது. FMC திட்டங்கள் சுற்றுச் சூழலுக்கு உகந்த நிலக்கரி போக்குவரத்து முறைகளாக உருவாகின்றன, இது தூசி உமிழ்வுகள், டிப்பர் டெயில் பைப் உமிழ்வுகள், டிப்பர் டீசல் நுகர்வு, கட்டண ஏற்றி உமிழ்வுகள், ரயில்வே சைடிங்ஸ் உமிழ்வுகள், சுற்றுப்புற ஒலி அளவுகள் மற்றும் டிப்பர் கார்பன் தடம் ஆகியவற்றைக் குறைக்க வழிவகுக்கிறது.

ii திறந்தவெளி சுரங்கங்களுக்கு மேற்பரப்பு சுரங்கத் தொழிலாளர்களையும், நிலத்தடி சுரங்கங்களுக்கு தொடர்ச்சியான சுரங்கத் தொழிலாளர்களையும் அனுப்புதல்.

iii ஒவ்வொரு ஆண்டும் மரம் நடும் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

iv. எல்.இ.டி. விளக்குகள், ஆற்றல் திறன் கொண்ட ஏசிகள், ஆற்றல் திறன் கொண்ட பம்புகள் மற்றும் மின்விசிறிகள், பசுமை கட்டடங்கள், மின்தேக்கி வங்கிகள் போன்ற பல்வேறு ஆற்றல் பாதுகாப்பு மற்றும் ஆற்றல் திறன் நடவடிக்கைகள்.

v. மின் வாகனங்களை அதன் அனைத்து துணை நிறுவனங்களிலும் பயன்படுத்துதல்.

சுரங்க நடவடிக்கைகளில் கார்பன் வெளியேற்றத்தை ஈடுகட்ட NLCIL எடுத்த நடவடிக்கைகள் பின்வருமாறு :-

புதிய உபகரணங்களுடன் உதவி சேவை உபகரணங்களை சரியான நேரத்தில் மாற்றுதல்.

ii கார்பன் உமிழ்வைக் குறைக்கும் உபகரணங்களுக்கு கடுமையான பராமரிப்பு அட்டவணைகள் பின்பற்றப்படுகின்றன.

iii லிக்னைட் அகழ்வாராய்ச்சிக்கு பயன்படுத்தப்படும் முக்கிய இயந்திரங்கள் / உபகரணங்கள் மின்சாரத்தைப் பயன்படுத்தி இயக்கப்படுகின்றன.

iv. துணை டீசல் இயக்கப்படும் சுரங்க உபகரணங்களின் பயன்பாட்டைக் குறைக்கும் வகையில் சுரங்க நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

v. கார்பனை உமிழ்வு நடுநிலையாக்க உரிமை கோரப்பட்ட சுரங்கப் பகுதிகளில் பெருமளவில் மரங்களை வளர்ப்பது மற்றும் காடு வளர்ப்பு மேற்கொள்வது

vi. காடு வளர்ப்பு / பசுமை வழிச்சாலை பராமரிக்கப்பட்டு கார்பன் வெளியேற்றத்தை சமாளிக்க மேம்படுத்தப்பட்டுள்ளது.

கோல் இந்தியா லிமிடெட் பல்வேறு சுரங்கங்கள், பகுதிகள் மற்றும் துணைத் தலைமையகங்களில் மின்சார வாகனங்களை (இ-வாகனங்கள்) வாங்குதல் / வாடகைக்கு அமர்த்துதல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. கோல் இந்தியா லிமிடெட்டில் தற்போதைய மின் வாகனங்களின் எண்ணிக்கை 178 ஆகும், மேலும் தற்போதுள்ள போக்குவரத்து ஒப்பந்தங்களின் காலம் மற்றும் துணை நிறுவனங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, இலக்கு பின்வருமாறு :-

2023-24ல் 380 மின் வாகனங்களும்

2024-25ல் 143 மின் வாகனங்களும்

2025-26ல் 158 மின் வாகனங்களும் ஆக மொத்தம் 681மின் வாகனங்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

அதே நேரம் என்.எல்.சி.ஐ.எல் அதன் சுரங்கப் பகுதிகளில் மின் வாகனங்களைச் சேர்க்கத் திட்டமிடவில்லை.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா.பொ. வேதாசலம்

### பிப்ரவரி 8 (1982)



தந்தை பெரியார் கொள்கையால் ஈர்க்கப்பட்டு திராவிடர் கழக உறுப்பினரானார். பின்னர் கழகம் துவங்கியபோது, அந்தநாள் முதல் இறுதி வரை கழக உறுப்பினராக விளங்கினார்.

மாதவரம் நகரச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

மூலக்கடை, மாதவரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் கழகம் வளர்த்தவர். மிசா சிறைவாசம் உட்பட பத்து முறை சிறைக்கு சென்றவர்

“சிரித்துக்கொண்டேயிருக்கும் முகம்! குள்ள உருவம்! எளிய தோற்றம்! நிமிர்ந்த நோக்கு! சின்னத் தேர் ஒன்று அசைந்து வருவது போன்ற அமைதியான நடை” என தலைவர் கலைஞர் அவர்கள் மாதவரம் வேதாசலம் மறைந்தபோது அந்தோ! மாதவரம் வேதா! என கலைஞர் கடிதத்தில் சிறப்பித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை கு. சுல்தான் மொய்தீன்

### பிப்ரவரி 8 (2009)



தி.மு.க. தலைமைப் பொதுக்குழு உறுப்பினராக நான்கு முறையும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

மூன்று முறை தஞ்சை நகர்மன்ற உறுப்பினராகவும், மூன்று முறை நகரமன்றத் துணைத் தலைவராகவும் தொடர்ந்து தூய பணியாற்றியதன் பலனாக 2001ஆம் ஆண்டு நகர் மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தஞ்சை மக்கள் போற்றும் வண்ணம் பணியாற்றியவர்.

2001ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் இவரது மனிதநேயமிக்க தொண்டினைப் பாராட்டி முதல்வர் கலைஞர் அவர்கள் “கோட்டை அமீர்” விருது வழங்கினார்.

தலைமைக் கழகச் சார்பில் 2004ஆம் ஆண்டு “கலைஞர் விருதி’னை தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.





ஸ்பெயினிலிருந்து சென்னை திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை விமான நிலையத்திலிருந்து இல்லம் வரை வழிநெடுக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்ட காட்சி!



தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு தாயகம் திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (7.2.2024) சென்னை விமான நிலையத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### பாவாணரின் தமிழ்த் தொண்டைப் போற்றி


# தமிழ் காக்கும் கடமையில் உறுதியோடு நிற்க உரம் பெறுவோம்!

## தேவநேயப் பாவாணர் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, பிப். 8-**

**பாவாணரின் தமிழ்த் தொண்டைப் போற்றி, தமிழ் காக்கும் கடமையில் உறுதியோடு நிற்க உரம் பெறுவோம் என்று தேவநேய பாவாணர் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-




நாம் செல்லும் தமிழ்வழிப் பயணத்துக்கு ஊக்கமளித்திட்ட திராவிட மொழிநூல் ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் பிறந்தநாள் இன்று!

ஆழமான தமிழறிவும் அசைக்க முடியாத இன உணர்வும் கொண்ட தமிழ்ச்சீயம் பாவாணர் எனத் தலைவர் கலைஞர் அவரது புகழ் பாடினார்!

பாவாணரின் தமிழ்த்தொண்டைப் போற்றி, தமிழ் காக்கும் கடமையில் உறுதியோடு நிற்க உரம் பெறுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முரசொலி பாசறை

சென்னை 08.02.2024

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்.**



# 56 இடம் பொருள் கலைஞர்





# கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்!

## சென்னையின் தாகம் தீர்த்த சாதனை

*1996 அக்டோபர் 16-ஆம் தேதியிட்ட ‘தமிழரசு’ இதழ் வெளியிட்ட கட்டுரைகளில் ஒன்று இப்படி ஆரம்பிக்கிறது:*

*“சென்னை நகரில், தெருக் குழாய்ச் சண்டைக் காட்சிகள், திரைப்படங்களில்கூடக் காட்டுவதற்கு யோசிக்கப் போகிறார்கள். சென்னை நகருக்கு வருகிற விருந்தினர்கள் இனி, 3 நாட்களுக்கு மேலும் தங்கமுடியும்!”*

*படிக்கும்போதே விந்தையாக இருக்கிறது அல்லவா? சென்னைக்கு 90 களில் இப்படி ஒரு முகம் இருந்தது என்பது, இன்று வரலாறாகிவிட்ட தகவல். அதற்கு முக்கிய காரணம், கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்.*

### எல்லீஸ் யோசித்த திட்டம்

*உலகில் லண்டனுக்கு அடுத்து, மாநகராட்சி அமைந்தது சென்னையில்தான். அந்தச் சென்னை மாநகரத்துக்கென்று நிறையப் பெருமைக்குரிய விஷயங்கள் உண்டு. ஆனால், வெகுகாலம் குடிநீர்ப் பிரச்சினை இருந்து வந்தது.*

*1881-இல் சென்னை நகரம், சுமார் 5 இலட்சம் மக்கள்தொகையைக் கொண்டிருந்தது. அன்று நிலவிய குடிநீர்ப் பிரச்சினைக்கு, சென்னை மாகாணத்தின் பாசனத்துறை நிபுணராக இருந்த கர்னல் டபிள்யூ.எம்.எல்லீஸ் என்பவர், கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குத் திருப்பிவிடத் திட்டமிட்டார். ஆனால், பல்வேறு நிர்வாகச் சிக்கல்களால் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.*

*அதன் பிறகு, 1947-1953 காலகட்டத்தில், கிருஷ்ணா-பெண்ணாறு நதித் திட்டம் என்ற பெயரில், ஒரு புதிய திட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போது ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ‘கோஸ்லா ஆணையம்’, இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டு வரலாம் என்று பரிந்துரைத்தது.*

### முதல் குரல்... முதல் கடிதம்..!

*பிறகு 1961 வாக்கில், ஒன்றிய அரசின் ‘குல்காட்டி ஆணையத்திடம்’, விவசாயிகள் பாசனம் செய்யும் வகையில் 15 டி.எம்.சி. அளவு தமிழ்நாட்டுக்கு, குறிப்பாக சென்னைக்கு வேண்டும் என்று ஒரு வேண்டுகோளை தமிழ்நாடு அரசு விடுத்தது. அந்தக் கோரிக்கைக்காக ஒன்றிய அரசை தமிழ்நாடு வலியுறுத்திக்கொண்டிருந்த நிலையில், 1963 ஆம் ஆண்டு, ‘மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களும் தலா 5 டி.எம்.சி. அளவுக்குத் தண்ணீரைப் பிரித்து எடுத்துக்கொள்ள முன்வந்துள்ளன’ என்று மக்களவையில் தெரிவிக்கப்பட்டது.*

*ஆனால், அந்த முயற்சியும் கைவிடப்பட்ட நிலையில், 1969 ஏப்ரல் மாதம், கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினை நடுவர் மன்றத்துக்கு விடப்பட்டது. அந்த நடுவர் மன்றம், கிருஷ்ணா நதி தமிழ்நாட்டில் பாயவில்லை, என்ற ஒரு காரணத்தைச் சொல்லி தமிழ்நாட்டை அந்த நடுவர் மன்றக் குழுவில் சேர்க்கவில்லை. தொடர்ந்து, 1973-ஆம் ஆண்டு, ‘இந்தத் திட்டத்தில் உறுப்பினர்களாக இருந்த 3 மாநிலங்களும் சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் தர வேண்டும்’ என்று கூறியது. அந்த நேரத்தில், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் கொடுக்க வேண்டும்’ என்று அழுத்தம் திருத்தமாக முதல் குரலை எழுப்பியதுடன், இதுதொடர்பாக, முதல் கடிதத்தையும் ஒன்றிய அரசுக்கு எழுதினார்.*

*அதைத் தொடர்ந்து, 1976 ஆம் ஆண்டுப் பிப்ரவரியில் சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, மகாராஷ்டிரா, ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய முதல்வர்களின் முன்னிலையில் சென்னைக்கு கிருஷ்ணா நீர் வழங்குவது பற்றி அறிவித்தார். அதன் பின்னர் அந்த அறிவிப்பு இரண்டு மாதங்களில் சம்பந்தப்பட்ட மாநில முதல்வர்கள் கையொப்பமிட, ஓர் ஒப்பந்தமாக நிறைவேறியது.*

### வட்டியும் ‘இன்ட்ரஸ்ட்’டும்

*இந்நிலையில், 1983-இல் சென்னையில் ஏற்பட்ட வறட்சியைச் சமாளிக்க, அந்த ஆண்டு ஏப்ரல் 27 அன்று தமிழ்நாடு அரசும், ஆந்திரா அரசும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தின. அதுதான் தமிழ்நாட்டில், ‘கிருஷ்ணா நதிநீர்த் திட்டம்’ என்றும், ஆந்திராவில் ’தெலுங்கு கங்கைத் திட்டம்’ என்றும் அழைக்கப்படுகிறது. 1985 வரை, ஆந்திராவுக்கு 47 கோடி ரூபாயை தமிழ்நாடு வழங்கியபோதும், அந்தத் திட்டத்தில் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்படவில்லை.*

*பிறகு 1989-இல் கலைஞர் அரசு அமைந்தவுடன், அன்றைய ஆந்திர முதல்வர் என்.டி.ராமாராவை சந்தித்து, கலைஞர் பேச்சுவார்த்தை நடத்தினார். தொடர்ந்து 1990 ஜூலை வரை, மொத்தம் 60 கோடி ரூபாயை இந்தத் திட்டத்துக்காக ஆந்திர அரசிடம் வழங்கினார்.*

*அப்படியான ஒரு சந்திப்பின் போது, பத்திரிகையாளர்களிடையே கலைஞர் பேசும்போது, “அவர்கள் (அ.தி.மு.க) 3 ஆண்டு காலமாக எந்தப் பணமும் கொடுக்கவில்லை. இப்போது நாங்கள் 60 கோடி ரூபாய் மொத்தமாகக் கொடுக்கிறோம். 92-93 ஆம் ஆண்டிற்குள், திட்டமானது முடிவடையக் கூடிய விதத்தில் மீதித் தொகையும் தரப்படும். 3 ஆண்டுக்கான பாக்கியை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று என்.டி.ஆர். வற்புறுத்தாததற்குக் காரணம் அவருடைய பெருந்தன்மையாகும்” என்று சொன்னதும், பத்திரிகையாளர் ஒருவர், “பாக்கிப் பணம் ‘இன்ட்ரஸ்ட்’ (வட்டி) உடன் தரப்படுமா?” என்று கேட்க, அதற்கு கலைஞர், “இந்தத் திட்டம் மக்களின் ‘இன்ட்ரஸ்ட்’ (நன்மைக்காக) உடன் செய்யப்படுகிறது” என்றார்.*

*இந்நிலையில், 1991 கலைஞர் அரசு கலைக்கப்பட, அதற்குப் பிறகு வந்த அரசு எந்த நடவடிக்கையும் இதில் எடுக்கவில்லை. மீண்டும் 1996-இல் கலைஞர் அரசு அமைந்ததும், அன்றைய ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.*

*அதன் பலனாக, 1996 செப்டம்பர் 29 அன்று, ஆந்திரா எல்லையைக் கடந்து, தமிழ்நாட்டின் எல்லையான ஊத்துக்கோட்டை வட்டம், தாமரைக்குப்பம் கிராமத்துக்குக் கிருஷ்ணா நதி வந்தடைந்தது. சென்னையின் தாகம் தணிந்தது!*

**...வலம் வருவோம்**

### திராவிட கங்கைத் திட்டம்!

என்.டி.ஆர் உடனான பேச்சுவார்த்தை முடிந்து, அவருடன் கலைஞரும் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது, “இந்தத் தெலுங்கு கங்கைத் திட்டத்தில் கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரம், தமிழ்நாடு ஆகிய 4 மாநிலங்கள் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் இதற்குப் பெயர் தெலுங்கு கங்கைத் திட்டம் என்றிருந்தாலும், ‘திராவிட கங்கைத் திட்டம்’ என்பதே மிகவும் பொருத்தமானதாகும்” என்றார் கலைஞர்.

இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த, 2006-ஆம் ஆண்டு, ‘தெலுங்கு கங்கைத் திட்டத்தின் மூலம் கண்டலேறு அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும்’ என்று அன்றைய ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டிக்கு கடிதம் எழுதினார் கலைஞர். ஆனால், கண்டலேறு கால்வாய் பழுது பட்டிருந்தது. எனவே, ஆந்திர மாநிலப் பகுதியில் அதைச் சீரமைக்க, புட்டபர்த்தி சாய்பாபா நிதி உதவி வழங்கினார். அதற்காக 2007-இல் அவருக்குப் பாராட்டு விழா நடத்தினார் கலைஞர்.

### நம்பிக்கை பிறக்கிறது!

ஒவ்வொரு விளிம்புநிலை சமூகங்களுக்கும் பார்த்துப் பார்த்து இட ஒதுக்கீட்டைப் பரவலாக்கியவர் கலைஞர். மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான தனிப்பிரிவை உருவாக்கியது, அருந்ததியருக்கான உள் இட ஒதுக்கீடு, கொங்கு வேளாளர்களைப் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இணைத்தது, கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கியது என கலைஞர் படைத்த சாதனைகள் ஏராளம்.

தமிழ்நாட்டு மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு உரிமையை கலைஞர் நிலைநாட்டினார் என்றால், இப்போது கழகத் தலைவரோ அகில இந்தியாவுக்குமான இட ஒதுக்கீடு உரிமைகளை நிலைநாட்டியிருக்கிறார். மருத்துவ உயர்படிப்பில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான அகில இந்திய இட ஒதுக்கீட்டைச் சட்டப் போராட்டத்தால் சாத்தியப்படுத்தியவர் நமது தலைவர். நமது தலைவரால் 2019 நாடாளுமன்றத் தேர்தலிலேயே பிரதமர் வேட்பாளராக அடையாளங் காட்டப்பட்ட ராகுல் காந்தி அவர்கள், தமிழ்நாட்டின் இட ஒதுக்கீடு கொள்கைக்கு வலுசேர்க்கும் வகையில் பேசியிருப்பது நம்பிக்கை தருகிறது.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் - **‘இந்தியா கூட்டணி’** வெற்றிபெற்று ஆட்சி அமைத்தால், சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்றும், இட ஒதுக்கீடு உச்ச வரம்பு 50 சதவிகிதம் என்ற தடை தகர்க்கப்படும் என்றும் ராகுல் காந்தி உறுதியளித்திருக்கிறார். இதன் மூலம் மாநில மற்றும் ஒன்றிய அரசின் கல்வி, வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியல் மற்றும் பழங்குடி சமூகத்தினருக்கு அவரவர் எண்ணிக்கைக்கு ஏற்ப இட ஒதுக்கீடு வருங்காலத்தில் கிடைக்கும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

பெரியார் ‘சுயமரியாதை இயக்கம்’ கண்டு நூறாண்டுகள் நெருங்கிவரும் தருவாயில், ராகுல் காந்தி அளித்திருக்கும் நம்பிக்கை காலப் பொருத்தமானது. இட ஒதுக்கீட்டை அழிக்கத் துடிக்கும் பா.ஜ.க.வின் ஆட்சிக்கு வேட்டுவைக்கப் போவதும் கூட..!

### :ப்ளாஷ்பேக்



### ஓய்வில் சந்திப்பு!

1986-ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் இளைஞர் அணி நிகழ்வுகளில் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்கள் கலந்துகொண்டார். பிறகு, பொன்னமராவதி பயணியர் விடுதியில் ஓய்வெடுக்க வந்தார். அவரை சந்திக்க ‘சிறுகதை மன்னர்’ எஸ்.எஸ்.தென்னரசு, எங்களை அழைத்துச் சென்றார். அப்போதைய பொன்னமராவதி ஒன்றிய பெருந்தலைவர் ஆலவயல் சுப்பையா தலைமையில் நகர இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான், எனது நண்பர்களுடன் தளபதியை சந்தித்தபோது எடுத்துக் கொண்ட புகைப்படம் இது!



மீனாட்சி சுந்தரம்

**-சே.மீனாட்சி சுந்தரம்,**
**2-வது வார்டு செயலாளர்,**
**பொன்னமராவதி பேரூராட்சி,**
**புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

### கலைஞரை பேட்டி கண்ட பிராவ்தா!

**1966-ஆம் ஆண்டு கோபாலபுரம் இல்லத்தில் வைத்து, கலைஞர் கொடுத்த ஒரு பேட்டி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. சோவியத் ரஷ்யாவின் அதிகாரப்பூர்வ ஏடாக வெளிவந்த ‘பிராவ்தா’ ஆசிரியர் குழுவினர் நேரில் வந்து கலைஞரிடம் பேட்டி கண்டனர். சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் நீண்ட அப்பேட்டியில் சமதர்மம், மொழிக் கொள்கை குறித்தெல்லாம் சுவாரசியமான பதில்களை அளித்தார் கலைஞர். வரலாற்றில் தனித்துவமான நேர்காணல் அது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 382




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131